# தமிழ் மருத்துவ முறைகள்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

T. 24754

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 583

# தமிழ் மருத்துவ முறைகள்

தலைமைப் பதிப்பாசிரியர்

**மணி. மாறன்,** *எம்.ஏ.,(த), எம்.ஏ.,(வ).,பி.எல்.ஐ.எஸ்.,*

தமிழ்ப்பண்டிதர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

மற்றும்

தமிழ்ச் சுவடியியல் பயிற்சி மாணவர்கள்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

மற்றும்

**ஆய்வு மையம்,**

தஞ்சாவூர்.

2017] [விலை: ரூ. 100-00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | தமிழ் மருததுவமுறைகள் |
| பதிப்பாசிரியர் | : | மணி. மாறன், தமிழ்ப்பண்டிதர், மற்றும் தமிழ்ச் சுவடியியல் பயிற்சி மாணவர்கள் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 583 |
| ISBN | : | 978-93-85343-21-6 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2017 |
| தாள் | : | TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : | 21 X 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 164 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | லேமினேசன் அட்டை |
| பொருள் | : | மருத்துவம் |
| விலை | : | ரூ. 100/- |

# வெளியீட்டாளர் முகவுரை

உலகின் புகழ்மிக்க நூலகங்களுள் தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகமும் ஒன்றாகும். இந்நூலகம் பன்மொழிகளின் கலைக் கருவூலமாகத் திகழ்கின்றது. இதன் கண் செயல்படும் தமிழ்த்துறையில் 7,700க்கு மேற்பட்ட தலைப்புகளில் அமைந்த பனை ஓலைச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. மேலும் ஓலைச்சுவடிகளை பாதுகாத்து வருகின்ற பொதுமக்களிடமிருந்தும் சுவடிகளை நன்கொடைகளாகப் பெற்று நூலகத்தில் சேர்க்கப்படும் பணியும் நடைபெறுகிறது. அதனால் நாள்தோறும் சுவடிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வாறு நூலகத்தில் பாரம்பரியமாக இருக்கக்கூடிய சுவடிகளிலிருந்தும், புதிதாக வரப்பெற்ற சுவடிகளிலிருந்தும் நூலக மொழிப்பண்டிதர் மற்றும் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்களைக் கொண்டு புதிய நூல்கள் பதிப்பித்து வெளியிடும் பணியினையும் இந்நூலகம் செவ்வனே ஆற்றி வருகின்றது.

அவ்வகையில் தஞ்சையில் வசித்துவரும் திரு. டி. எஸ் மோகன் என்பவர் 2015ஆம் ஆண்டு இந்நூலகத்திற்கு தம் முன்னோர்கள் பயன்படுத்திய மருத்துவச் சுவடிகளை நன்கொடையாக வழங்கினார். அச்சுவடிகளில் இருந்து ஒரு சுவடியினை எடுத்துக்கொண்டு தமிழ் மருத்துவ முறைகள் எனும் தலைப்பில் புதிய நூல் வெளிவருகின்றது.

ஒவ்வோர் ஆண்டும் நூலகத்தில் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி மொழிகளில் அமைந்த சுவடியியல் பயிலரங்குகள் நடைபெற்று வருகின்றது அவ்வகையில் கடந்த ஆண்டு 08-07-2016 முதல் 28-07-2016 வரை நடைபெற்ற தமிழ்ச் சுவடியியல் பயிலரங்கில் பயிற்சி பெற்ற மாணவர்களைக் கொண்டு நூல் பதிப்பிக்கும் முயற்சியாக ஒவ்வொரு மாணாக்கருக்கும் ஒவ்வொரு ஏடுகள் வழங்கப்பட்டு அதிலுள்ள மருத்துவக் குறிப்புகளை எழுதச் செய்து அவைகளைத் தொகுத்து மாணவர்கள் எழுதியதை

சரிபார்த்து முகவுரை, மருத்துவ தாவரங்களின் விளக்கம், தாவரங்களின் படங்கள், சொல் அட்டவணை போன்றவைகளை சேர்த்து ஒரு முழுமையான நூலாக்கி, அதனை செம்பதிப்பாக வெளியிடும் பணியில் சிறப்பாக செயல்பட்ட நூலகத் தமிழ்ப்பண்டிதர் திரு. **மணி.மாறன்,** M.A.,(T),M.A.,(H), B.L.I.S., Dip.,in Sanskrit அவர்களுக்கும், இப்பதிப்புப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட தமிழ்ச் சுவடியியல் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவர தேவையான நிதி உதவி வழங்கிய அரசுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நூலக வெளியீடாக தமிழ் மருத்துவ முறைகள் என்ற நூல் வெளிவர துணை நின்ற முன்னாள் நூலக நிருவாக அலுவலர் திருமதி. **அ. பூங்கோதை,** M. A. அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் நூலக நிருவாக அலுவலர் **இரா.ஜெய்னுலாப்தீன்,** M. Sc., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M.A.,B.Lit..M.L.I.S.Ph.D அவர்களுக்கும், கணினியில் அச்சிட்டளித்த நூலகப் பணியாளர்களுக்கும், அச்சகப்பிரிவு பணியாளர்களுக்கும், ஏனையோருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எளிய முறையிலான தமிழ் மருத்துவ குறிப்புகளுடன், மருத்துவ தாவரங்களின் வண்ணப்படங்களுடன் வெளிவரும் இந்நூல் தமிழ் மருத்துவ ஆர்வலர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் பயன்மிக நல்கும்

**ஆ. அண்ணாதுரை,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்.

தஞ்சாவூர்,
24-03-2017.

# பதிப்பாசிரியர் உரை

எண்ணற்ற மருத்துவ நூல்களை சுவடிகளாக கொண்டது சரசுவதி மகால் நூலகம் ஆகும். காலந்தோறும் பாதுகாக்கப்படுவது பழஞ்சுவடிகள் மட்டுமல்லாது தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருக்கக் கூடிய சுவடிகளை வைத்திருக்கும் மக்களிடம் சென்று அவர்களிடமிருந்து அச்சுவடிகளை நன்கொடை யாகப் பெற்று நூலகத்தில் பாதுகாப்பாக சேர்ப்பதும் அச்சுவடிகளை நூல்களாகப் பதிப்பித்து வெளியிடுவதும் தொடர்ந்து நடைபெற்று வரும் ஒரு செயலாக உள்ளது.

அந்த வகையில் தஞ்சை நகரின் கரந்தைப் பகுதியில் வசித்துவந்த மறைந்த சித்த மருத்துவர் திரு. ரத்தினவேல் பிள்ளை அவர்களின் மகள்வழிப் பெயரன் திரு. T.S.மோகன் என்பவர் தன் பாட்டனாரின் மருத்துவச் சுவடிகளை சிதைவு படாமல் பொக்கிஷம் போல பாதுகாத்து சரசுவதி மகால் நூலகத்திற்கு கடந்த 2015ஆம் ஆண்டில் பெருந்தன்மை யோடு அன்பளிப்பாக வழங்கினார்கள்.

அவர்கள் வழங்கிய சுவடிகளுள் ஒன்று தமிழ் மருத்துவம் என்ற பெயரில் நூலக வெளியீடாக வெளி வருகின்றது. சுவடி ஏட்டின் தலைப்பில் வைத்தியத் திருப்புகழில் சொல்லப்பட்டிருக்கும் முறைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வைத்திய திருப்புகழ் என்னும் தலைப்பில் அச்சு நூலொன்றும் இருந்தது. ஆனால் இன்றைய பொழுதில் அந்நூல் கிடைப்பது அரிதாகவே இருக்கின்றது. அதன் காரணமாக கிடைத்த இச்சுவடி நூலினை தமிழ் மக்கள் பயன்பெறும் வகையில் பதிப்பித்து வெளியிட எண்ணம் கொண்டோம்.

இப்பதிப்பினை 08-07-2016 முதல் 28-07-2016 வரை நடைபெற்ற தமிழ்ச் சுவடியியல் பயிலரங்கில் பயிற்சி பெற்ற மாணவர்களைக் கொண்டு பதிப்பிக்கும் முயற்சியாக ஒவ்வொரு மாணாக்கருக்கும் ஒவ்வொரு ஏடுகள் வழங்கப்பட்டு அதிலுள்ள மருத்துவக் குறிப்புகளை எழுதச் செய்து அவைகளைத் தொகுத்து

மாணவர்கள் எழுதியதை சரிபார்த்து முகவுரை, மருத்துவ தாவரங்களின் விளக்கம், தாவரங்களின் படங்கள், சொல் அட்டவணை போன்றவைகளை சேர்த்து ஒரு முழுமையான நூலாக்கி ஓய்வுபெற்ற மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் அவர்களுடைய நுண்ஆய்விற்கு அனுப்பப்பட்டு இந்நூல் முழுமை செய்யப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது.

புதிய முயற்சியாக இப்படி ஒரு நூல் வெளியீட்டிற்கு மனமுவந்து அனுமதி வழங்கிய முன்னால் மாவட்ட ஆட்சித்லைவர் மற்றும் நூலக இயக்குநர் **டாக்டர் என்.சுப்பையன்,** இ.ஆ.ப., அவர்களுக்கு முதற்கண் என் நன்றி. தொடர்ந்து நூலாக்கம் பெறவும் விரைந்து வெளியிடவும் ஆர்வம் கொண்டு இப்பணியில் என்னை ஊக்கப்படுத்திய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் திரு. **ஆ. அண்ணாதுரை,** இ.ஆ.ப., அவர்களுக்கு என் சார்பாகவும் பதிப்புப் பணியில் ஈடுபட்ட பயிற்சி மாணவர்கள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பணியில் சிறப்பாக செயல்பட ஆர்வம் அளித்த முன்னாள் நூலக நிருவாக அலுவலர் திருமதி **அ. பூங்கோதை,** எம். ஏ., அவர்களுக்கும், தமிழ்த்துறையின் பதிப்புப் பணிகளுக்கெல்லாம் சிறிதும் காலதாமதமின்றி உடனுக்குடன் செய்வதற்கு துணை நின்ற மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மறறும் நிருவாக அலுவலர் திரு. **இரா. ஜெயினுலாப்தீன்,** எம்.எஸ்ஸி., அவர்களுக்கும் எங்கள் நன்றி. மற்றும் நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M. A., B.Lit.. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், கணினியில் அச்சிட்டளித்த நூலகப் பணியாளர் களுக்கும், அச்சகப் பிரிவு பணியாளர்களுக்கும், ஏனையோருக்கும் எங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மணி. மாறன்**
*தலைமைப் பதிப்பாசிரியர்*
மற்றும்
பயிற்சி மாணவர்கள்

தலைமைப் பதிப்பாசிரியர்.

***மணி. மாறன்,*** தமிழ்ப்பண்டிதர்

இந்நூல் பதிப்பில் துணை நின்றவர்கள்

08-07-2016 முதல் 28-07-2016 வரை நடைபெற்ற

தமிழ்ச் சுவடியியல் பயிலரங்கில் பயிற்சிபெற்ற மாணவர்கள்

| | |
|---|---|
| 1.முனைவர் சு. சத்தியா | 20. ஆ. கமலம் |
| 2.முனைவர் இரா. ஜெயஸ்ரீ | 21. கே. அட்லேஸ்வரன் |
| 3. கோ. முருகேஸவரி | 22. கு. ரெங்கநாதன் |
| 4.எம். எஸ். மகாலெட்சுமி | 23. ரா. விஜயா |
| 5.பா. பூங்குழலி | 24. கோவி. இரமணி |
| 6. பி. லெனின் | 25. டி. கோபாலகிருஷ்ணன் |
| 7.நா. பிரபாகரன் | 26. த. வினோத்கண்ணா |
| 8. பி. கார்த்தி | 27. க. இளவரசி |
| 9. கவிதா | 28. செ. ஓவியம் |
| 10.முனைவர் கே. பானுமதி | 29. சு. சதீஷ்குமார் |
| 11. செ. சிபிவெங்கட்ராமன் | 30. த. மங்கையர்கரசி |
| 12. பேராசிரியர் பா. நடராஜன் | 31. ஜா.கிறிஸ்டி ஜெஸி நிர்மலா |
| 13. இரா. தேவி | 32. தி. ஈஸ்வரி |
| 14. கு. நாகராஜன் | 33. பொ. அறிவழகன் |
| 15. மோ. சௌந்தர்ராஜன் | 34. சே. வினோத் |
| 16. கு. சீதா | 35. சீ. அருட்செல்வி |
| 17. ஏ. செல்வம் | 36. பி. அனுஷா |
| 18. ஆர். சென்றாயன் | 37. பழனிவேல் |
| 19. க. சிவசுப்ரமணியன் | 38. க. சித்திரா |

## பொருளடக்கம்


| வ.எண். | மருந்தின் பெயர் | ப. எண். |
|---|---|---|
| 1. | சௌபாக்ய லேகியம் | 1 |
| 2. | சீனக்கிருத லேகியம் | 6 |
| 3. | மதன காமேசுர லேகியம் | 10 |
| 4. | சர்வோஷ்ண நிவாரண தைலம் | 14 |
| 5. | ஜன்னி மாத்திரை | 17 |
| 6. | வயிரவ மாத்திரை | 19 |
| 7. | மேக கேசரி எண்ணெய் | 24 |
| 8. | விந்தாதி மதன சூரணம் | 27 |
| 9. | மேகத்தெண்ணெய் | 30 |
| 10. | சுக சீவனி பாணிதம் | 32 |
| 11. | மெய்ஞ்ஞான கற்பம் | 33 |
| 12. | சஞ்சீவி சூரணம் | 34 |
| 13. | அஷ்டாதிச் சூரணம் | 36 |
| 14. | பறங்கிப்பட்டைச் சூரணம் | 38 |
| 15. | சஞ்சீவிக்கிருதம் | 40 |
| 16. | மேகராசாங்க எண்ணெய் | 41 |
| 17. | மதன கற்ப மாத்திரை | 43 |
| 18. | கப ராசாங்கம் | 46 |
| 19. | கிரந்தி எண்ணெய் | 48 |
| 20. | அகஸ்தியர் குழம்பு | 49 |
| 21. | மதன சிந்தாமணி லேகியம் | 52 |
| 22. | சீனச்சூரணம் | 56 |
| 23. | மலபந்த நிவாரணி | 57 |
| 24. | சிவனார் வேம்பு தைலம் | 59 |
| 25. | பலகடி மேக சஞ்சீவி | 61 |
| 26. | பல மூலிகை கற்பம் | 63 |
| 27. | வைரவ மாத்திரை | 64 |
| 28. | மேக சஞ்சீவி எண்ணெய் | 66 |
| 29. | நவமூல சஞ்சீவி | 70 |
| 30. | க்ஷய பாண்ட மதன சிந்தாமணி | 72 |
| 31. | மன்மத சிந்தாமணி | 79 |
| 32. | மனமோகன சிந்தாமணி | 87 |
| 33. | அகஸ்தியர் க்ஷயபாண்டக்கிருதம் | 90 |
| 34. | க்ஷய பாண்டு இங்கிதக் கிருதம் | 93 |
| 35. | சூட்சுமக் க்ஷய பாண்டுக் கிருதம் | 96 |
| 36. | தாதுவிருத்தி மாக்க்ஷய சூரணம் | 98 |
| 37. | சிவனார் வேம்புத் தைலம் | 101 |

# சித்த மருத்துவம்

உலகில் தோன்றும் உயிரினங்களுக்கு இன்பமும் துன்பமும் இயல்பாய்த் தோன்றுபவை. துன்பத்தை நோய் என்று குறிப்பர். உடலுக்கு வரும் துன்பத்தை "உடல்நோய்" என்றும் உள்ளத்திற்கு வரும் துன்பத்தை "உளநோய்" என்றும் குறிப்பிடுவது இன்றும் வழக்கில் உள்ளது.

## மருந்து

மனிதனுக்கு வரும் உடல், உளநோய்களை வராமல் தடுக்கவும் வந்தபின் விலக்கவும் மேற்கொள்ளப்படும் செயலே மருத்துவம் ஆகும். இதனை மேற்கொள்ள உதவும் வழிமுறை "மருந்து" எனப்பெறும். "பல்வகை நோய்களையுந் தடுப்பனவும் தீர்ப்பனவும் பல்வேறு நலப்பொருள் தொகுதி" ஆக மருந்து அமைகின்றது. அதேபோல் ஆங்கில அகராதி ஒன்று Medicine என்னும் சொல்லுக்கு The Art of preserving and restoring health என்று பொருள் தருகின்றது.

மருத்துவத் துறையில் இந்திய மருத்துவமே முதன் முறையாக தோன்றிய மருத்துவம் என்பது உண்மை. இந்திய மருத்துவம் என்பது சித்த மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம், யுனானி மருத்துவம் என மூவகைப்படும். சரித்திர ஆய்வுகளாலும், கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தக்குடி என்று தமிழினத்தை அழைப்பதாலும் இந்திய மருத்துவத்திற்குள்ளும் முதன்மையாகத் தோன்றிய மருத்துவம் "சித்த மருத்துவமே" என நாம் பெருமை கொள்ளலாம்.

பண்டைய காலத்தில் இந்தியா முழுவதும் பல சித்தர்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்று தெரிகிறது. அவர்களில் சிலர் வகுத்ததே சித்த மருத்துவம் ஆகும். தமிழ்நாட்டில் இருந்த சித்தர்களால் வகுக்கப்பட்டது சித்த மருத்துவம். இம்மருத்துவ நூல்கள் தமிழில் மட்டும் காணக்கிடைப்பதாலும், சித்த மருத்துவ முறை பழங்காலம் முதல் இன்று வரை தமிழ்நாட்டிலேயே பயிலப்பட்டு வருவதாலும், சித்த மருத்துவத்தைத் தமிழ் மருத்துவம் என்பர்.

இம்முறையை வகுத்தவர்கள் பதினெட்டு சித்தர்கள் என்றும், அவர்களில் முதன்மையானவர் "அகத்தியர்" என்ற செய்தியும் அறியலாகிறது. இதனால் சித்த மருத்துவ முறையை "அகத்திய மருத்துவ முறை" என்று கூறுவதுண்டு.

**சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் இன்றைய விஞ்ஞானம்**

விஞ்ஞான முறையும், விஞ்ஞான ஆராய்ச்சியும் தமிழகத்திற்குப் புதியன அல்ல. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் விஞ்ஞானிகள் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்கள் மனித சமுதாயத்திற்குச் செய்திருக்கும் நன்மை அளவற்றவை. அவர்கள் மக்கள் அனைவரும் நோய் நொடியில்லாமல் இன்பத்துடன் வாழ்வதற்கும், துன்பங்களிலிருந்து கரையேறுவதற்கும் வழிகள் கண்டறிந்தனர். உண்மைகள் பலவற்றை ஆராய்ந்து தெளிந்தனர். அவர்கள் கண்டறிந்த உண்மைகளை மனித சமுதாயம் அனுபவிக்கும்படி செய்தனர். அவர்கள் கண்டறிந்த ஆராய்ச்சியின் பலனை இன்றுவரை மனித சமுதாயம் அனுபவித்துக் கொண்டு வருகிறது.

இன்றைய விஞ்ஞானிகளும் மனித சமூகமும், உலகமும் முன்னேறுவதற்கான பல உண்மைகளைக் கண்டுபிடித்து தான் இருக்கிறார்கள். ஆயினும் மனிதப் பூண்டே இல்லாமல் நாசமாக்கி அழித்துவிடக்கூடிய உலக நாகரிகத்தையே பாழாக்கிவிடக்கூடிய, சுட்டுச் சாம்ப லாக்கிவிடக்கூடிய கொடுமையான அழிவு சக்தி களையும் கண்டுபிடித்திருக்கின்றனர். இத்தகைய சக்தியுள்ள எறிகுண்டுகள் வெடிகுண்டுகள் முதலியன உருவாக்கப் பட்டுள்ளன. விஞ்ஞானிகளின் இத்தகைய கண்டுபிடிப்பு களால் இன்று உலகம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இதனால் உலக மக்களிடையே அச்சம், நடுக்கம், ஒருவரை ஒருவர் நம்பாமை, வாழ்விலே அவநம்பிக்கை, எப்பொழுது என்ன நடக்குமோ என்ற பயத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

பழங்காலத்து தமிழக விஞ்ஞானிகள் மனித குலத்தின் வாழ்வுக்காகவே உழைத்தார்கள். ஆதலால் அவர்கள் மக்களையோ, உலகத்தையோ, இயற்கைப் பொருள்களையோ நாசமாக்கக்கூடிய தீய சக்திகளை கண்டுபிடிக்கவில்லை. இவற்றைக் கண்டுபிடிப்பதில் தங்கள் அறிவையும் காலத்தையும் செலவிட்டு வீணாக்கவில்லை. மனித சமூகம் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான துறையிலேயே அவர்கள் உழைத்தார்கள். காலங்கடத்தினார்கள், கருத்தை செலுத்தினார்கள். அதில் அவர்கள் வெற்றியும் கண்டனர். இத்தகைய விஞ்ஞானிகள் யார்? தியாகிகள் யார்? அவர்கள் தாம் நம் நாட்டிலே வாழ்ந்த சித்தர்கள் ஆவர்.

**சித்தர்கள்**

“சித்தர்” எனும் சொல் “சித்” என்னும் வடமொழி வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியது. நிறைமொழி மாந்தர்,

அறிவர் என்னும் சொற்களால் மிகப் பழங் காலத்தில் சித்தர்கள் குறிக்கப்பெற்றனர். "சாரணர்" எனச் சமணத்திலும், பௌத்தத்திலும் குறிக்கப்பெற்றவர்கள் சித்தர்கள் என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது.

சித்-அறிவு, அறிவு படைத்தவர்கள் சித்தர்கள். சித்தம் என்பதற்கு அறிவு என்றும் பொருள் உண்டு. ஆகவே சித்தர்கள் என்றால் அறிவு படைத்தவர்கள், அறிஞர்கள், மேதைகள், பேரறிவு படைத்தவர்கள், நுண்ணறிவு படைத்தவர்கள், விஞ்ஞானிகள், மெய் ஞானிகள் என்று பொருள் கொள்ளலாம்.

யோக சாதனைகளில் தெளிதல், மந்திரங்களைச் செபித்தல், மௌனத்தில் இருத்தல், இறைவழிபாடு முதலானவற்றால் சித்திகளை பெற்ற்வர்கள் சித்தர்கள். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியா காரம், தாரணை, தியானம், சமாதி எனச் சித்திகள் எண்வகைப்படும். இதனை அட்டமாசித்தி என்றும், அட்டசித்தி என்றும் வழங்குவர். இந்த எட்டுவகைச் சித்திகளையும் பெற்றவர்கள் சித்தர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

தன்னை அறிவது சித்தாந்தம் என்றும், தலைவனை அறிவது வேதாந்தம் என்றும் சித்த மருத்துவம் தத்துவத்தை அடிப்படையாக கொண்டதாக உள்ளது. வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் என தாயுமானவர் குறிப்பிடுகிறார்.

கடவுளைக் காண முயல்பவர்களை பக்தர்கள் என்றும், கண்டு களித்தவர்களைச் சித்தர்கள் என்றும் தேவாரம் வேறுபடுத்திக் காட்டுகிறது.

சித்தர்கள் வாசி என்ற மூச்சினை அடக்கி ஆண்டு யோக சக்தியினால் உடம்பில் உள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாதகம், விசுத்தி, ஆக்ஞை ஆகியவை முறையே மூலாதாரம், கொப்பூழ், இதயம், இரைப்பையின் நடு, கழுத்து, தலை ஆகிய ஆராதாரம் என்னும் ஆறு இடங்களிலும் மனதைச் செலுத்திக் குண்டலினியை எழுப்பி மணி, மந்திரம், மருந்துகளின் துணை கொண்டு மாறாத மதியமுதம் உண்டு நரை, திரை மூப்பு அறியா நல்லுடம்பைப் பெற்ற எல்லாம் ஆன சகஸ்நாரத்தில் நிலைத்துச் சித்தி பெற்றவரே சித்தர் என்று கூறப்படுகிறது.

மகாகவி பாரதியார் கூட "செத்தவர் தம்மை எழுப்பித் தருகின்ற சித்தர் பிறந்த தமிழ்நாடு" என்று சித்தர்களை சிறப்பித்துப் பாடியுள்ளார்.

சித்தர்கள், வாதம் 84, பித்தம் 48, சிலேத்துமம் 96 ஆகியவற்றால் ஏற்படும் பிணிகளை அகற்ற மூலிகைகள் பல பாடாணம், உலோகம் ஆகியவற்றையும் இன்னும் பல பொருள்களையும் கையாண்டு பல்வேறு மருந்துகள் செய்யும் முறைகளையும் அவற்றின் நற்பெயர்களையும் உலகிற்குக் கொடுத்து மறைந்துள்ளனர்.

சித்த மருத்துவம் எண்ணெய், சூரணம், செந்தூரம், பஸ்பம், லேகியம், மாத்திரை, பாடாணம் போன்ற மருந்து வகைகளைக் கொண்டது. நோய் வராமல் காக்கும் தன்மையும், வந்தபின் நீக்கும் தன்மையும் மூலிகைகளுக்கு உண்டு. சித்த மருத்துவம் நோய்களை மெதுவாக ஆனால் அடியோடு நீக்கவல்லது. நாடி நடையறிந்து நோய் தீர்க்கும் முறையை சிறப்பாகப் பெற்றுள்ளது.

உலகில் 4448 நோய்கள் உள்ளன என்றும் சுமார் 2,50,000 நோய் தீர்க்கும் மூலிகைகள் உள்ளன என்றும் சித்த மருத்துவம் கூறுகிறது.

**தமிழ் இலக்கியங்களில் சித்த மருத்துவம்**

2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றை கொண்டுள்ள தமிழ் மருத்துவக்கலையின் வளர்ச்சியைத் தமிழ் இலக்கியச் சான்றுகள் வழி ஐந்து படி நிலைகளில் பகுக்கலாம்.

**இயற்கையோடு இயைந்த காலம்**

தொல்காப்பியம் சங்க இலக்கியம் ஆகிய நூல்களில் காணப்படும் மருத்துவக் குறிப்புகள் பெரிதும் இயற்கை மருத்துவச் சார்புடையனவாக இருத்தலால் இக்காலத்தில் மருத்துவத்தை இயற்கையோடு இயைந்த ஒன்றாகக் கருதலாம்.

**மாறுதல் காலம்**

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் காணப்படும் பல்வேறு மருத்துவக் குறிப்புகள் அக்காலத் தமிழ் மருத்துவக் கலையில் ஏற்பட்ட பல மாறுதல்களைக் குறிக்கின்றன. திருவள்ளுவரின் மருத்துவ அதிகாரம் தமிழ் மருத்துவக் கலை பெற்றிருந்த கட்டுக்கோப்பான நிலையை விளக்குகிறது. வள்ளுவர் கூறும் மிகினும் குறையினும் எனும் குறள் கருத்து சித்த மருத்துவம் அவர்காலத்தில் நன்னிலையில் இருந்ததைக் குறிப்பதாகும்.

**சித்தர் காலம்**

கி. பி. 5ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும்

பதினெண் சித்தர்கள் தம் மெய் உணர்வால் மருத்துவக் கலையை மாண்புடையதாக்கினர். இக்காலத்தில் சித்தர்களின் அரவணைப்பில் சிறப்புடன் மருத்துவம் வளர்ந்துள்ளது. கிடைக்கின்ற இலக்கிய சான்றின்படி திருமூலரின் திருமந்திரம் 3000 எனும் நூலே சித்த மருத்துவக் கருத்துக்களை நேரடியாக விளக்கும் முதல் நூலாகும். எனவே திருமூலரே சித்த மருத்துவத்தின் தந்தை எனக்கருதலாம்.

## நாட்டுப்புறங்களில் ஒதுங்கிய காலம்

18ஆம் நூற்றாண்டிற்குப் பின் அயல் மருத்துவ முறைகளான அறிவியல் மருத்துவமுறை, யுனானி மருத்துவமுறை, ஆயுர்வேத மருத்துவ முறைகளின் ஆதிக்கம் காரணமாக சித்த மருத்துவத்தின் வளர்ச்சி தடைபட்டது என்றாலும் தாழ்வுறவில்லை. நகர்ப்புறங் களில் அயல் மருத்துவ முறைக்கு வரவேற்பு அளிக்கப் பட்ட நேரத்தில் கிராமப்புறங்களில் சித்த மருத்துவத்திற்கு புகலிடம் கிடைத்தது.

பின் சித்த மருத்துவக் கருத்துக்கள், மருந்து செய்முறைகள் நாட்டுப்புறப் பாடல்களாகவும், நம்பிக் கைகளாகவும், பழமொழிகளாகவும், பழக்க வழக்கங்க ளாகவும் உருமாறின. இன்று பாட்டி வைத்தியம், நாட்டு வைத்தியம் என்று குறிக்கப்பெறுபவை அனைத்துக்கும் மூலமாக அமைந்தவை பதினெண் சித்தர்களின் மருத்துவ சிந்தனை ஆகும்.

## சித்த மருத்துவ அறிவியல் காலம்

நாட்டுப்புறங்களில் ஒதுங்கிய சித்த மருத்துவம், விடுதலைக்குப்பின் மீண்டும் எழுச்சிபெற முனைந்தது.

இந்த மருத்துவ முறையைக் கட்டிக்காத்த பல சித்த மருத்துவ பரம்பரையை சார்ந்தவர்கள், வல்லுநர்கள் காலத்திற்கேற்ற மாறுதல்களை ஏற்கவோ, செய்யவோ முயலாமையால் விரைவான வளர்ச்சிபெற இயலவில்லை. அறிவியல் மருத்துவத்தின் மின்னல் வேக வளர்ச்சியில் மக்களும், ஆட்சியாளர்களும், மிகுந்த ஈடுபாடு கொண்டதால் சித்த மருத்துவம் கவனிக்கப்படாமலே போய்விட்டது. பின் 1967ஆம் ஆண்டு தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோதுதான் சித்த மருத்துவத் திற்குப் புத்துயிர் கிடைத்தது எனலாம். 1968இல் பேரறிஞர் அண்ணா அவர்களினால் நடத்தப்பட்ட இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின் வாயிலாகச் சித்த மருத்துவம் உலகில் உள்ள அனைவரையும் திரும்பிப் பார்க்கச் செய்தது. அதன் விளைவாக அறிவியல் அடிப்படையில் அமைந்திருந்த சித்த மருத்துவம், அறிவியல் போக்குடன் இணைந்து சித்த மருத்துவ அறிவியலாக மாறியது.

### கல்வெட்டுச் சான்றுகள்

சித்த மருத்துவத்தின் இடைக்கால வளர்ச்சியை உறுதிப்படுத்தும் பல கல்வெட்டுச் சான்றுகள் கிடைக் கின்றன.

பண்டைக்காலத்தில் தமிழகத்தில் நிலவிய மருத்துவக் குடிகள், மருத்துவச் சாலைகள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் தமிழகக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

### சோழநாட்டு மருத்துவக்குடி

சோழர் காலத்தில் சிறப்பு பெற்ற மருத்துவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு குடியினராக வாழ்ந்த இடம் “மருத்துவக்குடி” என அழைக்கப்பெற்றது. இங்குள்ள

திருகுரங்காடு துறைக்கு அருகில் மருத்துவக்குடி என்னும் ஊர் இருந்துள்ளது. இன்றும் அவ்வூர் அதே பெயரில் அழைக்கப்பெற்று வருகிறது.

*ஸ்வஸ்தி ஸ்ரீ கோமாறன்*
*சடையற்கு யாண்டு நான் காமண்டின்*
*எதிராமாண்டின்*
*திரைமூர் நாட்டு மருத்துவக்*
*குடி ஸபையோம் இந்நாட்டு திருக்குரங்காடு*
*துறை மகாதேவரிடை.*

மருத்துவக்குடி சடையார், திருக்குரங்காடுதுறை மகாதேவர் கோயிலுக்கு விளக்கெரிக்க எண்ணெய் தானம் அளித்ததைத் திருகுரங்காடுதுறை கல்வெட்டு கூறுகிறது. இதன் மூலம் சோழநாட்டில் மருத்துவக்குடி இருந்தது தெரிகிறது.

**பாண்டிய நாட்டின் களக்குடி வைத்திய குலம்**

கி. பி. 7ஆம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட பராந்தக மாறன் சடையன் எனும் பாண்டிய மன்னன் அவையில் மாறன்காரி என்பான் தலைமை அமைச்சனாக பணி புரிந்தான். இவன் பாண்டிய நாட்டைச் சார்ந்த கரவந்தபுரம் என்ற களக்குடி வைத்திய குலத்தில் தோன்றியவன் என்பதை ஆனைமலைக் கல்வெட்டுக் குறிக்கிறது.

*கோமாறந் சடையற்கு உ*
*த்தர மந்திரி களக்குடி*
*வைத்தியந் மூவேந்த மங்கலப்*
*பேரரையன் ஆகிய மாறங்*
*காரி*

இதன் மூலம் பாண்டியர் காலத்தில் மருத்துவ முறை இருந்தது தெளிவாகின்றது.

### மருத்துவருக்குச் சிறப்புப் பெயர்

மருத்துவக் கலையில் சிறப்புப் பெற்றிருந்தவருக்கு "வைத்திய சிகாமணி" என்னும் சிறப்புப் பட்டம் அளிக்கப்பட்டதை வேள்விக்குடி செப்பேடு கூறுகிறது.

### மருத்துவர்கள்

அறிவியல் மருத்துவ அமைப்பில் பொதுப்பிரிவு மருத்துவர் (General Physiciam) அறுவை சிகிச்சை மருத்துவர் (Surgeon) என இருவகை மருத்துவர்கள் உள்ளனர். இதே பிரிவு சோழர் கால மருத்துவமனைகளில் இருந்ததைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. கைநாடி பார்த்து பொதுப்பிணி நீக்கும் மருத்துவரை, வைத்தியன், சவர்ணன், மருத்துவன் என்று அழைத்தனர்.

உடற்கூறுகளை ஆராய்ந்து கட்டி, விரணம் ஆகியவற்றை அறுத்து அறுவை மருத்துவம் செய்பவரைச் "சல்லியக்கிரியை பண்ணுவான்" என்று அழைத்தனர்.

### மருத்துவருக்கு வழங்கப்பட்ட நிலக்கொடைகள்

மருத்துவர்களின் வளர்ச்சிக்காகவும், மருத்துவர் களின் வாழ்வுக்காகவும் அக்காலத்தில் நிலக்கொடைகள் வழங்கப்பட்டன. இதனைக் கல்வெட்டுகள் வைத்திய விருத்தி "வைத்திய போகம்" என்று குறிக்கின்றன.

பண்டாரவாடையிலுள்ள முதலாம் இராசேந்திர னின் கல்வெட்டு, இப்பகுதியில் இருந்த ஆதுலர் சாலையைப் பற்றி அறிவிக்கின்றது. இவ்வூர் ஆதுலர் சாலைக்கும் அதன் வளர்ச்சிக்கும் நிலங்கள் கொடையாக

அளிக்கப்பெற்றிருந்தன. இவை போதாமை காரணமாக முதலாம் இராசராசனின் தமக்கையான குந்தவையார் மேலும் மனைகள் வழங்கினார். ஆதுலர் சாலைக்கு முன் அளித்த நிலக்கொடையும் இப்பொழுது அளித்த நிலக்கொடையையும் சவர்ணன் அரையன் மதுராந்தகன் என்ற மருத்துவரும், அவருடைய சந்ததியாரும் அனுபவிக்கலாம் என்றும், அம்மருத்துவர் மருகல் என்னும் ஊரினர் என்று இக்கல்வெட்டு குறிக்கின்றது.

### சல்லிய விருத்தி (அறுவை மருத்துவம்)

பொது மருத்துவத்திற்கு அளிக்கப்பட்ட கொடைகள் போன்றே அறுவை மருத்துவ வளர்ச்சிக்கும் கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனைச் "சல்லியவிருத்தி" என்று கல்வெட்டு குறிக்கின்றது. குந்தவை தேவியார் "சல்லியைக் கிரியை" போகமாக திருவிசலூரில் நிலதானம் அளித்த செய்தியை இராசேந்திர சோழனின் நான்காம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

### ஆதுலர் சாலைகள் (மருத்துவமனைகள்)

மருத்துவமனைகளை அக்காலத்தில் "ஆதுலர்" சாலைகள் என்று அழைத்தனர். திருமுக்கூடல், ஸ்ரீரங்கம், தஞ்சாவூர், பண்டாரவாடை, திருவாவடுதுறை, திருப்புகலூர், குன்றத்தூர், அகத்தீச்வரம் போன்ற பல இடங்களில் ஆதுலர் சாலை பற்றிய கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

### மடங்களில் மருத்துவ உதவி

வழிப்போக்கர்கள் வசதிக்காக மடங்களும், சத்திரங் களும் அக்காலத்தில் கட்டப்பட்டிருந்தன. இந்த மடங்களில் மருத்துவ உதவியும் அளிக்கப்பட்டுள்ளது.

திருத்தொண்டர் தொகையான் மடம் இத்தகைய மருத்துவ உதவியை மேற்கொண்டமை பற்றி மூன்றாம் இராசேந்திரனின் 2ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

## சித்த மருத்துவமும் சீன மருத்துவமும்

சித்த மருத்துவம் பழங்கால முதலே சீனா, அரேபியா, ஆயுர்வேத முறைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதை சில ஒப்புமை மூலம் அறிய முடிகிறது. பதினெண் சித்தர்களில் போகரும், புலிப்பாணியும் சீன தேசத்துடன் தொடர்பு கொண்டு சீன மருத்துவத்துடன் சித்த மருத்துவத்தை இணைத்தவர்களாகக் கருதப்படு கின்றனர். அவ்வாறே ராமதேவர் எனும் சித்தர் அராபிய மருத்துவத்துடன் சித்த மருத்துவத்தை இணைத்தவராகக் கருதப்படுகிறார். அதனாலேயே அவர் "யாகோபு" எனும் அராபியப் பெயர் பெற்றதாகவும் கருதுவர். இவ்வாறு சித்தமருத்துவமானது பல்வேறு சூழல்களிலும் பல்வேறு கால நிலைகளிலும் வளர்ச்சியடைந்துள்ளது.

கி. மு. 3000ஆம் ஆண்டுகளில் உலக நாகரிக நாடுகளான எகிப்து, மத்திய கிழக்கு ஆசியா, இந்தியா, சீனா ஆகியவற்றில் மருந்து தாவரங்கள் (Herbels) பற்றி நன்கு அறிந்து பயன்படுத்தியுள்ளது தெரிய வந்துள்ளது. கி. மு. 1500ஆம் ஆண்டுகளில் எகிப்தில் எழுதப்பட்ட ஈபெர்ஸ் பெபைரசு (Ebers Papyrus) எனும் ஹெர்பல் (Herbels) நூலே மிகப் பழைமையான மருந்து தாவர நூல் ஆகும். மருந்து தாவர நூல்களை ஹெர்பல் என்று அழைத்தனர். ஈபெரிஸ் பெபைரிசில் பிசின் தாவரம் (Myor), ஆமணக்கு (Casbor) மற்றும் பூண்டு (Garlic) பற்றி குறிப்பிட்டுள்ளது.

கி. மு. 400 ஆண்டுகளில் இந்தியாவில் ஆயுர்வேதம் எனும் மருத்துவமுறை வழக்கிலிருந்தது. சரஹர் என்பவர் எழுதிய சரஹ சம்ஹிதை எனும் மருந்து தாவர நூலில் 350க்கும் மேற்பட்ட மருந்து தாவரங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

கி. மு. 500ஆம் ஆண்டு வாக்கில் மாந்திரீகமும் மருத்துவமும் தனிப்படுத்தப்பட்டு மருந்து தாவரங்கள் பற்றிய ஆய்வு வளர்ந்தது.

## தாவரமும் மருந்தும்

பன்னெடுங்காலமாகவே, தாவரங்கள் மருந்துப் பொருட்களின் ஆதாரங்களாகத் திகழ்ந்து வந்துள்ளன. திருக்குறளில் மருந்து மற்றும் மருத்துவம் ஆகிய இரண்டையுமே குறிக்கும் சொல்லாக மருந்து என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய மருந்து போல" என்று பாலைக்கலி கூறுவதிலிருந்து மருந்துப்பொருள் என்பது மட்டும் குறிக்கும் சொல்லாகவும், மருந்து என்ற சொல் பயன் படுத்தப்பட்டுள்ளது. (கலி : 17)

புல், பூடு, செடி, புதல், மரம், கொடி என வளரியல்பு நோக்கில் அமைந்த தமிழர்தம் தாவர வகைப்பாடு "மருந்து" என்ற பெயரிலேயே நிகண்டுகளில் பதிவாகி யுள்ளது. இதேபோன்று "மரம்சா மருந்தும் கொள்ளார்." (நற். 226) என்றவிடத்து இடம்பெறும் மரம் என்ற பெயரும் மூலிகைகளாக விளங்கும் அனைத்துத் தாவர வகைகளையும் ஒருங்கே சுட்டி நிற்கிறது எனலாம்.

### நோயும் உணவும் :

நோய்க்கான காரணம் தாவரங்களை உள்ளடக்கிய உணவில்தான் உள்ளது என்பதைப் பண்டைய தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர். "உணவே மருந்து, மருந்தே உணவு" என்ற வாக்கின் உண்மையையும் நன்கு அறிந்திருந்தனர்.

ஏற்கனவே உண்ட உணவு நன்கு செரித்துவிட்டது என அறிந்து அதன்பின் உண்டால் நோய் அணுகாது என்பதும், அளவோடு உணவு உண்டால் நோய் வராது என்பதும் வள்ளுவர் எடுத்துக் காட்டியுள்ள சிறப்பான உண்மைகளாகும். இதனைக் கீழ்க்கண்ட குறட்பாக்கள் எடுத்தியம்புகின்றன.

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி யுணின் (குறள்-942)**

**அறறால் அளவறிந்து உண்க அஃதுடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்கு மாறு (குறள்-943)**

நோயும் உணவும் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால், வயதுக்கேற்ற உணவு என்பதை ஒரு சமுதாய பழக்கமாகவே பண்டைய தமிழர்கள் கடைபிடித்தனர். அரிசி, அவல், கம்பு போன்ற தானியங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட கஞ்சி வயது முதிர்ந்தோர்க்குச் சிறந்த உணவாகும். மகப்பேறு கண்ட பெண்ணுக்கு உரிய உணவு மருத்துவப் பயன் சார்புடையதாகும்.

"பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென நோயுண் மருந்து தாயுண்டாங்கு" என குழந்தைக்காகத் தாய் மருந்துண்டதனைச் சங்க இலக்கியம் கூறுகிறது.

### தமிழக மருத்துவமுறை

மருத்துவம் என்ற சொல் மனித மருத்துவத்திற்கும் விலங்கின மருத்துவத்திற்கும் பொதுவாக அமைந்த சொல் என்று கொள்ளலாம்.

இதனையே அக்காலத்தில் "வாகடம்" என்ற சொல்லாலும் அழைத்தனர். தமிழக மருத்துவ மரபின் மிகச்சிறந்த தனித்தன்மை என்னவெனில் அது மூன்று வேறுபட்ட நிலைகளில் திறம்படச் செயலாற்றி வருகிறது. அதன் முறையே,

1. நாட்டு மருத்துவம் (நாட்டு வைத்தியம் (Folk Medicine)

2. பழங்குடியினர் மருத்துவம் (Triable Medicine )

3. சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவம் (Siddha and Ayurvedic Medicine)

**நாட்டு மருத்துவம்**

வழிவழியாக குடும்பங்களிலும், கிராமங்களிலும் பயன்படுத்தப்பட்ட மருத்துவ முறைதான் நாட்டு வைத்தியம் எனப்படும் நாட்டு மருந்தாகும். இது முற்றிலும் அனுபவங்களால் வளர்ந்த மரபுவழி மருத்துவமாகும். எனவே இது அனுபவ வைத்தியம் என்றும் அழைக்கப்படும்.

பண்டைய தமிழ் மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததால் இயற்கையாகப் பெற்ற அனுபவங்கள் இந்த வகை மருத்துவம் மேன்மேலும் வளரத் தூண்டுகோலாக விளங்கின.

நாட்டு வைத்தியம், கை மருந்து வைத்தியம், வீட்டு வைத்தியம், பாட்டி வைத்தியம் என்று பல்வேறு பல்வேறு பெயர்களில் இம்மருத்துவமுறை இன்று அழைக்கப் படுகிறது.

நாட்டு வைத்திய முறைகள் பல நாட்டுப்புற பாடல்களின் வடிவிலோ மருத்துவப் பழமொழிகளின் வடிவிலோ காணப்படுகின்றன. சான்றாக, தாய் குழந்தையைப் பெற்றெடுக்குமுன் மிளகு சாப்பிட வேண்டும் என்பதைப் பின்வரும் பாடல் சுட்டுகிறது.

அள்ளி மொளகு தின்னு – என் கண்ணே
அடி மொளகு தானும் தின்னு
படி மொளகு தானும் தின்னு – என் கண்ணே
புத்திரனா பெத்தெடுத்தேன் (தென்பாங்குப் பூந்தமிழ்.பா;17)

*உடல் நோகலுக்கும், கை, கால் வீக்கத்திற்கும், வயிற்று வலிக்கும் உள்ள மருத்துவ முறைகள் பின்வரும் பாடல் வரிகளில் சுட்டப்பட்டுள்ளன.*

உடம்பெல்லாம் நோகுதம்மா – கண்ணே உனக்கு
ஒத்தடம் நான் கொடுக்கட்டுமா
ஏலமும் இஞ்சிச்சாறும் – கண்ணே உனக்கு
எட்டுச் சொட்டு கொடுக்கட்டுமா
.......... .............. ...........
............ .......... ..........
கைகாலு வீக்கத்துக்கு மிஞ்சிப் போய்க்–கண்ணே உனக்கு
கணை எண்ணெய் வாங்கித் தாரேன்
(மலையருவி–ப.233)

*நாட்டுப்புற பாடல்கள் போன்றே பழமொழிகள் பலவும் நாட்டுவைத்தியத்தை வலியுறுத்துவதாகவே உள்ளன. சான்றாக,*

ஆற்றுநீர் வாதம் போக்கும்
அருவிநீர் பித்தம் போக்கும்
சோற்றுநீர் (பழைய சோறு) இரண்டும் போக்கும்

வேலம்பட்டை பித்தத்தைப் போக்கும், ஆலம்பட்டை மேகத்தைப் போக்கும்.

இளைத்தவனுக்கு எள்ளைக்கொடு, கொழுத்தவனுக்குக் கொள்ளைக் கொடு.

வாழை வாழ வைக்கும்

கண்ணுக்குத் தெளிவு பொன்னாங்கண்ணி

## பழங்குடியினர் மருத்துவம்

1991ஆம் ஆண்டு இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் 36 முக்கிய பழங்குடி இனத்தவர் (Tribal Groups) வசித்து வருகின்றனர். இவர்களில் முக்கியமானவர்கள் இருளர், காடர், குறும்பர், வேடர், பனியர், தோடர் போன்றவர்கள். இவர்கள் இயற்கையோடு இயைந்து திரிந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் படிப்பறிவில்லாததால் இவர்களின் மருத்துவ முறை பதிவு செய்யப்படவில்லை. இவர்கள் தங்களுக்குத் தேவையான தாவரங்களை சரியான இயற்கைச் சூழலிலிருந்து, முறையாகப் பறித்து மருந்துகளைப் பயன்படுத்தினர்.

## சித்த மருத்துவமுறை

சித்தமருத்துவம் பண்டைய திராவிட நாகரிகத்துடன் இணைந்து வளர்ந்த மருத்துவமுறையாகும். "சித்தர்" என்ற சொல் சித்தி என்ற சொல்லில் இருந்து தோன்றியது. இதன் பொருள் அனைத்து அறிவையும் கற்று ஞானம் அடைந்து முக்தியைப் பெறுதல் ஆகும்.

சித்த மருத்துவம் கபிலர் என்ற சித்தரால் உருவாக்கப் பட்ட சம்க்யா (Samkya) முறையின் அடிப்படைகளில் வேரூன்றியது என்று ஒருசிலர் கருதுகின்றனர். அதாவது வேதத்தோடு தொடர்பில்லாத சிந்து சமவெளி நாகரிகத்தின் தந்திரிகத் தத்துவ மருத்துவ முறையாகச் சித்தமருத்துவம் கருதப்படுகிறது. இருப்பினும் இது தமிழ் மருத்துவம் என்றும் அழைக்கப்படுகிறது. அனைத்து அடிப்படை சித்த மருத்துவச் செய்திகளும் நூல்களும் தமிழ் மொழியில்தான் காணப்படுகின்றன.

சித்தர்கள் மிகச்சிறந்த அறிவாளிகள். இயற்கை யோடு இயைந்த வாழ்வு என்பதே நம் முன்னோர்களின் வாழ்க்கைப்பாதை.

அருகம்புல்லும் அருமருந்தாகும்
ஆலம் விழுதும் பற்களைக் காக்கும்
இளமை காக்கும் தேனும் தினையும்
ஈளையா ? இருமலா ? ஆடாதொடை
உடலைத் தேற்றும் தேத்தாங்கொட்டை
ஊதல் குறைய ஓமக்குடிநீர்
எலுமிச்சை சாறு மயக்க மறுக்கும்
ஏழைக்குச் சக்தி கீழாநெல்லி
ஐயமில்லை அழகிற்குப் பழங்கள்

என்ற அகரவரிசைப் பாடல் சித்த மருத்துவத்தின் பெருமையை உணர்த்துகிறது.

"உணவே மருந்தாகும்" எனும் அடிப்படையில் அறுசுவை உணவினால் உடல் நலம் பேணும் வழிமுறைகளை விளக்குவது சித்த மருத்துவம்.

தமிழில் பிறந்த தொன்மை ஏடுகளான தொல்காப்பியம், திருக்குறள், திருமூலரின், திருமந்திரம், சித்தர் பாடல்கள் போன்றவற்றுள் பேசப்படும் நுணுக்கமான கருத்துகளை அறிந்தால் சித்த மருத்துவத்தின் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.

மூலிகைகள் மட்டுமின்றி இரும்பு, பொன், வெள்ளி, செம்பு, பாதரசம் முதலான பல கனிமங்களையும் (Metals) உடலுக்கு ஊறு செய்யா வண்ணம் நீறு (பஸ்பம்) ஆக்கி மருந்தாகப் பயன்கொள்ளும் அறிவும் அன்றைய தமிழர்களுக்கு இருந்திருந்தது என்பதும் நமக்கு வியப்பளிக்கிறது.

## இன்றைய சூழல்

சித்த மருத்துவம் என்பது ஒரு மருத்துவ முறையன்று. அது ஒரு வாழ்க்கைக் கல்வி, வாழ்வுக்கு அழைத்து செல்லும் நல்ல மார்க்கம். இதனை உணர மறுத்ததன் விளைவே நோய்ப் பெருக்கத்திற்குக் காரணம் ஆகும். அதன் விளைவாக நம் வருமானத்தில் பெரும் பகுதியை மருத்துவச் செலவுக்கு பங்கிட்டு வருகிறோம்.

நம் முப்பாட்டன் சொத்தான சித்த மருத்துவத்தை அனுபவிக்கத் தெரியாமல் இறக்குமதி மருந்துகளின் "உடனடி நிவாரணம்" என்ற மாயைக்கு ஆட்பட்டு, நல்லதை இழந்துவிட்டு அல்லாததற்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறோம். அதற்குக் காரணம் நம்முடைய இயந்திர மயமான வாழ்க்கை முறையே ஆகும்.

இன்று "ஸ்கேன்" முதல் பல சோதனைகள் செய்து வந்துள்ள நோய் இன்னதென்று அறிய மருத்துவர்கள் தடுமாறுகின்றனர். பலமுறை தவறான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு நோயாளி துன்பப்படுவதும் நடக்கிறது. ஆனால் அன்றைய நாளில் நாடியைப் பிடித்துப் பார்த்து வந்துள்ள நோய் இன்னதென்று அறிந்து மருந்து அளித்தது அதிசயம் அல்ல. உண்மை என்பதை நம்பியாக வேண்டும்.

தமிழன் முதலில் தனக்குத் தானே மருத்துவம் செய்து கொண்டான். பின் பிறருக்கும் செய்தான். பல தாய்மார்கள் தாங்களே குடும்ப மருத்துவராக இருந்து கணவன், குழந்தைகள், உறவினர்கள் என அனைவருக்கும் மருத்துவம் பார்த்த காலம் போய், இன்றைய அவசர உலகில் ஏதோ ஒரு மருத்துவருக்காக ஏதோ ஒரு ஸ்கேன் சென்டருக்காக, ஏதோ ஒரு மருந்துக் கடைக்கு தாங்கள் கடினப்பட்டு உழைத்த பணத்தைப் பங்கு வைக்க முன்பதிவு செய்து காத்திருக்கிறார்கள்.

சித்த மருத்துவம் வந்த நோயைப் போக்குவதற்காக மட்டுமல்ல,நோயே வராமல் தடுப்பதற்கான வழிகளையும் கொண்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல் மருந்து உண்ணாமல் உணவையும் மருந்தாக்கித் தருகிறது. இதைக் கருத்தில் கொண்டு நம் முன்னோர் ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முன்னே உணவே மருந்து, மருந்தே உணவு என்றனர். நமது மூதாதையர்கள் வீட்டுக் கொல்லைப்புறத்திலும், தோட்டத்திலும் வனாந்திரங் களிலும், மலைகளிலும் மருத்துவ மூலிகைகளை வளர்த்திருக்கின்றனர். அது இயற்கையோடு இயைந்த வாழ்வாக இருந்தது. இன்று ஆய்வுக் கூடங்களில் ரசாயண

மாற்றங்களில் தயார் ஆகும் மருந்துகளை நம்பியே நம் வாழ்வு அமைந்துள்ளது.

இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கை நடத்தியபோது நோய்கள் குறைந்திருந்தன. இயற்கைக்கு மாறாக வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டபின் நோய்கள் நெருங்கி வந்து அடிக்கடி அச்சமூட்டுகிறது. இதனால் மருத்துவமனைகள் பெருகிவிட்டன. மருத்துவம் சேவையாக இருந்தது போய் பெரும் வருமானமுள்ள தொழிலாகிவிட்டது.

அண்மைக் காலங்களில் ஆங்கில மருந்துகள் பல நமது சித்த மருத்துவ மூலிகைகளைக் கொண்டே தயாரிக்கப்படுவதும் கவனிக்கத்தக்கதாகும். கொல்லையில் இருந்து நேரடியாக நாம் பயன்படுத்தி வந்த மூலிகைச் செடிகளை மருந்துப் புட்டிகளில் அடைத்து மாத்திரை யாகவும், டானிக்காவும் தந்து கொள்ளை லாபத்திற்கு விற்கின்றனர்.

நமது பாட்டன் சொத்தான வேம்புக்கும் மஞ்சளுக்கு மான காப்புரிமையை அயல்நாட்டினர் கோருவதன் மர்மமே நமது மருந்துகளுக்கு உள்ள மகத்துவம்தான் என்பதை இனியாவது நாம் உணரவேண்டும்.

இன்றைய காலச்சூழல் மாறிக்கொண்டு வருகிறது. நாம் தொலைத்த பாரம்பரியத்தை அனைவரும் தேடிச் செல்கின்றனர். மக்களிடையே விழிப்புணர்வு அதிகமாகி வருகிறது. ஆங்கில, அந்நிய மருத்துவ முறைகளுக்குத் தமிழ் மருத்துவமான சித்த மருத்துவம் சற்றும் குறைந்ததல்ல என்பதை மக்கள் உணர்ந்து வருகின்றனர்.

தமிழக அரசும் இன்றைய சித்த மருத்துவர்களின் மனந்திறந்த மருத்துவப் பங்களிப்பும் மக்களை மீண்டும் சித்த மருத்துவத்தின் திசைக்கு இயற்கையோடு இணைந்து வாழும் தன்மைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றன. நாமும் நம்முடைய பாரம்பரிய மருத்துவத்தை பயன்படுத்தி எவ்வித பக்க விளைவுகளும் இல்லாமல் வளமோடு வாழ்வோம்.

# தமிழ் மருத்துவ முறைகள்

## 1. சௌபாக்ய லேகியம்

***தேவைப்படும் பொருட்கள் :***

| | |
|---|---|
| (a) சாதிக்காய் | பலம் 1 (41 கிராம்) |
| மேல்தோல் சீவிய சுக்கு | ,, |
| ஏலரிசி | ,, |
| மிளகு | ,, |
| ஓமம் | ,, |
| தக்கோளம் | ,, |
| மேல்தோல்சீவிய அதிமதுரம் | ,, |
| தான்றிக்காய்த்தோல் | ,, |
| சாதிபத்திரி | ,, |
| தாளிசபத்திரி | ,, |
| நெல்லி வற்றல் | ,, |
| மஞ்சள் கடுக்காய்த்தோல் | ,, |
| (b) இஞ்சி | பலம் 10 |
| (c) சீனி சர்க்கரை | 20 பலம் |
| நெய் | 7½ பலம் |
| தேன் | 5 பலம் |

***செய்முறை***

(a) இதிலுள்ள சரக்குகளை எல்லாம் வெயிலில் உலர்த்தி, கல்லுரலில் இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். இஞ்சியை நெய்யில் சிவக்க வறுத்து இடித்துத் தெள்ளி, அதிலுள்ள நார் முதலியவைகளை நீக்கிச் சுத்தப்படுத்தி மேற்கண்ட சூரணத்துடன் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

---

சுவடி தலைப்பில் : உ அரி ஓம் பிஸ்மில்லாஹி

வைத்தியத் திருப்புகழில் சொல்லப்பட்டிருக்கும் முறைகள் என்றுளது.

(c) இதிலுள்ள சர்க்கரையில் கொஞ்சம் நீர் விட்டு அடுப்பிலேற்றி சிறு தீயாக எரித்து சர்க்கரை கரைந்து இரண்டு கொதி வந்தவுடன் மெல்லிய சீலைத்துணியில் வடிகட்டி திப்பியை நீக்கிவிட்டு பாகை அடுப்பிலேற்றி பாகு பதமானவுடன் முன் சூரணத்தை அதில் சிறுகச் சிறுக தூவி மரமத்தால் கடைந்து எல்லாம் கலந்தபின் மிகுந்திருக்கிற நெய்யைவிட்டு கிளறி கீழிறக்கி தேனையும் விட்டு நன்றாக கலக்கி ஆறியபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

***பிரமாணம்:*** *விராகன் எடை 1*

***உபயோகம்:*** பித்த வாய்வு, பித்த தோசம், பித்தத்தினால் உண்டாகும் தாகம், பித்தபேதி, உஷ்ணபேதி, அஜீரணம், மந்தாகினி ரோகம், வயிற்று உப்பிசம், சாப்பிட்டவுடன் உண்டாகும் வயிற்று நோய், வயிற்றுக்கணம் முதலிய ரோகங்கள் தீரும்.

***பத்தியம்:*** இச்சாபத்தியம்.

***இஞ்சியைப் பாகப்படுத்தும் முறை:***

தேவையான அளவு இஞ்சியை மேல்தோல் சீவி, சிறுவில்லைகளாகத் துண்டித்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு அதில் முசுமுசுக்கை இரசத்தை விடவேண்டும். இந்த சாறானது இஞ்சியின்மேல் மிதக்கும்படியாக இருக்க வேண்டும். ஆறுமணி நேரம் ஊறவைத்து வெயிலில் ஈரம் உலரும்படியாக உலர்த்திக்கொள்ள வேண்டும். பிறகு இவ்விதமே எலுமிச்சைப்பழம் சாற்றில் ஊறவைத்து உலர்த்திக்கொள்ள வேண்டியது. இவ்விதம் செய்தபின்பு பசுவின் புளித்த மோரிலும், முன்மாதிரி போலவே செய்து நன்றாக உலர்த்தி மேற்கண்ட எடை நிறுத்தெடுத்து,

நெய்யில் வறுத்து, பொடித்து மேற்படி பாகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டியுது.

***குறிப்பு:*** மந்தாரக்காச ரோகமானது மகா கஷ்ட ரோகங்களில் ஒன்றானது. ஆங்கிலப் பண்டிதர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த கொடிய ரோகமானது பொதுவாய் சொல்லில் ஆங்கிலேய வைத்திய முறைப்படி உபயோகப்படுத்தப்படும். பெப்சின்- பிஸ்மத் முதலிய பல சிகிச்சைகளுக்கு முற்றும் வசப் படாமலே இருக்கிறது. மேல்கண்ட அவுஸ்தத்தி னாலோ பெரும்பான்மையும் அதிக பிரயோசனமும் உண்டாகி வருகிறது.

இந்த அஜீரண ரோகமானது குன்ம ரோகத்திற்கு ஏதுவாகி விடுகிறது. உண்மையில் இதனை ஆரம்ப குன்ம ரோகம் எனச் சொல்லலாம். ஆகையால்தான் இந்த கஷ்ட ரோகத்தின் சிகிச்சையை இந்நூலில் முதலாவது ஆரம்பத்தில் தானே எடுத்து சொல்லியிருக்கின்றனர். சுபாபமாகவே உஷ்ணமான தேகிகளுக்கு இந்த ரோகம் கண்டால் இஞ்சி முதலிய உஷ்ண மருந்துகள் சில சமயம் ஒவ்வாது. அத்தகையவர்களுக்குக் கீழ்கண்ட பாகப்படி இஞ்சியைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும்.

***இஞ்சியைப் பக்குவப்படுத்தம் முறை:***

இஞ்சி பருமனானதும், அதிக முற்றலும், அதிக இளசும் இல்லாத நடுத்தரமான இஞ்சியை மணலைப் பரப்பி அதற்குள் புதைத்து மேலும் மணலைக் கொட்டி லேசாகப் பரப்பி வைக்கோலைத் தெளித்து, அதன்மேல் தண்ணீரைத் தெளித்துவிட வேண்டும். காலையில் ஒருவேளையும், மாலையில் ஒரு வேளையும் தண்ணீரைத் தெளித்து வர வேண்டும். இவ்விதம் தெளித்து வந்தால்

சுமார் இரண்டு வாரத்திற்குள் இஞ்சிகளில் முளை உண்டாகிவிடும். இரண்டொருநாள் முன்பின் ஆன போதிலும் முளை கண்டால் பக்குவம் என்று அறிந்து எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்விதம் செய்வதால் இஞ்சியில் உள்ள உஷ்ண சத்து சாந்தமாகி போகும். பிறகு முன் சொல்லி இருக்கிறது போல் முசுமுசுக்கைசாறு, எலுமிச்சை பழச்சாறு, பசுவின் புளித்த மோர் ஆகியவை களில் பாகப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்விதம் செய்வதால் எந்தவித உஷ்ணமான தேகிகளுக்கும் அது பொருந்தும்.

### *சௌபாக்கிய லேகியத்தைப் பலமுள்ளதாகச் செய்யும் முறை*

இஞ்சியை கீழ்க்கண்டபடி பாகப்படுத்தி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

### *இஞ்சியைப் பாகப்படுத்தும் முறை:*

நடுத்தரமான இஞ்சியின் மேல்தோலைச் சீவி மெல்லிய சிறுதுண்டுகளாக செய்து பத்து பலம் நிறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். தண்ணீர் கலப்பில்லாத பசுவின்பால் 2½ படி இவ்விரண்டையும், ஈயம் பூசின செம்பு பாத்திரத்தில் போட்டு அடுப்பு ஏற்றி சிறுதீயாக எரித்து வர வேண்டும். அப்போது கைவிடாமல் மரத் துடுப்பால் துளாவி வர வேண்டும். அப்படி கைவிடாமல் துளாவி வராவிட்டால் பாலானது கட்டி கட்டியாகி விடும். அல்லது அடிப்பிடித்து தீய்ந்து கெட்டுப்போகும். இவ்விதம் கெட்டுப்போகாமல் அடிக்கடி துளாவி வருவதால் பாலெல்லாம் திரண்டு கெட்டியாகி விடும். கெட்டியான பதத்தில் எல்லாவற்றையும் தனியே எடுத்து குளிர வைக்க வேண்டும்.

சுத்தமான வேறு ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் நெய்யை விட்டு நெய் காய்ந்தவுடன் மேற்படி பாத்திரத்தில் கொஞ்சம் போட்டு கொஞ்சம் சிவக்கிற வரையில் வறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதமே மற்ற பால் திரட்டையும் கொஞ்சம் கொஞ்சமாக போட்டு சிவந்த பதமாக வறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். முடிவாக எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அம்மியில் வைத்து மைபோல் அரைத்து எடுத்து முன்சொன்ன சூரணங்களுடன் சேர்த்து முன் சொன்னபடி லேகியம் செய்துகொள்ள வேண்டும். இந்தப் பாகம் செய்தால் இன்னும் பத்து பலம் சர்க்கரையை அதிகமாகச் சேர்த்து செய்துகொள்ள வேண்டியது. பால் திரட்டை வறுக்கிறதற்கு நெய்யும் அதிகமாகத் தேவைப் படும். ஆகையால் செல்லத்தக்க அளவு நெய்யை அதிகமாக சேர்த்துக்கொள்ள வேண்டியது. இந்த பாகத்தைக் கொஞ்சம் ஜாக்கிரதையுடன் செய்ய வேண்டியது. இதன் பக்குவம் முதலியவைகள் அனுபவ சாலிகளுக்கு நன்றாக தெரிந்திருக்கும். புதிதாய் செய்கிற வர்களுக்கும் இரண்டொரு தடவை அடுத்தடுத்து செய்தால் கைதேர்ந்தவர்களாகி விடுவார்கள்.

இந்த பாகப்படி செய்கிற இலேகியத்தால் மேற்கண்ட ரோகங்கள் தீர்வதுடன் தேகபலம், தேக திடம், தேகமனோ உற்சாகம் முதலியவை உண்டாகி தாது விருத்தியும் அதிகரிக்கும். பால் சீரணம் ஆகாத சுபாவம் உடையவர்கள் இதனை சில நாள் உபயோகித்து பாலை படிப்படியாக அதிகப்படுத்தி செய்து வருவதினால் பாலும் சீரணமாகும். சக்தி உண்டாகிவிடும்.

---

## 2. சீனக்கிருத லேகியம்

***கீழ்க்கண்டபடி பாகப்படுத்தின***

| | | | |
|---|---|---|---|
| (a) | பரங்கிப்பட்டை சூரணம் | பலம் 5 | |
| (b) | சோம்பு | 1 பங்கு | |
| | சிறுநாகப்பூ | ,, | |
| | செண்பகப்பூ | ,, | |
| | அரிசி திப்பிலி | ,, | |
| | இலவங்கம் | ,, | |
| | இலவங்கப்பட்டை | ,, | |
| | மேல்தோல் சீவிய சுக்கு | | பலம் 1 |
| | மேல்தோல் சீவிய அதிமதுரம் | | ,, |
| | மஞ்சள் கடுக்காய்த்தோல் | | ,, |
| | வால்மிளகு | | ,, |
| (c) | குங்குமப்பூ | | ,, |
| | கல்மதம் | | ,, |
| (d) | பசுவின் நெய் | 20 பலம் | |
| | சீனி சர்க்கரை | 15 பலம் | |
| | தேன் | 8 பலம் | |

***செய்முறை***

(b) இதிலுள்ள சோம்பு முதல் எல்லாவற்றையும் வெயிலில் உலர்த்தி கல் உரலில் இடித்து வஸ்திரக்காயம் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

(c) இதிலுள்ள குங்குமப்பூவை சிறிது தண்ணீர் சேர்த்து மைபோல் அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும். கல்மதத்தை கல்வத்தில் பொடித்து வஸ்திரக் காயம் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு,

(a)இதிலுள்ள சூரணத்துடன் (b)இதிலுள்ள சூரணத்தை ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். (d)இதிலுள்ள நெய்யையும், சர்க்கரையையும் ஒன்றாய் சேர்த்து அடுப்பிலேற்றி சிறுதீயாய் எரித்து நெய்யில் சூடு உண்டாகி கொதி எழும்பினவுடன் மேற்படி சூரணங்களை கொஞ்சம் கொஞ்சமாக சிறுகத் தூவி மரமத்தால் கடைந்து நீர் சுண்டி நெய் புறப்படும் சமயத்தில் இறக்கி (c) இதிலுள்ளவைகளைச் சேர்த்து கிளரி தேனைவிட்டு கீழ்மேலாக திருப்பி நன்றாக கலந்து ஆறியபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

***பிரமாணம்:*** *விராகன் எடை 2-3*

**உபயோகம்:** பிரமேகம், கிரந்தி ரோகம் ஆகியவைகள் தீரும். மேக வியாதி சம்மந்தங்களினால் உண்டான தாது நஷ்டம் நீங்கும். ரத்தம் கெட்டு உண்டான சொரி, சிரங்கு, புண் முதலானவை குணமாகும். மேகவாய்வு, மேகஊரல், மேகசூளை, மேகரணம், மேகக்கட்டி ஆகியவைகள் தீர்ந்து இரத்தம் சுத்தப்படும். இரத்த விருத்தி உண்டாகி, இந்திரியம் விழைந்து ஆண்மை அதிகப்படும். தேகத்தில் தங்கத்தைப்போல் பளபளப்பும் பளிங்கைப்போல் காந்தியும் உண்டாகும்.

தேகம் கல்லைப்போல் இறுகி வஜ்ஜிர காயமர்கும். வெட்டை சூட்டினால் உண்டான தாது நஷ்டத்திற்கு இது சஞ்சீவிற்கு ஒப்பானது.

***பத்தியம்:*** வியாதி பலத்திற்கும், தேக சுபாவத்திற்கும், தகுந்ததுபோல், புளி, அகத்திக்கீரை, பரங்கிக்காய், பாகற்காய், பூசணிக்காய், உலர்ந்தமீன் (கருவாடு) ஆகியவைகளை நீக்க வேண்டும்.

***2-ஆவது பரங்கிப்பட்டை பக்குவம்:***

இதனை இன்னும் பலமானதாகவும், ருசிகரம் உள்ளதாகவும் செய்து கொள்ள வேண்டுமானால் கீழ்க்கண்ட பாகப்படி பரங்கி சக்கையைப் பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும்.

இதில் சேர்க்கப்படும் கல்மதத்திற்கு பதிலாக நமது அனுபோக வைத்திய நவநீதத்தில் இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கும் கல்மத பற்பத்தை சேர்த்து உபயோகிப்பதினால் விசேஷ குணம் உண்டாகும் என்பது நாம் இங்கு எடுத்துச் சொல்லாமலே விளங்கும்.

***பரங்கிப்பட்டை பக்குவம்:***

உளுத்துப் போனதாக இல்லாமல் புதிதான பரங்கி சக்கையை இடித்து தூள் செய்து வஸ்திரகாயம் செய்த சூரணம் பலம் -10, ஒரு படி பசும்பாலில் ½ படி தண்ணீர் விட்டு ஒரு மண்பானையில் இட்டு அதன் வாயில் மெல்லிய வஸ்திரத்தால் வேடுகட்டி அதன்முன் சுத்தப்படுத்தின சூரணத்தை வைத்து வாயகன்ற சட்டியால் மூடி அடுப்பிலேற்றி சிறுதீயாக எரித்து வர வேண்டும்.

இவ்விதம் சிறுதீயாய் எரித்து வந்தால் இதற்கு பெயர் பிட்டு-அவியலாகும். சுமார் அரைபாகம் பால் சுண்டிய வுடனாவது அல்லது மேலே இருக்கிற சட்டியைத் திறந்து பார்த்தால் மாவானது வெந்த பதமாய் இருக்கும் போதாவது எடுத்து நிழலில் உலர்த்த வேண்டும். ஈரமில்லாமல் நன்றாக உலர்ந்தபின் அம்மியில் அல்லது கல்வத்தில் வைத்து கட்டிகள் இல்லாமல் பொடித்து முன் பாகத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பரங்கிப்பட்டை-10 பலம் சூரணம் செய்து பசுவின்பால் படி $2\frac{1}{2}$ இதில் மேற்படி சூரணத்தைப் பாலில் கரைத்து ஈயம் பூசின தாமிரப் பாத்திரத்தில் விட்டு, அடுப்பேற்றி சிறுதீயாய் எரித்து கைவிடாமல் துழாவி வர வேண்டும். துளாவுதற்கு மறந்தால் அடிபிடித்து வீணாகிப் போகும். ஆகையால் கவனத்துடன் எரித்து துளாவி வந்தால் பாலெல்லாம் திரண்டு, திரட்டுப் பாலாகிக் கெட்டிப்பாலாகி, கட்டி பதமானவுடன் இறக்கி ஆறவிட்டு தனியே எடுத்துக்கொள்ள வேண்டும். வேறு ஒரு பாத்திரத்தில் நெய்யை விட்டு அடுப்பிலேற்றி நெய் காய்ந்த பின்பு மேற்படி பால்திரட்டில் கொஞ்சம் போட்டு சிவந்த பதமாக வறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதமாக மீதமுள்ள பால்திரட்டை சிறுகச்சிறுகப் போட்டு சிவந்த பதமாக வறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு மேற்கண்ட பாகத்தில் சேர்த்து அங்கு சொல்லியிருக்கிறபடி செய்துகொள்ள வேண்டும். இதற்காகச் செல்லும் நெய்யானது பிரத்தியேகம் முன் சொல்லியிருக்கிற நெய்யானது முன் மருந்து லேகியத்துக்கு குறைக்கலாகாது. அந்த அளவு குறைந்தால், மருந்து கெட்டுப் போகும். விருப்பமானவர்கள் இன்னும் பத்து பலம் சர்க்கரையை அதிகப்படுத்திக்கொள்ளலாம். சர்க்கரையை அதிகப் படுத்தாமல் அங்கு சொல்லி யிருக்கிற அளவோடும் நிறுத்திக்கொள்ளலாம்.

# 3. மதன காமேசுர லேகியம்

| | | |
|---|---|---|
| (a) | மேல்தோல் சீவின அதிமதுரம் | பலம் ½ |
| | நற்சீரகம் | ,, |
| | இலவங்கம் | ,, |
| | மிளகு | ,, |
| | மஞ்சள் கடுக்காய்த்தோல் | ,, |
| | தான்றிக்காய்த்தோல் | ,, |
| | நெல்லிமுள்ளி | ,, |
| | சிறுதேக்கு | ,, |
| | சிறுநாகப்பூ | ,, |
| | மேல்தோல் சீவின சுக்கு | ,, |
| | கோஷ்டம் | ,, |
| | பெருஞ்சீரகம் | ,, |
| | யானைதிப்பிலி | ,, |
| | ஏலரிசி | ,, |
| | குங்குமப்பூ | ,, |
| | தக்கோளம் | ,, |
| | தாளீசபத்திரி | ,, |
| | செண்பகப்பூ | ,, |
| | சாதிக்காய் | ,, |
| | அமுக்கிராக்கிழங்கு | ,, |
| | கொத்தமல்லி | ,, |
| | மதன காமேசுர பூ | ,, |
| | நீர்முள்ளி விதை | ,, |

கீழ்க்கண்ட பாகப்படி சுத்தி செய்த கஞ்சா ½ பலம்

| | | |
|---|---|---|
| (b) | உளுந்த மாவு | ½ பலம் |
| | அபின் | ,, |
| | திராட்சை பழம் | ½ பலம் |

| | | |
|---|---|---|
| (c) | இலவம்பிசின் | ½ பலம் |
| | முருங்கைப்பிசின் | ,, |
| | கருவேலம்பிசின் | ,, |
| | ஆவாரம்பிசின் | ,, |
| | மாம்பிசின் | ,, |
| | சீனக்கற்கண்டு | 20 பலம் |

***செய்முறை***

(a) இதிலுள்ள சரக்குகள்........................எல்லா சரக்குகளையும் வெயிலில் உலர்த்தி இடித்து வஸ்திரக் காயம் செய்து கொள்ள வேண்டும். (b) இதில் உள்ள திராட்சை பழத்தை அம்மியில் வெண்ணெய்போல் அரைத்துக்கொள்ள வேண்டும். அபினில் கொஞ்சம் தண்ணீர் விட்டு கரைத்து வடிகட்டி திப்பி நீக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

(c) இதில் உள்ள பிசின் வகைகளை நெய்யில் வறுத்து அம்மியில் வைத்து தண்ணீர் விடாமல் அரைத்துக் கொள்ள வேண்டும். பிறகு எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். கற்கண்டை இடித்துத் தூள் செய்து அதில் கால்படி தண்ணீர்விட்டு அடுப்பேற்றி சிறுதீயாக எரித்து இரண்டு கொதி வந்து கற்கண்டெல்லாம் கரைந்த பின்பு மெல்லிய வஸ்திரத்தில் வடிகட்டி திப்பி முதலியவைகளை நீக்கிவிட்டு, பாகை மறுபடியும் அடுப்பேற்றி காய்ச்சி பாகுபதம் ஆனவுடன் மேற்படி சூரணத்தை சிறுகச் சிறுக தூவி நன்றாகக் கிளரி ஆற வைத்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

***பிரமாணம்:*** ¼, ½ விராகன் எடை இதனை உட்கொண்டு இதன்மேல் காய்ச்சிய கற்கண்டு இட்ட பாலை சீரண சக்திக்கு தகுந்தபடி ½, 1 ஆழாக்கு அதாவது மாகாணிப்படி அரைக்கால் படியாம் இவ்விதமாக பாலை சாப்பிட்டு வரவேண்டும்.

**உபயோகம் - தீரும் நோய்கள்:**

மேக ரோகங்கள், பிரமேக ரோகங்கள், இந்திரிய சிராவுக ரோகங்கள், துரித ஸ்கலித ரோகங்கள், சொப்பன ஸ்கலித ரோகம், இந்திரிய கமலங்களின் தளர்ச்சி, நீர்த்தாரை தளர்ச்சி, அதிமூத்திர ரோகம், மதுமேகம் ஆகியவைகள் தீரும். தாது விருத்தி, தம்பன சக்தி முதலியவைகள் உண்டாகும். தேகபலம், தேக திடம் முதலியவைகளும் உண்டாகும்.

***பத்தியம்:*** இதனை உபயோகித்து வரும்போது பால் பாயாசம், மிட்டாய் தினுசுகள், வாதுமை அல்வா, கோதுமை பால் அல்வா முதலியவைகளை விசேஷமாக உபயோகித்து வர வேண்டும். கடுகு, நல்லெண்ணெய், எண்ணெய் சேர்த்த பதார்த்தங்கள் எள்சேர்ந்த பதார்த்தங்கள், புளி, புளிப்பான வஸ்துக்கள் ஆகியவைகளை அறவே நீக்க வேண்டியது. நெய்யை பதார்த்தங்களுடன் சேர்த்து சமைத்து உபயோகிக்க வேண்டியது. நெய்யை தனியே உபயோகிக்காமல் நீக்கி வைப்பது உத்தமம்.

***குறிப்பு :*** இது இலாகிரி உள்ள லேகியம் ஆகையால் பழக்கமில்லாதவர்கள் மிகவும் குறைந்த அளவு உபயோகிப்பது மட்டுமின்றி வெறும் வயிற்றில் சாப்பிடாமல் உணவு செய்தபின்பு சாப்பிடுவது உத்தமம். இதில் அபின் சேர்ந்திருப்பதால் ஏதேனும் ஆட்சே பனை..................................ஆனால் அதற்கு மாற்றாக குங்குமப்பூ, சுக்கு முதலியவை சேர்ந்திருப்பதால் அதனால் தோஷம் ..............................லேகியமானது சிறிது கசப்பாக இருக்கும். ஆகையால் சர்க்கரை முதலிய இனிப்பு வஸ்துகளுடனும் சேர்த்து உட்கொள்வது உத்தமம்.

**கஞ்சா சுத்தி:** பிசின் பற்றுள்ள சடைக்கஞ்சா பலம்-2 இதிலுள்ள விதை, காம்பு முதலியவைகளை ஆய்ந்து பொறுக்கி எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். கால்படி தண்ணீரை குமிழி எழும்பும்படியாக கொதிக்க வைத்து கீழிறக்கி மேற்படி கஞ்சாவை போட்டு பத்து நிமிடம் மூடி வைக்க வேண்டும். பிறகு ஆறியபின் பிசைந்து தண்ணீரை இறுத்துவிட வேண்டும். இவ்விதமே இன்னும் இரண்டு தடவை கொதிகலத்தில் போட்டு ஊறவைத்து இறுத்துவிட வேண்டும். ஆகக்கூடி மூன்று தடவையும் இவ்விதம் செய்து தண்ணீரை நன்றாக இறுத்துவிட்டு வெயிலில் உலர்த்தி, கொஞ்சமும் ஈரம் இல்லாமல் உலர்ந்தபின் அவசியமான எடை நிறுத்தெடுத்து ஓட்டில் மணம் எழும்பும் பதமாய் வறுத்து மேற்படி சரக்குகளுடன் சேர்த்து இடித்துக்கொள்ள வேண்டியது.

**2-வது கஞ்சா சுத்தி :** குச்சி, காம்பு, விதை முதலியவைகளை நீக்கின கஞ்சாவை, குளிர்ந்த தண்ணீரில் போட்டு கையால் பிசைந்து தண்ணீரில் வர்ணம் வந்தவுடன் அந்த தண்ணீரை இறுத்துவிட்டு மறுபடியும் முன்புபோல் தண்ணீரை விட்டு முன்பு போல் பிசைந்து தண்ணீரில் வர்ணம் வந்தவுடன் இறுத்துவிட வேண்டும். இப்படி கஞ்சாவில் விட்ட தண்ணீரானது எவ்வித வர்ணமும் இன்றி சுத்தமாய் இருக்கிற வரையில் பிசைந்து கழுவ வேண்டியது. பிறகு சுத்தமாகப் பிழிந்து வெயிலில் உலர்த்தி ஈரம் இல்லாமல் உலர்ந்தபின்பு அவசியமான எடையில் நிறுத்தெடுத்து ஓட்டில் மணம் வரும்படியாக வறுத்து, பொடித்து சேர்த்துக்கொள்ள வேண்டியது. இதன் சுத்தி கிரமம் அநேகம். ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையாக செய்து கொள்வார்கள். ஆயினும் மேற்கண்ட இரு வகைகளும் மேற்கண்ட பாகத்திற்கு போதுமானவைகள்.

**குறிப்பு:** குங்குமப்பூவிற்குப் பதிலாக கஸ்தூரி மஞ்சள் சேர்த்துக்கொள்ளலாம்

# 4. சர்வோஷ்ண நிவாரணத் தைலம்

| | | |
|---|---|---|
| (a) | கையாந்தகரைச்சாறு | வகை 1க்கு 1 படி |
| | பொன்னாங்கண்ணிச்சாறு | ,, |
| | அப்பைகோவைக்கிழங்குச்சாறு | ,, |
| | மெருகன்கிழங்குச் சாறு | ,, |
| | பெருமரத்து இலைச்சாறு | |
| | (அல்லது) | |
| | பெருமரப்பட்டை கசாயம் | ,, |
| | எள் எண்ணெய் | 1 படி |
| (b) | சதகுப்பை | 1 பலம் |
| | தக்கோலம் | ,, |
| | மேல்தோல் சீவின அதிமதுரம் | ,, |
| | மேல்தோல் சீவின சுக்கு | ,, |
| | அரிசி திப்பிலி | ,, |
| | மிளகு | ,, |
| | தகரவிதை | ,, |
| | கோரைக்கிழங்கு | ,, |
| | மஞ்சள் கடுக்காய்த்தோல் | ,, |
| | கோஷ்டம் | 1 பலம். |

***செய்முறை*** (a) இதிலுள்ள திரவங்களை எல்லாம் எண்ணெயுடன் கலந்து தைல பாத்திரத்தில் விட்டு விட வேண்டும். (b) இதிலுள்ள சரக்குகளை எல்லாம் இடித்துத் தூள் செய்து மெல்லிய.............. தெல்லி எடுத்து பசுவின் பாலை சிறுகச்சிறுக விட்டு அம்மியில் வைத்து அரைத்து வெண்ணெய் போல் ஆனபின்பு மேற்படி............ட்டுடன் கரைத்து வெயிலில் வைக்கவேண்டும். மண், தூசிகள் முதலியது விழாதபடி அந்தப் பாத்திரத்தின் வாய்க்கு மெல்லிய வஸ்த்திரத்தால் வேடுகட்ட வேண்டும். பிரதி தினமும் இரண்டு மூன்று தடவைகள் நன்றாய் கலக்கியும்

வரவேண்டும். கடும் வெயிலாய் இருந்தால் மூன்றுநாள் போதுமானது. சாந்தமான வெயிலாக இருந்தால் ஆறுநாள் ஏழுநாள் வைக்க வேண்டியது. பிறகு அடுப்பிலேற்றி சிறுதீயாய் எரிக்க வேண்டியது. எரித்து சாரெல்லாம் சுண்டி கடுகு திரள் பதத்தில் இறக்கி கம்பளியால் எண்ணெயை வடிகட்டி வேறு பாத்திரத்தில் விட்டு வாய் பந்தனம் செய்து தானியப்புடம் வைத்துக் கொள்ள வேண்டியது. சக்தியுள்ளவர்கள் இதில் குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக் கற்பூரம், வகைக்கு விராகன் எடை அரை வீதம் பொடி எடுத்து தைலத்தில் தூவி தானியபுடம் வைத்தெடுத்து உபயோகிப்பதனால் சிறந்த குணத்தைக் கொடுக்கும். இன்னும் சமயோசிதம் போல் தாழம்பூ, மரிக்கொழுந்து, ரோசாப்பூ முதலியவைகளை வாசனையுங்கூட்டி உபயோகிக்கலாம். அப்படி செய்வதால் தைலமானது மிகவும் சுகந்தமுள்ளதா யிருக்கும்.

***உபயோகம் :*** இத்தைலத்தை சமயோஜிதம் போல வாரத்திற்கு இரண்டு தடவை அல்லது ஒரு தடவை சிரசு, தேகம் முதலிய ஸ்தானங்களில் தேய்த்துக்கொண்டு சீயக்காய் இட்டு தேய்த்து இளவெந்நீரில் ஸ்நானம் செய்து வர வேண்டும். இதனால் பித்தவெறி, பைத்தியம், அறிவு பைத்தியம், ஞானப் பைத்தியம், வெறி பைத்தியம், தலைவலி, நடுக்கல் ரோகம். தேக குத்து, தேக குடைச்சல், செவிநோய், கண்ணோய், சுருக்கிச் சொல்லில் கண்டத்துக்கு மேற்பட்ட சிரசின் வியாதிகளெல்லாம் நீங்கி மூளை பலம்பட்டு நரம்புகள் முறுக்கேறி தேகபலம் தேகதிடம் முதலியவைகள் உண்டாகும். இன்னும் அஸ்திச்சூடு, அஸ்தி வெட்டை, எலும்புருக்கி ரோகம், சயரோகம் முதலிய பல உஷ்ணம் சம்பந்த ரோகங்கள் தீரும்.

16

**பத்தியம் :** அவரைப் பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, மணத்தக்காளி வத்தல், துவரை, சிறுபயறு, சர்க்கரை, பசுநெய், கௌதாரி, காடை, உடும்பு முதலியவைகளும் இவை போன்றவைகளும் ஆகும். பாகற்காய், கத்தரிக்காய், கொத்தவரங்காய், புளி, பால், தயிர், கசப்புத் திரவியம், கீரைத்தண்டு, அகத்திக்கீரை, நண்டு, மீன், கோழி, ஆடு முதலியவைகளும் ஆகாது. பகல் நித்திரை, வெயிலில் திரிதல், மிகு காற்றில் திரிதல், ஸ்திரீ சம்மந்தம் இவைகளை அறவே நீக்க வேண்டியது.

# 5. ஜன்னி மாத்திரை

| | | |
|---|---|---|
| (a) | பொரித்த வெங்காரம் | ½ பலம் |
| | சுத்தி செய்த லிங்கம் | ,, |
| | சுத்தி செய்த ரசம் | ,, |
| | சுத்தி செய்த கந்தகம் | ,, |
| (b) | சங்கவேர்ப்பட்டை | ½ பலம் |
| | கண்டங்கத்திரி வேர்ப்பட்டை | ,, |
| | இலவங்கம் | ,, |
| | இலவங்கப்பட்டை | ,, |
| | மிளகு | ,, |
| | அரிசி திப்பிலி | ,, |
| | கண்டந்திப்பிலி | ,, |
| | கோஷ்டம் | ,, |
| | மேல்தோல் சீவின சுக்கு | ,, |
| | குங்குமப்பூ | ½ பலம் |
| | எலுமிச்சை பழச்சாறு | செல்லத்தக்கது. |

இவைகளை தனித்தனியே சூரணமாகச்செய்து ½பலம்

***செய்முறை:*** இரசத்தையும், கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு மெதுவாய் அரைத்து நன்றாய் கருத்தவுடன் இலிங்கம் வெங்காரம் இவைகளையும் சேர்த்து அரைத்து நான்கும் நன்றாய் கலந்து பின்பு குங்குமப்பூவைச் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றை சிறுகச் சிறுக வார்த்து அரைத்து குங்குமப்பூவானது நன்றாய் மசிந்து போனபின் மற்ற (b) இதிலுள்ள சூரணங்களை எல்லாம் ஒன்றாகக் கலந்து அதில் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றை சிறுகச் சிறுக வார்த்து, நான்கு சாம நேரம் அரைத்து ஒரு குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி சீசாவில் பத்திரப்படுத்த வேண்டும்.

***பிரமாணம்:*** *மாத்திரை 1 - 3.*

***அனுபானம்:*** *தாய்ப்பால் (முலைப்பால்) 1 - 3.* இஞ்சி சுரசம், சுக்கு கசாயம் முதலியவைகளாம்.

***உபயோகம் :*** சுர ரோகங்கள், சன்னிபாத ரோகங்கள், அசீரண ரோகங்கள், வாய்வு ரோகங்கள் முதலிய அநேக ரோகங்கள் தீரும்.

***பத்தியம் :*** வியாதிக்கு தகுந்தபடியும், தேக பலத்திற்கு தகுந்தபடியும், பத்தியம் ஏற்படுத்த வேண்டும்.

## 6. வயிரவ மாத்திரை

| | |
|---|---|
| பொரித்த வெங்காரம் | ½ பலம் |
| சுத்தி செய்த பொன்னரிதாரம் | ,, |
| சுத்தி செய்த லிங்கம் | ,, |
| சுத்தி செய்த நாபிச் சூரணம் | ,, |
| மேல்தோல் சீவின சுக்கு சூரணம் | ,, |
| அரிசி திப்பிலி சூரணம் | ,, |
| மிளகுச் சூரணம் | ,, |

பொன்னாங்கண்ணிச் சாறு
சங்கின் வேர்பட்டைச் சாறு
புங்கப்பட்டைச்சாறு
கஞ்சா இலைச்சாறு
வெண் நொச்சி மரப்பட்டைச்சாறு
கையாந்தகரைச்சாறு
எலுமிச்சம்பழச்சாறு
இவை செல்லத்தக்க அளவு.

***செய்முறை:*** பொன்னரிதாரத்தைக் கல்வத்திலிட்டு அரைத்து, மைபோல ஆனபின், வெங்காரத்தையும், லிங்கத்தையும், சேர்த்து அரைமணி நேரம் அரைத்து பிறகு மற்ற சூரணங்களை எல்லாம் ஒன்றாகக் கலந்து, சேர்த்து அரைமணி நேரம் அரைத்து மேற்கண்ட சாறுகளில் முறையே ஒவ்வொன்றாக தனித்தனியே சிறுகச் சிறுக விட்டு ஒவ்வொரு சாமம் அரைக்க வேண்டும். முடிவாக எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு இரண்டு சாம நேரம் அரைத்து அரை குன்றிமணி எடையுள்ள மாத்திரை களாகச் செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் பத்திரப்படுத்தவும்.

***பிரமாணம்:*** மாத்திரை 1 - 2.

***அனுபானம்:*** தாய்ப்பால் (முலைப்பால்) இலவங்க கசாயம், சுக்கு கசாயம், கண்டங்கத்திரி இலை சுரசம், ஓமக்கசாயம், பன்னீர், ஓமத்திராவகம் முதலியவைகளாம்.

***உபயோகம் :*** எல்லா வகை சுர ரோகங்களும் தீரும். சன்னி தோசம், கபரோகம், இருமல், இரைப்பு, சுவாசம் முதலியவைகளும் தீரும்.

***பத்தியம் :*** வியாதி பலத்திற்கும், தேக பலத்திற்கும் தகுந்தது போல், புளி, புகை முதலியவைகளை நீக்க வேண்டியது. இன்னும் அந்தந்த வியாதிகளுக்கு ஆகாத பதார்த்தங்களையும் நீக்கி வைக்க வேண்டியது.

***இலிங்க சுத்தி :*** இலிங்க பலம்-1. இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும். பளிங்கி சாம்பிராணி பலம்-2½, சூடம் பலம்-2½, இந்த இரண்டையும் தனித்தனியே தூள் செய்து, இந்த இரண்டையும் கலந்து ஐந்து பாகமாகச் செய்துகொள்ள வேண்டியது. ஒவ்வொரு பாகத்தையும் இரண்டு பங்காக்கி ஒரு பங்கை ஒரு பாத்திரத்தின் மீது வைத்து அதன்மேல் முன் லிங்க கட்டியை வைத்து கட்டியானது மறையும்படியாக மறுபங்கு தூளை தூவி திரியால் கொழுத்திவிட வேண்டும். நன்றாக எரிந்து ஆறின பின்பு கட்டியின் மீதுள்ள சரக்குகளை மெதுவாய் சுரண்டி நீக்கி மற்ற பாகங்களையும் இப்படியே செய்து எடுத்துக்கொள்ள லிங்கமானது சுத்தியாகும்.

***இரச சுத்தி :*** உலர்ந்த அல்லது பம்பாய் சாதிலிங்கம் பலம்-2, இதனை கல்வத்திலிட்டு பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றை சிறுகச்சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து ஈரமில்லாமல் வெயிலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். ஒரு மண்பானையில் இரண்டு பலம் கொடிவேலி வேர்ப்பட்டையும், இரண்டு பலம் ஓமத்தையும் இடித்தும்

போட்டுப் பரப்பி அதன்மேல் முன் சுத்தப்படுத்தின இலிங்கத்தைப் பொடித்து தூவி மேற்சட்டி மூடி சந்தில்லாமல் ஏழுசீலை மண் செய்து உலரவைத்து அடுப்பேற்றி இரண்டொரு சாமம் எரித்து குளிர ஆறின பின் கவனத்துடன் எடுத்து, சீலையைப் பிரித்து மேலேயிருக்கும் பதங்கத்தை வளித்தெடுத்து பீங்கான் பாத்திரத்திலிட்டு மசித்தெடுக்க இரசமாகும். இந்த ரசத்தை சக்திக்கு தக்கவாறு, 50-60-70ஆவது தடவை மடக்கி மடக்கி-இரட்டுத் துணியில் வைத்து பிழிந்து கொள்ளவும். இப்படி செய்த இரசத்தை மேற்கண்ட பாகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இதுவே பால இரசமென்பதும், இரச சுத்தி செய்வதும் இதுவே. பாகப்படி செய்யவும் இரச சுத்தியாம்.

***கந்தக சுத்தி :*** வாயகன்ற ஒரு மண் கலசத்தில் நெல்லிக்காய், கந்தக பலம் ஒண்ணுக்கு கால்படி அளவாகப் பசுவின்பாலை விட்டு அதன் வாய்க்கு மெல்லிய உரத்த சல்லாத் துண்டால் வேடுகட்டி கெந்தகத்தை பொடித்து அதன்மேல் பரப்பிவிட வேண்டும். கலசத்தின் வாயோரத்தில் வஸ்திரத்தின் மீது காலங்குல உயரம் கோதுமை மாவால் அல்லது களிமண்ணால் சுவர்போல் வைத்து அதன் மேல் மண்ணோட்டை வைத்து அழுத்தி அந்த மேலோட்டில் கரி நெருப்பிட்டு விசிறியால் வீச கெந்தகமெல்லாம் உருகி பாலில் விழுந்து போகும். அல்லது முன் சொன்னபடி சுத்தப்படுத்தின கலசத்தைப் பூமியில் புதைத்து அதன் வாயுதடு மறையும்படியாக மண்ணைத் தள்ளி சரிபடுத்தி அதன் மீது விராட்டியை அடுக்கிப் புடமிட்டாலும் கெந்தகம் உருகி கலசத்திலுள்ள பாலில் விழுந்து போகும். மேல் மூடும் ஓடானது கந்தகத்தின் மீது படாமல் இருக்கவேண்டும். பிறகு இந்த கந்தகத்தை எடுத்து பொடித்து முன் கணக்கின்படி புதிய பால் கலசத்தில்

விட்டு முன்புபோல் வேடுகட்டி அதன் மேல் முன்பு போல் கெந்தகத்தைப் பரப்பி அதன்மேல் மாச்சுவர் கட்டி கந்தகத்தின் மீது படாமல் ஓட்டை கவிழ்த்து அல்லது வைத்து முன்புபோல் கரி நெருப்பில் இட்டு அல்லது புடமிட்டு எடுத்துக்கொள்ள வேண்டியது. இவ்விதம் மடக்கி மடக்கி பசுவின்பாலில் ஐந்து தடவையும் வாழைத் தண்டு சாற்றில் மூன்று தடவையும் மருதோன்றி சாற்றில் இரண்டு தடவையும் சுத்தி செய்து கொண்டால் முதல் தரமான சுத்தியாகும். இவ்விதம் சுத்தி செய்த கெந்தகத்தை மேற்கண்ட அளவு மேற்கண்ட பாகத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டியது.

***தாளக சுத்தி :*** தாளகத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து உரத்த துணியில் தாள முடிந்து கொள்ள வேண்டும். பிறகு ஒரு மண் பாத்திரத்தில் தாளிக்காத சுண்ணாம்புக்கல் படி கால் அதை மேற்படி மண் பாத்திரத்தில் பரப்பி அதன்மேல் முன் முடிப்பை வைத்து அதன் மேலும் காற்படி சுண்ணாம்புக்கல்லை முடிப்பு மறையும்படியாகக் கொட்டி முளுக்கூறு காய்ந்த வெந்நீரை அதாவது குமுளிகள் நன்றாய் எழும்பும்படியாக காய்ச்சின வெந்நீரை அகப்பையால் மோந்து முன் சுத்தப்படுத்தியிருக்கிற சுண்ணாம்பின் மீது விட வேண்டும். சுண்ணாம்பு கொதித்து அடங்கி குளிர ஆறினபின் முடிப்பை எடுத்து அந்த வஸ்திரத்தை நீக்கிவிட்டு வேறு வஸ்திரத்தில் முன்போல் தாள முடிந்து, முன்போலவே சுண்ணாம்பில் வைத்து முன்போலவே வெந்நீரை விட்டு நீற்றிக்கொள்ள வேண்டும்.

இவ்விதம் மடக்கி மடக்கி பதினோரு தடவைக்கு குறையாமல் செய்துகொள்ளவும். 21 தடவைகள் செய்து கொண்டால் எண்ணெய் எல்லாம் கக்கி முதல்தரமான சுத்தியாகும். இந்த தாளகத்தை மேற்கண்ட பாகத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

***நாபி சுத்தி :***

| | |
|---|---|
| நாபி | பலம் 1 |
| சிறுகீரைச்சாறு | படி 2 |
| மிளகு | பலம் 1 |

**செய்முறை:** நாபியை பொடித்து இரட்டுசேலை துண்டில் சற்று தளர்ச்சியாக முடிந்து கொள்ள வேண்டும். மிளகை தண்ணீர் வார்த்து அரைத்து மேற்படி சாற்றில் கரைத்து மண் பாத்திரத்தில் வார்த்து அதன்முன் முடிப்பை கிழிகட்டி பானையின் அடியில் படாமல் தொங்கவிட்டு அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து சாறு சுண்டியவுடன் ஆறவிட்டு இறக்கி தண்ணீர் விட்டு கழுவி எடுத்துக் கொள்ளவும். பிறகு இரண்டாந்தடவையும் முன் தூளை ரெட்டு துணியில் முடிந்து முன் சாற்றில் மிளகை அரைத்து கரைத்து முன்புபோலவே கிளிக்கட்டி எரித்து எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதமே மூன்றாந் தடவையும் செய்துகொள்ள வேண்டும். இவ்விதம் செய்து கொண்டால் எல்லாவித தோசங்களும் அற்று தரமான சுத்தியாகும். இந்தபடி சுத்தி செய்யப்பட்ட நாபியையே மேற்சொல்லிய முறையில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**குறிப்பு :** இன்னும் இவைகளின் சுத்தி வகைகள் விசேஷமாகத் தெரிய வேண்டுமானால் நமது அனுபோக வைத்திய ரத்தினாகரத்தில் பார்த்துக்கொள்ளவும். மேற்கண்ட இலிங்கம், இரசம் முதலியவைகளை அவரவர் களுக்கு அனுபவ முறைப்படியும் சுத்திசெய்து மேற்படி பாகத்திற்கு சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் மேற்கண்ட முறைப்படி செய்து கொள்வது சிரேஷ்டம்.

# 7. மேக கேசரி எண்ணெய்

| | | |
|---|---|---|
| (a) | பூவரசன்பட்டைச்சாறு | 1 ஆழாக்கு |
| | பூவரசின் இலைச்சாறு | ,, |
| | பூவரசின் பூச்சாறு | ,, |
| | தழுதாழை இலைச்சாறு | ,, |
| | எலுமிச்சை பழச்சாறு | ,, |
| | தக்காளி இலைச்சாறு | ,, |
| | இலை கள்ளிச்சாறு | ,, |
| | வெங்காயச்சாறு | ,, |
| | நுனாயிலைச்சாறு | ,, |
| | கழுதைப்பால் | ,, |
| | கழுதை லத்திப்பால் | ,, |
| | கற்றாழைச்சாறு | ,, |
| | கொடிக்கள்ளி பால் | ,, |
| | தாய்ப்பால் | ,, |
| | வெள்ளருகுச்சாறு | ,, |
| | உத்தாமணிச்சாறு | ,, |
| | ஆலம்விழுதுச்சாறு | ,, |
| | பொன்னாங்கன்னிச்சாறு | ,, |
| (b) | இளநீர் | 1 படி |
| | பசுவின்பால் | 1 படி |
| | சிற்றாமணக்கெண்ணெய் | 2 படி |
| (c) | கருஞ்சீரகம் | ¼ பலம் |
| | நற்சீரகம் | ,, |
| | இலவங்கப்பட்டை | ,, |
| | அதிமதுரம் | ,, |
| | வால்மிளகு | ,, |
| | சிறுநாகப்பூ | ,, |
| | நீரடி முத்துப்பருப்பு | ,, |
| | சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு | ¼ பலம் |
| | ஏலரிசி | ¼ பலம் |

| | |
|---|---|
| மேல்தோல்சீவிய சுக்கு | ¼ பலம் |
| மிளகு | ¼ பலம் |
| மஞ்சள் கடுக்காய்த்தோல் | ¼ பலம் |
| தான்றிக்காய்த்தோல் | ,, |
| நெல்லிவற்றல் | ¼ பலம் |
| கொத்தமல்லி விதை | ,, |
| பெருஞ்சீரகம் | ,, |
| பரங்கி சக்கை | ¼ பலம் |

**செய்முறை:** (a)இதிலுள்ளவைகளையும்,(b) இதிலுள்ளவைகளையும் ஒன்றாகக் கலந்து (c) இதிலுள்ளவைகளை இடித்து தெள்ளி அம்மியில் வைத்து பசுவின் பாலை சிறுகச் சிறுக விட்டு அரைத்து மைபோல் ஆன பின்பு மேற்படி எண்ணெய்க் கூட்டில் கரைத்து அடுப்பேற்றி இளஞ்சூடு காட்டி வைத்து விடவேண்டும். இவ்விதம் பிரதி தினமும் இரண்டொரு தடவை சூடு காட்டி வந்து ஐந்தாம் நாள் அடுப்பேற்றி சிறுதீயாய் எரித்து கடுகு திரண்ட பதத்தில் இறக்கி கம்பிளியில் வடிகட்டி வேறு பாத்திரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**பிரமாணம் :** விராகன் எடை 1 - 2 இன்னும் தேக சுபாவத்திற்கும் வியாதி பலத்துக்கும் தகுந்தபடி அளவை அதிகப்படுத்தியும் கொடுக்கலாம். இரண்டொருநாள் ஆரம்பத்தில் குறைவாகக் கொடுத்து தேக சுபாவத்தை நிதானித்து அதன் மீது அளவைக் கிரமமாய் உயர்த்தி திட்டப்படுத்திக்கொள்ள வேண்டும். சிலருக்கு ஒரு விராகன் எடை கொடுத்தால் ஐந்து, ஆறு தடவை பேதியாகிவிடும். சிலருக்கு 5, 6 விராகன் எடை கொடுத்தும் ஒரு தடவையும் பேதி ஆகாமல் இருந்திருக்கிறது. ஆகையால் முக்கியமாய் இதன் பிரமாணத்தை வியாதியஸ்தர்களின் தேக சுபாவத்தை ஆராய்ந்து அளவைக்கூடக் குறைய ஏற்படுத்தி கொள்ள வேண்டியது வைத்தியர்களின் கடமை.

**அனுபானம் :** இளநீர் சுக்கு கஷாயம்
சோம்பு கசாயம் சோம்பு திராவகம்
ஓமக் கசாயம் ஓமத்திராவகம்
நீராகார நீர் ஆகியவைகளாம்.

**உபயோகம் :** கடி விஷங்கள், மேகரணங்கள், மேக புண்கள், பிளவை ரோகங்கள், பிரமேக ரோகங்கள் பலவகை சூலை ரோகங்கள், வெட்டுக் காயங்கள், குன்ம ரோகங்கள், குன்மக்கட்டிகள், குஷ்ட ரோகங்கள், புற நோய்கள், சிரரோகம், பைத்தியரோகம் இன்னும் அநேக வகை கிரந்தி ரோகங்கள் ஆகியவைகளும் தீரும்.

**பத்தியம் :** இதற்கு பிரதானமாய் புளி, புகை, பெண் நீக்க வேண்டியது அவசியம். ஆனால் சுகுமார தேகிகளுக்கும், தேகம் துர்பலப்பட்ட தேகிகளுக்கும், துர்பலரோகிகளுக்கும் சமயோசிதமாக சொற்பமாக புளி முதலியவைகளை சேர்த்துக்கொள்ள வேண்டியது. ஆயினும் எந்த விஷயத்திலும் ஸ்திரீ பத்தியம் அவசியம் நீக்கவேண்டியது.

**நேர்வாள சுத்தி :** நேர்வாள சுத்தியில் பல வகையுண்டு. ஆனால் அதிகம் அனுபவப்பட்டதும் குணத்தில் சிறந்ததுமாகிய பாகத்தை மாத்திரம் இங்கு எழுதுகிறோம். நேர்வாளக் கொட்டையை உடைத்து மேல்தோலை நீக்கி பருப்பை எடுத்து மெல்லிய வஸ்திரத்தில் தளர்ச்சியாக முடிந்து எருமைச் சாணியை அல்லது கழுதை லத்தியைக் கரைத்து அதில் போட்டு ஒருநாள் ஊறவைத்து நன்றாய் கொதிக்கக் காய்ச்சி இறக்கி ஏழு தடவை தண்ணீர்விட்டு நன்றாய் கழுவி உள், முளை இலைகளை எடுத்து மறுபடியும் கழுவி, உலர்த்தி முன்பு போலவே மெல்லிய வஸ்திரத்தில் தளர்ச்சியாய் முடிந்து புளித்த தயிரில் போட்டு, அவித்து கழுவி எடுத்து உலர்த்திக் கொள்ளவும்

— — —

## 8. விந்தாதி மதனச் சூரணம்

| | |
|---|---|
| கையாந்தகரை விதை | ½ பலம் |
| நீர்முள்ளி விதை | ,, |
| துளசிவிதை | ,, |
| பூனைக்காலி விதை | ,, |
| நாயுருவி விதை | ,, |
| கோஷ்டம் | ,, |
| சுரைக்காய் விதை பருப்பு | ,, |
| யானை நெருஞ்சி முள் | ,, |
| ஆலம் விதை | ,, |
| சுத்தி செய்த கஞ்சா | ,, |
| கஞ்சா விதை | ,, |
| முள் இலவம்பிசின் | ,, |
| சாதிக்காய் | ,, |
| அரசம்விதை | ,, |
| சாதிபத்திரி | ,, |
| இலவங்கம் | ,, |
| பருத்திவிதை பருப்பு | ,, |
| குருசானி ஓமம் | ,, |
| அதிவிடயம் | ,, |
| ஏலரிசி | ,, |
| உளுந்து மாவு | ,, |
| யானை திப்பிலி | ,, |
| அரிசி திப்பிலி | ,, |
| ஓமம் | ,, |
| மேல்தோல் நீக்கிய சுக்கு | ½ பலம் |

***செய்முறை :*** இவற்றுள் இடிக்க வேண்டியவைக ளெல்லாம் வெயிலில் உலர்த்தி இடித்து வஸ்திரக்காயம் செய்து கொள்ள வேண்டும். சுரவிதை பருப்பையும்,

பருத்திவிதை பருப்பையும் தண்ணீர்விடாமல் வெண்ணெய் போல் அரைத்து, இலவம்பிசினை நெய்யில் வறுத்தும் பொடித்தும் மேற்படி சூரணத்தில் கலந்து கொள்ள வேண்டும். இவை எல்லாவற்றையும் கல்வத்தில் இட்டு நன்றாய் மசியும்படியாக அரைத்து கல்காரக்கு உள்ள சீசாவில் பத்திரப்படுத்த வேண்டியது. அவசியமான போது எடுத்துக்கொண்டு உடனே மூடிவைத்துவிட வேண்டும். ஈரக்காற்று பிரவேசிப்பதால் இதன் குணம் சீக்கிரம் கெட்டுப்போகிறது. அப்படி சம்பவிக்காமல் பத்திரப்படுத்திக்கொள்ள வேண்டும்.

**பிரமாணம் :** பலம் 1 - 2

**அனுபானம் :** சீரண சக்திக்கு தகுந்தபடி பசுவின்பால் கால் படி அல்லது அரைப்படி பாலுக்கு சமமாக தண்ணீர் சேர்த்து மேற்படி சூரணத்தை பிரமானப்படி அதில் கலந்து அடுப்பேற்றி நான்கில் ஒரு பாகமாக பால் சுண்டியவுடன் தமது இஷ்டப்படி சீனி, சர்க்கரையை கலந்து அல்லது கற்கண்டை மிதமாய் சேர்த்து பானம் செய்யவேண்டும். ஆகாரம் சாப்பிட்ட பின்பு மேற்கண்ட விதமாக சுத்தப்படுத்தி பானம் செய்ய வேண்டும். தினம் ஒரு வேளை இரவு நேரத்தில் மாத்திரம் பானம் செய்து கொண்டு வந்தாலும் போதுமானது.

**உபயோகம் :** இந்திரிய விளைவு அதிகப்படும். நீர்த்துப் போயிருந்த இந்திரியமானது கெட்டிப்படும். இந்திரியக் குறைவினால் உண்டான தாது நஷ்டம் தீரும். இந்திரிய சீறாவகம், துரிதஸ்கலிதம், சொப்பன கலிதம் ஆகியவைகள் நீங்கி தம்பன சக்தி உண்டாகும். தேக திடம், தேக பலம் ஆகியவை உண்டாகும். சங்கமத்திற்குப் பின் உண்டாகும் இடுப்புவலி, அசதி, சோர்வு மன திடுக்கம், மன நடுக்கம் முதலியவைகளும் தீரும்.

**குறிப்பு :** இதன் பிரமாணம் இங்கு பொதுவாய் சொல்லப்பட்டிருக்கிறது. சமயோசிதம் போல் அதிகப்படுத்தியும் அல்லது குறைத்தும் கொள்ளலாம். ஏனெனில் சில தேகிகளுக்கு பிரமாணத்தை அதிகப் படுத்தி உபயோகிக்க வேண்டியதாயிருக்கிறதே காரணம். இந்திரிய குறைவினால் உண்டாகும் தாது நஷ்ட சிகிச்சையில் இது ஒரு சிறந்த முறை. இந்திரிய விழைவை உண்டாக்கி இந்திரிய கமலங்களில் தளர்ச்சியை நீக்கி அவற்றை ஸ்திரப்படுத்துகின்ற குணத்தை உடையதா யிருப்பதால் இது விசேஷ குணமானது என்பதற்குச் சந்தேகமில்லை. இந்திரியக் குறைவினால் அதிகம் துர்பலப் பட்டிருக்கிறவர்கள் காலை மாலை இரண்டு வேளையும் குறைந்த அளவாக உபயோகித்து வந்தால் படிப்படியாக இரத்த விருத்தி உண்டாகி தாதுவிருத்தியும் அதிகரித்து விடும்.

**பத்தியம் :** புளி, புளிப்பு வஸ்துக்கள் ஆகியவைகளை நீக்கி வைப்பது உத்தமம், தித்திப்பு வஸ்துக்கள் மிட்டாய் தினுசுகள், மாமிச பட்சிகளால் பொரித்த மாமிசம் முதலியவைகளை அதிகமாகச் சேர்த்து வருவதினால் அதிக பிரயோஜனம் உண்டாகும்.

# 9. மேகத்தெண்ணெய்

| | | |
|---|---|---|
| (a) | மெருகன்கிழங்குச்சாறு | 1 ஆழாக்கு |
| | சிவனார்வேம்புச்சாறு | ,, |
| | எருக்க இலைச்சாறு | ,, |
| | கல்யாண முருங்கையிலைச்சாறு | ,, |
| | நில ஆவாரைச்சாறு | ,, |
| | வெள்ளருகுச்சாறு | ,, |
| | கண்டங்கத்திரி சமூலச்சாறு | ,, |
| | சிற்றாமணக்கு எண்ணெய் | 1 படி |
| (b) | கோஷ்டம் | 1 பலம் |
| | அதிமதுரம் | ,, |
| | கடுகுரோகணி | ,, |
| | தாளிசப்பத்திரி | ,, |
| | வசம்பு | ,, |
| | கார்போக அரிசி | ,, |
| | பெருங்காயம் | 1 பலம் |

இதனைப் பொரித்துக்கொள்ளவும்.

***செய்முறை :*** (a)இதிலுள்ள சாறு வகைகள் எல்லாம் ஒன்றாய்க் கலந்து (b) இதிலுள்ள சரக்குகளை எல்லாம் வெயிலில் உலர்த்தி இடித்து மெல்லிய தூளாகத் தெள்ளி மேற்படி எண்ணெய் யோகத்தில் கரைத்து கடுவெயிலில் நான்கு நாள் வைக்கவேண்டும். பிரதி தினமும் அதனை இரண்டொரு தடவை கலக்கிவிட்டு வரவேண்டும். அதில் தும்பு, தூசு முதலியவைகள் விழாமல் வேடுகட்டி வைக்கவேண்டும். ஐந்தாம் நாள் அடுப்பேற்றி சிறு தீயாய் எரித்து நீர் சுண்டி கடுகு திரள்பதத்தில் இறக்கி வடிகட்டி எண்ணெயை பத்திரப்படுத்திடவேண்டும்.

**பிரமாணம் :** ¼ - ½

**அனுபானம் :** இளநீர், நீராகாரம், சோம்புத்திராவகம், சோம்புக் கசாயம் முதலியவைகளாம்.

**உபயோகம் :** கிரந்தி ரோகங்கள், பெருநோய், குறை நோய், நீர்மேகம், கரப்பான் ரணங்கள், புண்கள் முதலிய மேகரோகம் தீர்ந்து ரத்தசுத்தி உண்டாகி ரத்தவிருத்தி அதிகரிக்கும். தேகதிடம், தேகபலம் முதலியவைகள் உண்டாகும்.

**பத்தியம் :** புளி, புகை, பெண் ஆகியவைகளை நீக்க வேண்டியது. வியாதி கடினமாயிருந்தால் உப்பை வறுத்துச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

## 10. சுக சீவணி பாணிதம்

| | |
|---|---|
| சோம்பு | 10 பலம் |
| கொத்தமல்லிவிதை | ,, |
| நிலவாகை சமூலம் | ,, |
| மேல்தோல் சீவிய சுக்கு | ,, |
| நன்னாரிவேர் | ,, |
| சீனா கற்கண்டு | வீசை 1 ½ |

**செய்முறை :** முன் சரக்குகளை எல்லாம் நன்றாய் சிதைத்து 6 படி சுத்தத் தண்ணீரில் போட்டு 12 மணி நேரம் ஊறவைத்து பிறகு வாலையிலிட்டு திராவகம் இறக்கிக் கொள்ள வேண்டும். இந்த திராவகத்தில் மேற்படி கற்கண்டைக் கரைத்து அடுப்பேற்றி சர்பத்து பதமாகக் காய்ச்சி ஆறியபின் சீசாவில் பத்திரப்படுத்த வேண்டும்.

**பிரமாணம் :** பலம் 1 - 2.

**அனுபானம் :** பன்னீர், காவுசூயின் திராவகம், சோம்புத் திராவகம், தாழம்பூ திராவகம், கஸ்தூரி பிரம்புத் திராவகம், சுத்தத் தண்ணீர் முதலிவைகளாம்.

**உபயோகம் :** மேகவெட்டை, மேக ஊறல், மலசலப் பந்தம், நீர்க்கடுப்பு, நீர்க்கட்டு, முலை மூலரோகம், மூலரத்தம், உடல் எரிச்சல், நாவறட்சி முதலிய உஷ்ண சம்பந்தமான அனேக ரோகங்கள் தீரும்.

**பத்தியம் :** இச்சாபத்தியம்.

# 11. மெய்ஞான கற்பம்

.......................................................

*இதற்கான மருத்துவக்குறிப்பு இல்லை.*

## 12. சஞ்சீவிச் சூரணம்

| | | |
|---|---|---|
| (a) | மேல்தோல் சீவிய சுக்கு | பலம் 1 |
| | பொரித்த வெங்காரம் | ,, |
| | சாதிக்காய் | ,, |
| | குங்குமப்பூ | ,, |
| | குருசாணி ஓமம் | ,, |
| | ஓமம் | ,, |
| | அரிசித்திப்பிலி | ,, |
| | லவங்கம் | ,, |
| | ஏலரிசி | ,, |
| | செண்பகப்பூ | ,, |
| | மஞ்சள் கடுக்காய்த்தோல் | ,, |
| | தான்றிக்காய்த்தோல் | ,, |
| | கண்டந்திப்பிலி | ,, |
| | ஆனைத்திப்பிலி | ,, |
| | வெண் சந்தனம் | பலம் 1 |
| (b) | அம்பர் | 1 விராகன் எடை |
| | கஸ்தூரி | ,, |
| | பச்சைக் கற்பூரம் | ,, |
| | கோரோசனை | ,, |
| (c) | கற்கண்டுத்தூள் | செல்லத்தக்க அளவு |

***செய்முறை:*** (a) இதிலுள்ள சரக்குகளில் குங்குமப்பூ தவிர மற்றவைகளை வெயிலில் உலர்த்தி கல் உரலில் இடித்து வஸ்திரகாயம் செய்து எடுத்துக்கொள்ள வேண்டும். குங்குமப்பூவை கல்வத்தில் இட்டு பன்னீர் விட்டு மைபோல் அரைத்து மேற்படி சூரணத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

(b) இதிலுள்ள சரக்குகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே பன்னீர்விட்டு மைபோல் அரைத்து மேற்படி சூரணத்தில் கலந்து சூரணத்தின் சமஎடை கற்கண்டுத் தூளை சேர்த்து கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்திக்கொள்ள வேண்டும்.

**பிரமாணம் :** விராகன் எடை 1, 2.

**அனுபானம் :** தேன், நெய் முதலியவைகளாம். இதனை உட்கொண்டபின் ஜீரண சக்திக்குத் தகுந்தபடி காய்ச்சிய கண்கண்ட பசுவின்பாலை பானம் செய்ய வேண்டும்.

**உபயோகம் :** சூலைரோகம், நீரடைப்பு, நீர்க்கட்டு, அஸ்மரி ரோகம், மந்தாகினி ரோகம் எல்லாவகைப் பைத்தியம்.

**பித்த சம்பந்தமான ரோகங்கள் :** நீரிழிவு, மதுமேகம் முதலிய எல்லாவகை ரோகமும் தீரும். தேகத்திலுள்ள நரம்புகள் முறுக்கேறி தேகம் வஜ்ஜிர காயமாகும். தாதுவிருத்தி, போகசக்தி முதலியவைகள் அதிகரிக்கும். இன்னும் இது எவ்வித வியாதியும் வராமல் தடுத்து தேக சுகத்தை நிலைநிறுத்தி தேகத்தை காப்பாற்றி வரும்.

**இதன் சிறந்த குணம் :** இதனை உண்டு அனுபவிப் பவர்களுக்குத் தானே விளங்கும். ஆகையால் இதைப் பற்றி நாம் இங்கு விஷேசமாக எழுதுவது அனாவசியம்.

**பத்தியம் :** இதற்கு எவ்வித பத்தியமும் இல்லை. இதனால் உண்டாகும் சீரண சக்திக்கு தகுந்தபடியும் அவரவர்களின் சக்திக்கு தகுந்தபடியும் சத்துள்ளதும் சுத்தமானதுமான ஆகாரங்களை உபயோகித்து வருவதேயாகும்.

## 13. அஷ்டாதிச் சூரணம்

அரிசித் திப்பிலி
மேல்தோல் சீவின சுக்கு
ஏலரிசி
பேரரத்தை
சிறுநாகப்பூ
மஞ்சள் கடுக்காய்த்தோல்
கருஞ்சீரகம்
கண்டந்திப்பிலி
கடல்நுரை
சாதிப்பத்திரி
கோரைக்கிழங்கு
நத்தைச் சூரி வித்து
அமுக்கிராக்கிழங்கு
பெருஞ்சீரகம்
ஓமம்
சிற்றரத்தை
வெள்ளைப்பூண்டு இதழ்
சாதிக்காய்
இந்துப்பு
பெருங்காயம்

இதனைப் பொரித்துக்கொள்க.

பரங்கிச்சக்கை
இலவங்கம்
தக்கோலம்
மாசிக்காய்த்தோல்

இவை வகை ஒன்றுக்கு சம எடை.

***செய்முறை:*** இவற்றை இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணத்திற்குச் சமஎடை நிழலில் உலர்த்தி வறுத்து இடித்து

வஸ்திர காயம் செய்த நத்தச்சூரி, சமூலச்சூரணம் இவ்விரண்டின் மொத்தத்திற்கு சமஎடை சீனிச்சர்க்கரை, பூண்டை மைபோல் அரைத்து தனியே எடுத்து சூரணத்தில் கலந்து மிஸ்ரமித்துக்கொள்ள வேண்டியது.

***பிரமாணம் :*** வராகன் எடை ½ - 1½

***அனுபானம் :*** பசுவின் நெய், தேன், சந்தன சர்பத்து, பன்னீர், பன்னீர் சர்பத்து முதலியவைகளாம்.

***உபயோகம் :*** வயிற்றுவலி, வயிற்றுக்கட்டி, குன்ம ரோகம், வயிற்றுக்கிருமி ரோகம், சூதக வாய்வு, அக்கிரமச் சூதகம், சூதகச்சன்னி, சூதக சம்பத்தால் உண்டாகும் தேகக்குடைச்சல், தேகவலி, காசரோகம், இருமல், கோழைக்கட்டு முதலிய கப சம்பந்த ரோகங்கள் தீரும்.

***பத்தியம் :*** வியாதி பலம், தேக பலம் ஆகியவைகளுக்கு தகுந்தபடி இலகு பத்தியமாகவும், கடினப் பத்தியமாகவும் ஏற்படுத்த வேண்டியது.

## 14. பரங்கிப்பட்டைச் சூரணம்

மேல்தோல் சீவின சுக்கு
மிளகு
ஏலம்
பரங்கிச் சக்கை
அரிசித் திப்பிலி
சங்கம்வேர்ப்பட்டை
கொடிவேலிவேர்ப்பட்டை
லவங்கம்
கார்போக அரிசி

இவை வகை ஒன்றுக்கு ½ பலம்

வாய்விலங்கம்
சிற்றரத்தை
சிவனார்வேம்பு
புங்கம் வேர்ப்பட்டை
நற்சீரகம்
பெருஞ்சீரகம்
சாதிக்காய்
ஓமம்
சாதிப்பத்திரி
மஞ்சள் கடுக்காய்த்தோல்
விரலி மஞ்சள்
கண்டந்திப்பிலி
தக்கோலம்
சிறுநாகப்பூ
செண்பகப்பூ
அமுக்கிராக்கிழங்கு
குங்குமப்பூ

இவை வகை ஒன்றுக்கு ½ பலம்

கற்கண்டு பலம் 13

***செய்முறை :*** மேற்கண்ட சரக்குகளை வெயிலில் உலர்த்தி கல்லுரலில் இடித்து வஸ்திரகாயம் செய்து

கொள்ள வேண்டும். கற்கண்டை நுண்மையான தூளாகச் செய்து மேற்படி சூரணத்துடன் கலந்து கல்வத்தில் இட்டு நன்றாய் மிஸ்ரமாகும்படியாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

***பிரமாணம் :*** விராகன் எடை ½ - 1½

***அனுபானம் :*** நெய், தேன்

***உபயோகம் :*** மேகவெட்டைகள், மேகரணங்கள், கிரந்திப் புண்கள், மேகப்புண்கள், வாந்தி ரோகம், பரங்கிப் புண்கள், கடிவிஷங்கள், மேக ஊறல், சொறி சிரங்கு, மண்டைக் கரப்பான், மண்டை வலி முதலியவைகள் நீங்கும்.

***பத்தியம் :*** கசப்பு வஸ்துக்கள், புளிப்பு வஸ்துக்கள் பன்றி, நண்டு, கருவாடு ஆகியவைகள் ஆகாது. மற்றவைகளை தேக சுபாவத்திற்கு உகந்தது போல் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

***குறிப்பு :*** இந்தப் பாகத்தை கீழ்க்கண்டதுபோல் அவ்விதமாக செய்து கொள்வது நம் முன்னோர்கள் அனுபவம். முன் சொன்ன 26 சரக்குகளில் பரங்கிச் சக்கை நீங்கலாக மற்ற சரக்குகளுக்கு சம எடை சுத்தி செய்த பரங்கிச் சக்கையை சேர்த்துக்கொள்ள வேண்டியது. அதாவது 25 சரக்கும் வகை ஒன்றுக்கு ½ பலம் சுத்தி செய்த பரங்கிச் சக்கை சூரணம் 12½ பலம் இவ்விரண்டு வகைக்கும் சம எடை. கற்கண்டுத்தூள் மற்ற முறைகளெல்லாம் முன்சொல்லியிருக்கிறவிதமேயாம்.

***பரங்கிப்பட்டையின் சுத்தி :*** முன்சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது முன்சொல்லப்பட்டிருக்கிற முறையைக் காட்டிலும் பின் சொன்ன முறையானது அனுபவத்தில் அதிக விசேஷ குணத்தை உடையதாக காணப்பட்டிருக்கிறது.

## 15. சஞ்சீவிக் கிருதம்

| | |
|---|---|
| மிளகு | ½ பலம் |
| லவங்கப்பட்டை | ,, |
| லவங்கப்பத்திரி | ,, |
| அதிமதுரம் | ,, |
| மேல்தோல் சீவின சுக்கு | ,, |
| அரிசித்திப்பிலி | ,, |
| மஞ்சள் கடுக்காய்த்தோல் | ,, |
| தான்றிக்காய்த்தோல் | ,, |
| நெல்லிமுள்ளி | ,, |
| பேய்ப்புடல் | ,, |
| சிவதைவேர்ப்பட்டை | ,, |
| கண்டங்கத்திரி வேர்ப்பட்டை | ,, |
| லவங்கப்பூ | ,, |
| சீரகம் | ,, |
| ஏல அரிசி | ½ பலம் |
| பசுவின் நெய் | 1 படி |

***செய்முறை:*** மேற்கண்ட சரக்குகளை எல்லாம் வெயிலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணத்தை மேற்படி நெய்யில் கலந்து சூரியபுடம் வைக்க வேண்டியது. பிரதி தினமும் 5, 6 தடவை நன்றாய்க் கலக்கி வைத்துவரவேண்டும். அதில் தும்பு தூசி விழாமல் பாத்திரத்தின் வாய்க்கு மெல்லிய வஸ்திரத்தால் வேடுகட்டியும் வைக்கவேண்டும். இவ்விதம் 1 வாரம் சென்றபின் அடுப்பேற்றிச் சிறுதீயாய் எரித்துப் பக்குவமாக செய்து வடிகட்டாமல் சரக்குகளுடன் உபயோகிக்க வேண்டும்.

***பிரமாணம் :*** பலம் ½ - 1½

***உபயோகம் :*** புண்கள், கட்டிகள், சதையடைப்பு, நீர்க்கிரச்சனம், நீரடைப்பு, சொட்டு மூத்திரம், அரையாப்புக் கட்டி, பிரமேகம், ரணமேகம் முதலியவைகள் தீர்ந்து தேக அழகு, தேகக்கட்டு முதலியவைகள் உண்டாகும்.

***பத்தியம் :*** இச்சா பத்தியம்.

## 16. மேக ராசாங்க எண்ணெய்

(a) தகரை இலைச்சாறு
பொடுதலை சமூலச்சாறு
கொடுவேலி இலைச்சாறு
புளி இலைச்சாறு
கொடிக்கள்ளி இலைச்சாறு
கண்டங்கத்திரி சமூலச்சாறு
தக்காளி சமூலச்சாறு
சிறுசின்னி இலைச்சாறு
கருவேல இலைச்சாறு
சுரை இலைச்சாறு
அரச இலைச்சாறு
புரச இலைச்சாறு
கையாந்தகரை இலைச்சாறு
வெள்ளறுகுச்சாறு
கழற்சி இலைச்சாறு
துளசி இலைச்சாறு
அவுரி இலைச்சாறு
முதியார் கூந்தர் சமூலச்சாறு
கோவை இலைச்சாறு
நன்னாரி இலைச்சாறு
கல்யாணமுருங்கை இலைச்சாறு
எருக்கு இலைச்சாறு
பிரம்ம தண்டு இலைச்சாறு
கொடிவளாதலைஇலைச்சாறு
தழுதாயிலைச்சாறு
கழுதைத்தும்பை சமூலச்சாறு

இவை வகை ஒன்றுக்கு ¼ படி.

சிற்றாமணக்கெண்ணெய் 1 படி.

(b) மிளகு
கொத்தமல்லி விதை
யானைத்திப்பிலி
அரிசி திப்பிலி
கொடிவேர்ப்பட்டை
கடுகுரோகணி
லவங்கப் பூ
அதிமதுரம்
அதிவிடயம்
லவங்கப்பட்டை

இவை வகைக்கு (ஒன்றுக்கு) ½ பலம்

***செய்முறை :*** (a) இதிலுள்ள சாறுகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து எண்ணெயுடன் மிஸ்ரமித்துக்கொள்ள வேண்டும்.

(b) இதிலுள்ள சரக்குகளை உரலில் இடித்து வஸ்திர காயம் செய்து மேற்படி எண்ணெய் கூட்டில் கலக்கி கடும் வெய்யிலில் ஒருநாள் வைத்தால் போதும். அப்படி வெயில் குறைவாக இருந்தால் மூன்றுநாள் வெயிலில் வைக்க வேண்டும். பிறகு அடுப்பேற்றி சிறுதீயாக எரித்து நீர் சுண்டிக் கடுகு திரள் பதத்தில் இறக்கிக் கம்பளியில் வடிகட்டி எண்ணெயை எடுத்துக்கொள்ள வேண்டும்.

***பிரமாணம் :*** பலம் ¼ - 1

***அனுபானம் :*** பன்னீர், வெண்ணீர், நீராகாரம், இளநீர் முதலியவைகளாம்.

***உபயோகம் :*** மேக ரோகங்கள், குன்ம ரோகங்கள் சிரசு ரோகங்கள், நீர் சம்பந்த ரோகங்கள் முதலிய மேக சம்பந்த ரோகங்கள் எல்லாம் தீரும்.

***பத்தியம் :*** வியாதி பலத்திற்குத் தகுந்தபடி புளி, புகை, கரப்பான், வஸ்துக்கள் ஆகியவைகளை நீக்க வேண்டியது. ஸ்த்ரீ சங்கற்பத்தை அறவே நீக்க வேண்டியது.

— — — — — —

## 17. மதன கற்ப மாத்திரை

(a) வாய்விளங்கம்
வெண்சந்தனம்
அகிற்கட்டை
சொரி ஓமம்
அரிசித்திப்பிலி
கண்டந்திப்பிலி
சண்பகப்பூ
குங்குமப்பூ
அமுக்கிராக்கிழங்கு
திராட்சைப்பழம்
மிளகு
விரலிமஞ்சள்
மஞ்சள் கடுக்காய்த்தோல்
தான்றிக்காய்த்தோல்
நெல்லிமுள்ளி
நெரிஞ்சிமுள்
உலர்த்தின ஓரிதழ்த் தாமரை
யானைத் திப்பிலி
லவங்கம்
உலர்ந்த செங்கழுநீர்க்கிழங்கு
சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்கு
உளுந்து மாவு
நீர்முள்ளி விதை
ஏல அரிசி
இலவம்பிசின்

இவை வகைக்கு (ஒன்றுக்கு) ½ பலம்

(b) இலிங்க செந்தூரம்
அண்ட பஸ்பம்

வங்க பஸ்பம்
தங்க பஸ்பம்
பவள பஸ்பம்
பவளப்புற்று பஸ்பம்
சங்குப் பஸ்பம்
இவை வகை (ஒன்றுக்கு) ¼ பலம்

கஞ்சா இலைச்சாறு அல்லது
கஞ்சா கசாயம்
செல்லத்தக்க அளவு.

***செய்முறை :*** (a) இதிலுள்ள சரக்குகளில் குங்குமப்பூ திராட்சைப்பழம், உளுந்து மாவு ஆகிய இவைகள் தவிர மற்றவைகளை இடித்து சூரணித்து வஸ்திரகாயம் செய்து கொள்ள வேண்டியது. குங்குமப்பூவைக் கல்வத்தில் இட்டு கஞ்சா இலைச்சாற்றை அல்லது கஷாயத்தைக் கொஞ்சம் விட்டு அரைத்து மைபோல் ஆனபின் திராட்சைப் பழத்தை சேர்த்து அரைக்க வேண்டும். அது நன்றாய் அரைபட்டு மசிந்தபின் முன் சூரணங்களைச் சேர்த்து, முன் திராவகத்தைச் சிறுகவிட்டு 1 மணி நேரம் அரைத்து,

(b) இதிலுள்ள செந்தூர பஸ்பங்களை ஒன்றாகச் சேர்த்து முன் திராவகத்தையே சிறுகச் சிறுக விட்டு அரைக்க வேண்டும். இவ்விதம் ஒரு மணிநேரம் அரைத்த பின்பு உளுந்துமாவைச் சேர்த்து முன் திராவகத்தை சிறுக, சிறுக விட்டு 2 சாமம் அரைத்து ஒரு குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி கற்காரக்குள்ள சீசாவில் பத்திரப்படுத்த வேண்டும்.

***பிரமாணம் :*** வேளை ஒரு மாத்திரை உட்கொண்டு சீரண சக்திக்கு தகுந்தபடி காய்ச்சி கற்கண்டிட்ட பசுவின் பாலை பானம் செய்ய வேண்டும்.

***உபயோகம் :*** தலையில் மூளையைப் பலப்படுத்தி நரம்புகளுக்கு முறுக்கேற்றி உற்சாகம், ஊக்கம், தைரியம் ஆகியவைகளை உண்டாக்கி அவற்றை விருத்தி ஆக்கும். ஞாபக சக்தியை அதிகப்படுத்தும். தளர்ந்து மெலிந்து சோர்ந்த அவயங்களை கெட்டிப்படுத்தி பெருகச் செய்து முறுக்கேற்றிப் பலப்படுத்தும். ஆண் தன்மை உண்டாக்கி அதனை அதிகரிக்கச் செய்யும். போகசக்தி, தம்பன சக்தி ஆகியவைகளை உண்டாக்கும். இதன் சிறந்த குணம் விஷேசமாய் உள்ளன. இதை உண்டு அனுபவிப் பவர்களுக்கு இதன் சிறந்த குணம் கரதலாமலகம்★ போல செவ்வனே புலப்படும். இதன் விஷேசத்தை சுருக்கி சொல்லில் விருத்த திசையை மாற்றிக் கௌமார திசையை உண்டாக்கும்.

[***குறிப்பு :*** இந்த மாத்திரையை எல்லாரும் செய்து கொள்வது அசாத்தியம் ஆகையால் பல கனவான்களின் வேண்டுகோளின்படி நமது இராச அவுஸ்த சாலையில் சித்தமாகச் செய்து விற்கப்பட்டு வருகிறது. 64 மாத்திரை யுள்ள குப்பி விலை ரூ. 10/- ]

### கஞ்சா கசாயம்

***செய்முறை :*** சுத்தி செய்த கஞ்சா 6 பலம் இதில் 1 படி தண்ணீரை வார்த்து, எட்டில் ஒரு பாகமாய் சுண்ட வைத்து இறக்கி இளஞ்சூடாய் இருக்கும் பதத்தில் நன்றாகப் பிசைந்து வடிகட்டி திப்பி நீக்கிப் பிழிந்து எடுத்துக் கொள்வதேயாம். பச்சைக் கஞ்சா அகப்படாத சமயங்களில் மேற்கண்டபடி கசாயம் செய்து உபயோகித்துக் கொள்ளலாம்.

— — — — —

---

**★ கரதலாமலகம் – கைமேல் பலன்–உள்ளங்கை நெல்லி கைமேல் தாமரை**

## 18. கப ராசாங்கம்

முத்து பஸ்பம்
பவள பஸ்பம்
மேல்தோல் சீவின சுக்குச் சூரணம்
மஞ்சள் கடுக்காய்த்தோல் சூரணம்
தான்றிக்காய்த்தோல் சூரணம்
நெல்லிவற்றல் சூரணம்
கோரைக்கிழங்கு சூரணம்
லவங்கப்பட்டைச் சூரணம்
அரிசித்திப்பிலிச் சூரணம்
கோஷ்டச் சூரணம்
அக்கிராகாரச் சூரணம்
சன்ராஸ்டச் சூரணம்
சதகுப்பைச் சூரணம்

இவை வகை 1க்கு சம எடை

கையாந்தகரைச்சாறு
செல்லத்தக்க அளவு

***செய்முறை :*** மேற்கண்டவைகளை எல்லாம் கல்வத்தில் இட்டு கையாந்தகரைச்சாற்றை சிறுகச்சிறுக விட்டு நாலு சாமம் அரைத்து குன்றிமணி பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் பத்திரப்படுத்தவும்.

***பிரமாணம் :*** மாத்திரை 1-2

***அனுபானம் :*** தேன், நெய் சன்னராஷ்டகசாயம், சுக்கு கசாயம், பெருஞ்சீரகக் கசாயம், அதிமதுரக்கசாயம் முதலியவைகளாம்.

***உபயோகம் :*** மேற்கண்ட விதமாகக் காலை, மாலை இரண்டு வேளையும் பத்து தினம் உபயோகித்தால் க்ஷயரோகம், இரைப்பு ரோகம், மந்தாரகாசம், சுவாச காசம், இருமல் ரோகம் ஆகியவைகள் தீரும். இரத்தப் பிரமியம், கிருமிரோகம், சிரோரோகம், பீனிசரோகம் ஆகிய இவைகள் குணமாகும். கப சம்பந்தமான எல்லா வியாதிகளிலும் இதனைத் தகுந்த அனுபானங்களில் உபயோகிக்கக் கடவுளது கிருபையால் நிச்சயமான குணத்தை காணலாம்.

***பத்தியம் :*** தேககூபாவம், வியாதியின் பலம் ஆகியவை களுக்கு தகுந்தபடி சத்துள்ளவைகளும், இலகுவாகச் சீரணிக்க தகுந்தவைகளுமான அன்னபனாதிகளை உபயோகிக்க வேண்டும். சீதளப்பதார்த்தங்கள், அதிக உஷ்ணமான பதார்த்தங்கள், புளிப்பு வஸ்த்துக்கள், கரப்பான் வஸ்துக்கள் ஆகியவைகளை நீக்க வேண்டியது, பெண் பத்தியம் அவசியம் நீக்கத்தக்கது.



## 19. கிரந்தி எண்ணெய்

| | |
|---|---|
| *சிற்றாமணக்கு எண்ணெய்* | *16 பலம்* |
| *முற்றலான மாவிலங்கப் பட்டையை அரைத்த விழுது* | *5 பலம்* |
| *மிர்தார்சிங்கித்தூள்* | *2 விராகன் எடை* |
| *தோலுரித்த வெங்காயம்* | *2 பலம்* |

***செய்முறை :*** எண்ணெயில் மேற்படி விழுதைக் கரைத்து மிர்தார்சிங்கியைப் பொடித்துத் தூவி, அடுப்பி லேற்றி சிறுதீயாக எரித்து நீர் சுண்டினபதத்தில் வெங்காயத்தைச் சிறுக அரிந்து போட்டு மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

***பிரமாணம் :*** பலம் $\frac{1}{4}$ - $\frac{1}{2}$

***அனுபானம் :*** இளநீர், நீராகாரம், பன்னீர், சோம்பு திராவகம் முதலியவைகளாம்.

***உபயோகம் :*** இதனை கீழ்க்கண்ட பத்தியத்துடன் மூன்று நாள்கள்-பானஞ் செய்துவர ஆறுவகை கிரந்தி ரோகங்களும் பஞ்சாய்ப் பறந்து போகும். கிரந்தி ரோகங்களுக்கு வைரியான முறைகளில் இது அறிய முறையாயிருப்பதுடன் அதிகச் சூட்சமானதும் வைத்திய இரகசிய முறைகளில் ஒன்றானதுமாம்.

***பத்தியம் :*** புளி, புகை, உப்பு ஆகியவைகளை அறவே நீக்கவேண்டும்.

## 20. அகஸ்தியர் குழம்பு

| | |
|---|---|
| மஞ்சள் கடுக்காய்த்தோல் சூரணம் | 1 வராகன் எடை |
| கடுகுரோகணிச் சூரணம் | ,, |
| அரிசித்திப்பிலிச் சூரணம் | ,, |
| சுத்தி செய்த கருநாபிச் சூரணம் | ,, |
| கருஞ்சீரகச் சூரணம் | ,, |
| கடுகு, பெருங்காயச் சூரணம் | ,, |
| பொரித்த பெருங்காயம் | ,, |
| சுத்தி செய்த மடலரிதாரம் | ,, |
| சுத்தி செய்த இரசம் | ,, |
| பொரித்த வெங்காரம் | ,, |
| இந்துப்புத்தூள் | ,, |
| சுத்திசெய்த மனோசிலை | ,, |
| சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு | 12 வராகன் எடை |
| பனைவெல்லம் | 24 வராகன் எடை |
| தேங்காய் சிரட்டைக் கரி | 4 வராகன் எடை |

உத்தாமணிச்சாறு
தேங்காயின் தனிப்பால்

இவை செல்லத்தக்க அளவு

***செய்முறை :*** தாளகத்தை கல்வத்திலிட்டு நுண்மையாகப் பொடித்து இரசத்தையும், மனோசிலையையும் சேர்த்து அரைக்க வேண்டும். இரசம் வடிந்த பின்பு மற்ற சரக்குகளையும் சேர்த்து ஒருமணி நேரம் அரைத்து எல்லாம் நன்றாகக் கலந்த பின்பு உத்தாமணிச்சாற்றை கொஞ்சம் எடுத்து அதில் பனை வெல்லத்தைக் குழம்பு பதமாகக் கரைத்து மேற்படி மருந்தில் சிறுகச்சிறுக வார்த்து கைவிடாமல் நான்கு சாமம் அரைக்கவேண்டும். பனை வெல்லம் கரைத்த குழம்பெல்லாம் செலவாகிவிட்டால் உத்தாமணிச்சாற்றை விட்டு அரைக்க வேண்டும்.

இவ்விதம் நான்கு சாமம் அரைத்த பின்பு தேங்காய்ப் பாலைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் கைவிடாமல் அரைக்க வேண்டும். இவ்விதம் நான்கு சாமம் ஆனபின்பு மெழுகைப் போல கெட்டிப்பதம் ஆகிறவரையில் திராவகம் விடாமல் அரைத்துப் பீங்கான் சிமிழில் அல்லது தந்தச் சிமிழில் பத்திரப்படுத்த வேண்டும்.

***பிரமாணம் :*** குன்றிமணி எடை ¼ - ½

சமயோசிதம்போலத் தகுந்த அனுபானங்களில் உபயோகிக்க வேண்டும். இதன் அனுபான விசேஷ முறைகள் அனேக கிரந்தங்களில் சொல்லப்பட்டிருப்பதாலும் அனேக பண்டிதர்களால் அனுபோகப்படுத்தப் பட்டு வருகின்றபடியாலும் இங்கு சுருக்கமாகச் சொல்லி முடித்தோம்.

இதன் முறையும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாகச் செய்கின்றார்கள். ஆயினும் மூலத்தில் கண்டபடி இங்கு எழுதப்பட்டிருக்கிறது.

***உபயோகம் :*** பதின்மூன்று வகைச் சன்னிகள், எல்லாவகைப் பாம்பு விஷங்கள், பேநாய் விஷம், ஓநாய் விஷம், பதினெட்டு வகை எலிக்கடி விஷம், கை கால் விஷம், வயிற்றிலுள்ள எல்லா வியாதிகளும் தீரும். சுருங்கிச் சொல்லில் இதனைத் தகுந்த அனுபானங்களில் உபயோகித்தால் எண்பது வகை வாதரோகம், நாற்பது வகை பித்தரோகம், இருபதுவகை கபரோகம் ஆகியவைகள் தீரும்.

***பத்தியம் :*** வியாதிக்குத் தகுந்தபடியும், தேக சுபாவத்திற்கு தகுந்தபடியும் நிதானித்து ஏற்படுத்த வேண்டியதே பிரதானம்.

***குறிப்பு:*** இந்த மருந்தில் நேர்வாளம் சேர்ந்திருப்பதால் சுகுமார தேகிகளுக்கு அதிகமாய்ப் பொருந்தாது. ஆகையால் வைத்தியர்கள் இவ்வித ஒளஷதங்களை அதிக கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் உபயோகிக்க வேண்டியது.

## மனோசிலை சுத்தி

***தேவைப்படும் பொருள்கள் :*** மனோசிலை-2 பலம், பெண் வெள்ளாட்டு மூத்திரம் - 1¼ படி.

***செய்முறை :*** மனோசிலையை சிறு துண்டுகளாகச் செய்து மெல்லிய வஸ்திரத்தில் தளர்ச்சியாக முடிந்து முன் மூத்திரத்தை ஒரு மண்பாண்டத்தில் விட்டு முன் முடிச்சை கிளியாகக் கட்டி மூத்திரத்துக்குள் தொங்கவிட்டு பானையின் அடியில் படாமல் தொங்கவிட வேண்டும். இதனை அடுப்பின் மீதேற்றி எரித்து மூத்திரம் சுண்டினபின் ஆறவிட்டு இறக்கி தண்ணீர்விட்டு கழுவி எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி ஆட்டின் பித்து சலத்தை சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து சிறு வில்லைகளாகச் செய்து வெயிலில் உலர்த்திக்கொள்ள வேண்டும்.

நன்றாய் உலர்ந்த பின்பு பிறகும் கல்வத்திலிட்டுப் பொடித்து முன் பித்து சலத்தை சிறுகச் சிறுக விட்டு முன் போல அரைத்து முன்போல உலர்த்திக்கொள்ள வேண்டும்.

இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் மேற்படி பித்து நீரில் அரைத்து உலர்த்திக்கொண்டால் மிகவும் திறமான சுத்தியாம். இதனை தனியாகவே எல்லா வியாதிகளிலும் உபயோகிக்கலாம். இப்படி செய்ய இயலாதவர்கள் மேற்படி மூத்திரத்தில் மாத்திரம் சுத்தி செய்து கொள்ளலாம். இது அகப்படாவிட்டால் மிளகு கஷாயத்தில் மேற்கண்டபடி எரித்து எடுத்துக் கொள்ளலாம்.

தாளகம்-நாபி-வாளம் ஆகியவைகளின் சுத்தி முன் சொல்லப்பட்டிருக்கின்றன.

## 21. மதன சிந்தாமணி லேகியம்

| | | |
|---|---|---|
| (a) | புனல் தண்டு | 2 பலம் |
| | சிறுகாஞ்சொறிவேர் | ,, |
| | கொடிவேலி வேர்ப்பட்டை | ,, |
| | சிறுகிளா வேர்ப்பட்டை | ,, |
| | வில்வவேர்ப்பட்டை | ,, |
| | கோரங்கிழங்கு | ,, |
| | பிரப்பங்கிழங்கு | ,, |
| | துத்தி வேர்ப்பட்டை | ,, |
| | வெட்டிவேர் | ,, |
| | விலாமிச்சவேர் | ,, |
| | நஞ்சகற்றின சீந்திக்கொடி | ,, |
| | நிலப்பனைக்கிழங்கு | ,, |
| | இலவங்கப்பட்டை | ,, |
| | மிளகு | ,, |
| | புரசம் வேர்ப்பட்டை | ,, |
| | அதிமதுரம் | ,, |
| | மேல்தோல் சீவிய சுக்கு | ,, |
| | அரிசித்திப்பிலி | 2 பலம் |
| (b) | அரிசித்திப்பிலி | ¼ பலம் |
| | மிளகு | ,, |
| | அதிமதுரம் | ,, |
| | கொத்தமல்லிவிதை | ,, |
| | வால்மிளகு | ,, |
| | தாளிசபத்திரி | ,, |
| | இலவங்கப்பத்திரி | ,, |
| | மஞ்சள் கடுக்காய்த்தோல் | ,, |
| | ஆலம்விதை | ,, |
| | அரசவிதை | ,, |
| | அமுக்கிராக்கிழங்கு | ,, |

| | |
|---|---|
| அபின் | ¼ பலம் |
| நீர்முள்ளிவிதை | ,, |
| சீமை நீர்முள்ளிவிதை | ,, |
| துத்திவிதை | ,, |
| பருத்தி விதைப் பருப்பு | ,, |
| மேல்தோல் சீவின சுக்கு | ,, |
| சாதிக்காய் | ,, |
| நற்சீரகம் | ,, |
| இலவம்பிசின் | ,, |
| யானைத்திப்பிலி | ,, |
| வாலுளுவை அரிசி | ,, |
| திராட்சைப் பழம் | ,, |
| துளசிவிதை | ,, |
| கையாந்தகரை விதை | ,, |
| உளுந்துமாவு | ,, |
| சுத்திசெய்த கஞ்சா | 7½ பலம் |
| சீனி சர்க்கரை | 20 பலம் |
| தேன் | 20 பலம் |
| நெய் | 10 பலம் |

***செய்முறை :*** (a) இதிலுள்ளவைகளை சிதைத்து நாலுபடி தண்ணீர்விட்டு பன்னிரண்டு மணி நேரம் ஊற வைத்து அடுப்பேற்றி சிறுதீயில் எரித்து எட்டில் ஒரு பாகமாகச் சுண்ட வைத்து இறக்கி இளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டிக் கொள்ளவும்.

(b) இதிலுள்ளவைகளில் அபின், திராட்சைப்பழம், உளுந்துமாவு ஆகிய மூன்றையும் தவிர மற்றவைகளை இடித்துத் தூள்செய்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். அபினில் கொஞ்சம் தண்ணீர்விட்டு கரைத்து வடிகட்டிக்

கொள்ள வேண்டும். திராட்சைப் பழத்தை வெண்ணெய் போல் அரைத்து உளுந்து மாவையும் மேற்படி சூரணத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

(c) இதிலுள்ள சர்க்கரையையும், தேனையும் முன் சுத்தப்படுத்தின கசாயத்தையும் ஒன்றாய்க் கலந்து அடுப்பேற்றி சிறு தீயாய் எரித்து சர்க்கரை கரைந்து இரண்டு கொதி வந்தவுடன் மறுபடியும் அதை வடிகட்டி திப்பி நீக்கி பாகை அடுப்பில் ஏற்றி சிறு தீயால் எரித்து பாகுபதம் ஆனவுடன் முன் சுத்தப்படுத்தின சூரணத்தை சிறுகச் சிறுகத் தூவி மர மத்தால் கடைந்து அபின் சலத்தையும் விட்டு நன்றாக மிஸ்ரமித்து நெய்யையும் விட்டு எல்லாம் ஒன்றாகும்படி கிளறிவிட்டு ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

***பிரமாணம் :*** வராகன் எடை ½ - 1½

***உபயோகம் :*** இதனை ஆகாரம் சாப்பிட்டபின் சாப்பிடுவது உசிதம். காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம்.

சலமேகம், மதுமேகம், பிரமேகம், இரணமேகம் முதலிய பல ரோகங்கள் தீரும். கடிவிஷங்கள், கபக்கட்டு, தொண்டைக்கட்டு, இருமல் ரோகம் ஆகியவைகள் தீரும். துரிதஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம், இந்திரிய சிராவகம், இந்திரிய ஒழுக்கு முதலியவைகள் தீர்ந்து இந்திரியம் கட்டுப்பட்டு ஸ்தம்பன சக்தி, யோக சக்தி, தாது விருத்தி முதலியவைகள் உண்டாகும். நரம்புகள் முறுக்கேறி தேகதிடம் முதலியவை உண்டாகும். வச்சிர தேகமாகும். முக வசீகரம், தேக வசீகரம், தேகக் கட்டழகு முதலியவை உண்டாகும். இதனால் உண்டாகும் ஆண்மை முதலிய வீரிய சக்தி பலவகை ஆகையாலும் அதிவிஷேசம் ஆகையாலும் இதனை உண்டு அனுபவிப்பவர்கள் தாமே தெரிந்துகொள்ளக் கூடும்.

***பத்தியம்:*** இது லாகிரி உள்ள லேகியம் ஆகையால் லாகிரிப் பழக்கம் இல்லாதவர்கள் இதனைக் குறைந்த அளவாக உபயோகித்து வர வேண்டியது. ஆனால் படிப்படியாக அதிகரித்துக் கொள்ளலாம். பசுவின்பால், பால் பாயாசம், மிட்டாய் தினுசுகள், கோதுமை அல்வா, கோதுமைப்பால் அல்வா, சத்துள்ள ஆகாரங்களை சீரண சக்திக்குத் தகுந்தபடி விஷேசமாக உபயோகித்து வரவேண்டியது. இதனை உட்கொண்டவுடன் காய்ச்சி கண்கண்டிட்ட பசுவின்பாலை சீரண சக்திக்குத் தகுந்தபடி ½ - *1* ஆழாக்கு பானம் செய்து வரவேண்டும்.

## 22. சீனச் சூரணம்

| | |
|---|---|
| *அரிசித்திப்பிலி* | *1 பலம்* |
| *ஓமம்* | ,, |
| *இலவங்கப்பட்டை* | ,, |
| *சித்திரமூல வேர்ப்பட்டை* | ,, |
| *மேல்தோல் சீவின சுக்கு* | ,, |
| *கண்டந்திப்பிலி* | ,, |
| *உலர்த்தின பொன்னாங்காணி* | ,, |
| *சன்னராஷ்டம்* | ,, |
| *மஞ்சள் கடுக்காய்த்தோல்* | ,, |
| *கருஞ்சீரகம், தாளிசபத்திரி* | ,, |
| *மிளகு* | ,, |
| *இலவங்கப்பத்திரி* | ,, |
| *அக்கிரகாரம், இலவங்கம்* | *1 பலம்* |
| *சுத்தி செய்த பரங்கிச்சக்கை சூரணம்* | *15 பலம்* |
| *சீனி சர்க்கரை* | *30 பலம்* |

***செய்முறை :*** முன்சொன்ன சரக்குகளை எல்லாம் இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம், பரங்கிச் சக்கை சூரணம், சீனிச் சர்க்கரை ஆகிய மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து கல்வத்தில் சிறுகச் சிறுகப்போட்டு, அரைத்து ஒன்றாக மிஸ்ரமித்துச் செய்துகொள்ள வேண்டும்.

***பிரமாணம் :*** வராகன் எடை *2 - 3.*

***உபயோகம் :*** சூலை ரோகங்கள், மேகப்புண், மேகப்படைகள், மேகத் தடிப்புகள், மேகப்புற்றுகள், கன்னப்புற்றுகள், தனப்புற்றுகள், தலைப்புற்றுகள், மேகத்திமிர், குஷ்டரோகம் ஆகியவைகள் தீரும். இரத்த சுத்தி உண்டாகி தேகசுகம் உண்டாகும்.

***பத்தியம்:*** புளிப்பு வஸ்துக்கள், கத்திரிக்காய் முதலிய கரப்பான் வஸ்துக்கள் ஆகாது. இன்னும் தேக சுபாவத்திற்கு ஒவ்வாத வஸ்துக்களையும் நீக்கவேண்டியது. ஸ்திரீ சங்கமம் அறவே நீக்க வேண்டியது.

# 23. மலபந்த நிவாரணி

| | |
|---|---|
| சாதிப்பத்திரி | ¼ பலம் |
| சீந்தில் சர்க்கரை | ,, |
| மேல்தோல் சீவின சுக்கு | ,, |
| அகிராகாரம் | ,, |
| துத்தி விதை | ,, |
| அதிமதுரம் | ,, |
| கண்டந்திப்பிலி | ,, |
| இந்துப்பு | ,, |
| மிளகு | ,, |
| அரிசித்திப்பிலி | ,, |
| மஞ்சள் கடுக்காய்த்தோல் | ,, |
| தான்றிக்காய்த்தோல் | ,, |
| நெல்லி வற்றல் | ,, |
| அதிவிடையம் | ,, |
| ஓமம் | ,, |
| சந்தனம் | ,, |
| பரங்கிச்சக்கை | ,, |
| காட்டாத்திப்பூ | ,, |
| இலவங்கப்பத்திரி | ,, |
| இலவங்கப்பட்டை | ,, |
| கொத்தமல்லி விதை | ¼ பலம் |
| குச்சி, காம்பு நீக்கி சுத்தி செய்த நில ஆவாரை | 5¼ பலம் |
| மேற்புரணியையும், உள்நரம் பையும் நீக்கி பாலில் வேகவைத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்த சிவதை வேர்ச்சூரணம் | 10½ பலம் |
| சீனி சர்க்கரை | 21 பலம் |
| சிற்றாமணக்கு எண்ணெய் | 21 பலம் |

***செய்முறை :*** எண்ணெயில் சீனியைப்போட்டு அடுப்பேற்றி சிறுதீயாய் எரித்து மூன்று கொதி வந்த பின்பு முன் சரக்குகளை இடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம், சிவதைச் சூரணம் இவ்விரண்டு வகைகளையும் ஒன்றாகக் கலந்து மேற்படி பாகில் தூவி லேகிய பதமாக இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

***பிரமாணம் :*** வராகன் எடை 1-3.

***உபயோகம் :*** நாள்பட்ட மலபந்தம் நீங்கி மலம் கிரமப்படும். மூல ரோகம், கிருமிரோகம், குடல் வாதம், குன்ம ரோகம், மேகச்சட்டை, மேகப்புடைப்பு, மேகப்படை ஆகியவைகள் தீரும். பல மலங்கள் வெளிப்படும். தேகசுகம் விருத்தியாகும். வயிற்றிலுள்ள கபக்கட்டு வெளிப்படும். பசி தீபனம் அதிகப்படும்.

இதனை தொடர்ந்தேற்றியாக உபயோகித்து வந்தால் தேகத்திலுள்ள வியாதிகளை நீக்கி தேகத்தைக் காப்பாற்றி வச்சிரக் கவசத்தைப் போன்று தேகத்தைப் பாதுகாத்து வரும். இது சஞ்சீவி கற்பகத்துக்கு ஒப்பானது.

மலபந்தமானது எல்லா வியாதிகளுக்கும் தாய், தந்தை என மூவகைப் பண்டிதர்களாலும் சாங்கோபாங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது எல்லாத் தேகிகளுக்கும் பொருந்தும். ஆகையால் இது சிறந்த முறைகளில் அரியதொன்று என்பதற்கு ஆட்சேபணை இல்லை.

■■■■■■■■■■■

## 24. சிவனார் வேம்பு தைலம்

முட்காவேளை வேர்
சிறியாநங்கை சமூலம்
நிலவாகை வேர்
பேராமுட்டி
மாவிலிங்கப்பட்டை
பெருமரப்பட்டை வேர்
வெள்ளைச்சாரணை வேர்
உலர்த்தின வெள்ளருகு
அளிஞ்சில் வேர்ப்பட்டை
குன்றிமணிவேர்
கோரைக்கிழங்கு
மிளகு
ஓமம்
சதக்குப்பை
சீரகம்
மாவேர்
உத்தாமணி வேர்
சுத்தி செய்த எட்டிவிதை
புங்கம் விதை
பேய்சுரை விதை
பேய்க்குமட்டி விதை
பேய் பீர்க்க விதை
மஞ்சள்
சுத்தி செய்த சேராங்கொட்டை
கருஞ்சீரகம்
எட்டிவேர்
வால்மிளகு
சர்க்கரை
குமட்டிவிதை

தகரை விதை

சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு
செங்கதாரிப்பட்டை
கொடிவேலி வேர்ப்பட்டை
ஆதண்டை வேர்ப்பட்டை
உலர்த்தின கையாந்தகரை
எருக்கன்வேர்
மிரியார் கூந்தல் வேர்
இவை வகை 1க்கு சம எடை

மேற்கண்டவற்றிற்கு சமன்-சிவனார் வேம்பு சமூலம்

***செய்முறை:*** மேற்கண்ட சரக்குகளுள் வேர் வகைகளை சிறு துண்டுகளாகத் துண்டித்தும், மற்றவை களைச் சேர்த்தும்., இடித்தும் பாகப்படி குழித்தைலம் இறக்கிக் கொள்ளவேண்டும்.

***பிரமாணம் :*** மூன்று துளிவரையில், ஐந்து துளி வரையில் உபயோகிக்கலாம். பலத்த தேகிகளானால் ஏழு அல்லது ஒன்பது துளிவரை உபயோகிக்கலாம்.

***அனுபானம் :*** பொரி அரிசி மாவு, சீனிச்சக்கரை, நெய், தேன், சர்பத்துக்கள் முதலியவைகளாம்.

***உபயோகம் :*** மேக ரோகங்கள், சூலை ரோகங்கள், இசிவு ரோகங்கள், கிருமி ரோகங்கள், குட்டரோகம், குறை நோய், குன்ம ரோகம், பைத்திய ரோகம், வெறி ரோகம் முதலியவைகள் சூரியனைக் கண்ட பனி போலாகும். பாம்பு விஷம், எலி விஷம், நாய் விஷம், பூரான்கடி விஷம், அட்டைக்கடி விஷம், சர்ப்பங்களின் விஷம், தேள் விஷம், ஜலமண்டல விஷம் முதலிய எல்லா விஷங்களும் தீரும்.

***பத்தியம்:*** புளி, புகை, பெண் ஆகியன அறவே நீக்க வேண்டியது. வியாதி பலம், தேக பலம் ஆகியவைகளை நிதானித்து உப்பில்லாத பத்தியமாகாது அல்லது வறுத்த உப்பைச் சேர்த்தாவது பத்தியம் வைக்க வேண்டியது.

## 25. பலகடி மேகச் சஞ்சீவி

| | |
|---|---|
| செப்பு நெருஞ்சில் சமூலம் | 1 பலம் |
| சிற்றரத்தை | ,, |
| வெள்வேலம்பட்டை | ,, |
| உலர்த்தின சத்தி சாரணைக் கிழங்கு | ,, |
| உலர்த்தின ஆவாரம்பூ | ,, |
| அரசவேர்ப்பட்டை | ,, |
| சங்கம் வேர்ப்பட்டை | ,, |
| கொடிவேலி வேர்ப்பட்டை | ,, |
| சிற்றாமணக்கு வேர்ப்பட்டை | ,, |
| பூத கரப்பான் பட்டை | ,, |
| வாத கரப்பான் பட்டை | ,, |
| கடுகு மிளகரணை | ,, |
| மஞ்சள் கடுக்காய்த் தோல் | 2 பலம் |
| பிரப்பன் கிழங்கு | ,, |
| தான்றிக்காய்த் தோல் | ,, |
| பேரரத்தை | ,, |
| கருஞ்சீரகம் | ,, |
| இரசம் | ,, |
| கெந்தகம் | ,, |
| வெட்பாலை அரிசி | ,, |
| பெருஞ்சீரகம் | ,, |
| சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு | ,, |
| நீரடி முத்துப் பருப்பு | ,, |
| சுத்தி செய்த எட்டிக்கொட்டை | ,, |
| சேராங்கொட்டை | ,, |
| எலியாமணக்கம் வேர் | ,, |
| கார்போக அரிசி | ,, |
| சிவனார் வேம்பு | 80 பலம் |

***செய்முறை :*** இச்சரக்குகளில் கெந்தகத்தையும், இரசத்தையும் சேர்த்தரைத்து நன்றாய்க் கருத்த பின்பு எடுத்துக்கொள்ள வேண்டும்.

வேர் வகைகளையும், பட்டை வகைகளையும் சிறு துண்டுகளாகத் துண்டித்துக் கொள்ள வேண்டும். சிவனார் வேம்பையும் அவ்விதமே சன்னமாகவே துண்டித்துக்கொள்ள வேண்டும். பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல் உரலில் நன்றாகச் சிதைத்து பெரிய மணபாண்டத்தில் போட்டு பாகப்படி குழித்தைலம் இறக்கிக்கொள்ள வேண்டும்.

***பிரமாணம் :*** துளி 5 - 10

***அனுபானம் :*** பொரி அரிசிமாவு, சீனிச்சக்கரை, அதிமதுரச் சூரணம், சோம்புச் சூரணம், ஏலரிசிச் சூரணம் முதலியவைகளாம். இதனை ஆரம்பிக்கும்போது தான் வழிபடும் கடவுளைத் தியானித்து தருமம் முதலியவை களையும் செய்து ஆரம்பிக்க வேண்டும்.

***உபயோகம் :*** குட்ட ரோகங்கள், சன்னி ரோகங்கள், கருமேகங்கள் பாம்பு முதலியவைகளின் கடிவிஷங்கள், மேகப்புண்கள், மேகரணங்கள், மேகப்புற்று, கன்னப்புற்று, தனப்புற்று, யோனிப்புற்று, உச்சிப்புற்று, கள்ளிப்பூக்கிரந்தி, நுணாக்கிரந்தி, அழிரணங்கள், குளிரணங்கள், யானைக் கால் வீக்கம், யானைக்கால் சுரம், எலிக்கடி விஷம், நாய்க்கடி விஷம் முதலிய அநேக ரோகங்களும் கடிவிஷங்களும் தீரும்.

***பத்தியம்:*** புளி. புகை, பெண் ஆகியவைகளை நீக்க வேண்டியது. வியாதி ஆரம்பமானதாகவும், இலேசான தாகவும் இருந்தால் இச்சாபத்தியமாக உபயோகித்து

வரலாம். வியாதி நாள்பட்டதாக இருந்தாலும், அதிக கடினமானதாகி விட்டால் மாத்திரம் மேற்கண்டபடி கடினப் பத்தியமாக வைக்க வேண்டியது. இது மூலிகை சம்மந்தமான முறையாகையால் சுகுமாரதேகி முதலியவர்களுக்கும் உபயோகிக்கலாம்.

இன்னும் சிகிச்சகர்களின் வியாதியின் பலத்திற்கும், தேக சுபாவ சக்திக்கும் தகுந்தவிதமாக காய்கறி பதார்த்தங்களில் நீக்க வேண்டியவைகளை நீக்கியும், சேர்க்க வேண்டியவைகளை சேர்த்தும் பத்தியம் ஏற்படுத்த வேண்டும். அவை எல்லாவற்றையும் இங்கு எழுதிட முடியாது. ஆகையால் சமயோசிதம்போல் அவரவர்களின் தேக சுபாவத்திற்கு ஏற்றவைகளைச் சேர்த்தும், ஏற்காதவைகளை சேர்க்காமலும் விட வேண்டியதே பிரதானமாகும்.

## 26. பல மூலிகை கற்பம்

இந்த மூலிகை கற்பம் யோக சாதனை செய்கிறவர்களுக்கு மாத்திரம் ஏற்பட்டது. அதனால் இங்கு எழுதவில்லை.

## 27. வைரவ மாத்திரை

| | |
|---|---|
| சுத்தி செய்த பச்சை நாபி | 1 விராகன் எடை |
| சுத்தி செய்த சிற்றாமணக்கு பருப்பு | ,, |
| சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு | ,, |
| சுத்தி செய்த இரச செந்தூரம் | 3 விராகன் எடை |
| எலுமிச்சம்பழச்சாறு | செல்லத்தக்க அளவு |

***செய்முறை :*** இரச செந்தூரத்தை கல்வத்தில் பொடித்து மற்ற மூன்று சரக்குகளையும் சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றை சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமாவது அறை குன்றிமணியெடை மாத்திரை களாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ள வேண்டியது.

***பிரமாணம் :*** மாத்திரை 1

***அனுபானம் :*** சாதிப்பத்திரி, பரங்கிச்சக்கை, அரிசித் திப்பிலி, செவ்வியம், மேல்தோல் சீவின சுக்கு, சித்திர மூல வேர்ப்பட்டை, யானைத் திப்பிலி, ஓமம் இவை வகை 1க்கு வராகன் எடை 1¼ , இவற்றை இளம் வறுப்பாக வறுத்து ஆழாக்கு தண்ணீர் விட்டு மூன்றில் ஒரு பாகமாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டின கசாயத்தில் மேற்படி மாத்திரையை உரைத்துப் பானஞ்செய்ய வேண்டும்.

***உபயோகம் :*** எல்லாவகை சுரங்கள், எல்லாவகை சன்னி, எல்லாவகை தோஷங்கள், குளிர்சுரங்கள், கப ரோகங்கள், வயிற்றுவலி, வலிப்புகள், கப சம்பந்தமான இருமல்கள், அலறுசன்னி, வாய்வுகள், பட்சவாதம் (பக்கவாதம்) சீதளரோகங்கள் முதலியவைகள் தீரும்.

***பத்தியம்:*** வியாதி சுபாவத்திற்கும், தேக சுபாவத்திற்கும் தகுந்ததுபோல் சமயோசிதமாகப் பத்தியம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

***பச்சைநாபி சுத்தி :*** பச்சை நாபி சுத்தி முன்சொல்லி யிருக்கிற கருநாபியைப் போலவே சுத்தி செய்து கொள்ள வேண்டும்.

***சிற்றாமணக்குப் பருப்பு சுத்தி :*** சிற்றாமணக்குப் பருப்பு சுத்தி-இதனை மணம் வரும்படியாக ஓட்டில் வறுத்து இதனைப் பிளந்து நடுவிலுள்ள இலைகளை எடுத்து நீக்கி பருப்புகளை மாத்திரம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

***இரசசெந்தூரச் சுத்தி :*** கடையில் விற்கும் இரச செந்தூரத்தை வாங்கி சிறு துண்டுகளாகத் துண்டித்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு அதில் தாய்ப்பாலில் அவை அமிழ்ந்திருக்கும்படியாக விட்டு மூன்றுநாள் ஊற வைக்கவேண்டும். பிரதி தினமும் பாலை மாற்றி, மாற்றிப் புதிய பால் விட்டு வரவேண்டும். நாலாம் நாள் தண்ணீர் விட்டு கழுவிச் சுத்தம் செய்து வெயிலில் வைத்து ஈரம் உலர்ந்தபின்பு கல்வத்தில் பொடித்துக் கொள்ளவும். அல்லது இரசச் செந்தூரத்தைக் கட்டியாக எடுத்துத் தாய்ப்பாலில் இரண்டு சாமம் சுருக்கிட்டாலும் சுத்தியாகி விடும்.

***குறிப்பு:*** மேற்கண்ட முறையானது மாத்திரையெனப் பெயர் இடம்பெற்றிருப்பினும், எண்ணெய்ப் பசை யுள்ளதாக இருக்கும் ஆகையால் குழம்பு அல்லது மெழுகாக இருக்கும். ஆகையால் பீங்கான் அல்லது கொம்புச் சிமிளியில் வைத்துக்கொண்டு அவசியமான போது மேற்கண்ட அளவு உபயோகிப்பது உத்தமம். இஷ்டமானால் ஒரு விராகன் எடை கருவேலம் பிசின் சூரணத்தைச் சேர்த்து அரைத்து மாத்திரைகளாகவும் செய்து வைத்துக்கொள்ளலாம்.

## 28. மேக சஞ்சீவி எண்ணெய்

(a) முற்றலான பூவரசம்பட்டை
பூவரசங்காய்
பூவரசன் இலை
பிரம்மிய வழுக்கை கழற்சி சமூலம்
இலந்தைப்பட்டை
ஊளல் ஆத்தாதிப்பட்டை
நுனா இலை
சங்கிலை
குப்பைமேனி இலை
முத்துருக்கம் செவியிலை
தவசி முருங்கையிலை
கொட்டைப்பாசியிலை
சிறு செருப்படையிலை
முக்கரவேளை
வெள்ளருகுச் சமூலம்
கையாந்தகரையிலை
வெள்ளை நொச்சியிலை
கருநொச்சியிலை
காட்டாத்தி மரப்பட்டை
நாட்டாத்தி மரப்பட்டை
வெள்ளருகு இலை
பொடுதலைச் சமூலம்
வல்லாரைச் சமூலம்
கோவையிலை
கூத்தன் குதம்பையிலை
பெருங்குரும்பை
சிறுகுரும்பை
சிவனார் வேம்பு
கிரந்திநாயம்
மணத்தக்காளி இலை

***புங்கம்பால் எடுக்கும் முறை :*** புங்கவேரை மெல்லிய சீவலாகச் சீவி அம்மியில் வைத்து அரைத்து சேலைத் துணியில் வைத்துப் பிழிந்தால் பால் போன்ற திரவம் வரும். இதுவே புங்கம்பாலாம்.

(b) முடக்கத்தான்
வாதாமடக்கி இலை
வில்வ இலை
கோழி ஆவாரை இலை
நுணாப்பட்டை

இவற்றின் சாறு வகை 1க்கு ¼ படி

| | |
|---|---|
| கொத்தான் இலைச்சாறு | ½ படி |
| சோற்றுக்கற்றாழைச்சாறு | 1 படி |
| கழுதை லத்திப்பால் | 2 படி |
| சிற்றாமணக்கு எண்ணெய் | 4 படி |
| செங்கதாரிப்பட்டை | 4 பலம் |
| பரங்கிப்பட்டை | 4 பலம் |
| கருச்செம்பைப்பூ | 1 பலம் |
| சங்கம்வேர்ப்பட்டை | ,, |
| வாதகரப்பான் பட்டை | ,, |
| தக்கோலம் கம்பி பிசின் | ,, |
| பிரப்பங்கிழங்கு | ,, |
| பெருமரப்பட்டை | 1 பலம் |
| வேம்பாடம்பட்டை | ¼ பலம் |

(c)

| | |
|---|---|
| சுத்தி செய்த துத்தம் | ½ பலம் |
| சுத்தி செய்த துருசு | ½ பலம் |

(d) சுத்தி செய்த இரசக்கற்பூரம் - விராகனெடை 1

***செய்முறை:*** (a) இதிலுள்ள சாறுகளையும், எண்ணெயும் ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும்.

(b)இதிலுள்ள சரக்குகளை ஒன்றாகச் சேர்த்து இடித்து வஸ்திரகாயம் செய்து மேற்படி எண்ணெயில் போட்டுக் கலக்கிவிட வேண்டும்.

(c) துத்தம், சுத்தி, துரிசு இவைகளை வெண்மையாக வெளுக்கிறவரையில் இவைகளைத் தனித்தனியே ஓட்டில் வறுத்துக்கொள்ள வேண்டும். இதிலுள்ள துத்தம் துருசுகளையும் ஒன்றாகக் கல்வத்தில் பொடித்து மேற்படி எண்ணெயில் கலந்துவிட வேண்டும். பிறகு அந்த எண்ணெயை வெயிலில் வைக்க வேண்டும். பிரதி தினமும் இரண்டு மூன்று தடவை கலக்கி விடவும் வேண்டும். மூன்றுநாள் வைத்து நான்காம்நாள் அடுப்பேற்றி சிறு தீயால் எரித்து மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டி

(d) இதிலுள்ள இரசகற்பூரத்தைப் பொடித்து மேற்படி எண்ணெயில் தூவி பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

***பிரமாணம் :*** மாத்திரை பலம் ¼ கால் அரைக்கால்.

***அனுபானம் :*** இளநீர், நீராகாரம், சோம்புத் திராவகம் சோம்புக் கஷாயம், பன்னீர் முதலியவைகளாம்.

***உபயோகம் :*** எல்லாவகை மேக ரோகங்கள், புண்கள் கிரந்திகள், சூலை ரோகங்கள், மேகவாய்வு, சூச்சிக வாய்வு, கால், கைப் பிடிப்பு , லிங்கப்புற்று, குட்டம், யோனிப்புண், வண்டுகடி ஆகியவைகள் தீரும். கருப்பையில் வியாதியும் தீர்ந்து கர்ப்பம் உண்டாகும்.

***பத்தியம் :*** மருந்தை ஆறுநாள் உபயோகிக்க வேண்டும். புளி, புகை, பெண், உப்பு ஆகியவைகளை நீக்க வேண்டும். பால், அன்னம், வெந்நீர் அன்னம். துவரை,

சர்க்கரை முதலியவைகள் ஆகும். ஆறுநாள் சென்றபின்பு மறு ஆறுநாளும் பத்தியம் இருக்க வேண்டும். அப்போது உப்பை வறுத்துச் சேர்த்துக்கொள்ள வேண்டும். 12 நாளும் சென்ற பின்பு எண்ணெய் ஸ்நானம் செய்து பத்தியத்தை முறிக்கவேண்டும். இது கடினமான பத்தியம் என்று சிலர் யோசிப்பார்கள். இப்படி சில நாட்கள் சிரமப்பட்டால் எந்நாளும் நம்மை வருத்தும் நோய்களை துரத்தமுடியும். நோய் அரக்கனை வெற்றிகொள்ள இது ஒரு சிறந்த மருந்தாகும்.

## 29. நவ மூல சஞ்சீவி

மெருகன் கிழங்கு
மருட்கிழங்கு
புளிநரளைக் கிழங்கு
காட்டுக் கரணைக்கிழங்கு
கரிக்கருணைக் கிழங்கு
பிரண்டை

இந்த ஆறையும் பின் கண்டிருக்கிற பாகப்படி சுத்தி செய்து கொள்ளவும்.

கொடிவேலி வேர்ப்பட்டை
இந்துப்பு
மஞ்சள் கடுக்காய்த்தோல்
மேல்தோல் சீவின சுக்கு
மிளகு
அரிசி
திப்பிலி
ஓமம்
மேல்தோல் சீவின இஞ்சி

இவை வகைக்கு 1 பலம்

| | |
|---|---|
| சீரகம் | 1 பலம் |
| கல், மணல் முதலியவை சுத்தி செய்த எள் | ½ பலம் |

புளி இலைச்சாறு
தவசு முருங்கையிலைச்சாறு
கரந்தைச்சாறு
சிவன் வேம்பிலைச்சாறு
தழுதாழைச் சாறு

வெண்நொச்சிச்சாறு
நிலவேம்புச்சாறு

வகைக்கு ¼ படி

எலுமிச்சைச்சாறு 1 படி

***செய்முறை:*** முன் சரக்குகளையெல்லாம் ஒன்றாய்க் கலந்து மெருகன்கிழங்கு முதல் பிரண்டை ஈறாக உள்ளவைகளைப் புளித்த மோரில் வேகவைத்து எடுத்து உலர்த்தி மேற்கண்ட எடை நிறுத்தி எடுத்துக் கொண்டும், மற்ற சரக்குகளையும் சேர்த்து மேற்படி சாற்றில் போட்டு வெயிலில் வைத்து வர வேண்டும். பிரதி தினமும் இரண்டு மூன்று தடவை கலக்கியும், அதாவது நன்றாகக் கலக்கியும் வரவேண்டும். இவ்விதம் சாறு எல்லாம் சுண்டி முற்றும் உலர்கிற வரையில் வெய்யிலில் வைத்து, பிறகு இடித்து, வஸ்திரகாயம் செய்து, பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

***பிரமாணம் :*** வராகனிடை 1-3.

***அனுபானம் :*** நெய், வெண்ணெய், பால், சிற்றாமணக்கு எண்ணெய் முதலியவைகளாம்.

***உபயோகம் :*** வராகனிடை 1-3.

***தீர்க்கும் நோய்கள் :*** வாய்வுகள், அரோசகம், இரத்த மூலம், சீழ்மூலம், வெளிமூலம், உள்மூலம், அடிமூலம் முதலிய எல்லாவகை மூலரோகங்களும் தீரும். மூலச்சூடு, மூலவாயு, மூலகிராணி, அஸ்திச்சூடு முதலியவைகள் குணமாகி, தேகதிடம், அழகு உண்டாகும்.

***பத்தியம் :*** இச்சாபத்தியம்.

• • • • • • • •

## 30. கூழ் பாண்ட மதன சிந்தாமணி

(a) சிற்றாமுட்டிவேர்
புனல்தண்டு
துத்திவேர்
கோரைக்கிழங்கு
வெட்டிவேர்
பிரம்மங்கிழங்கு
சங்கம்வேர்
நன்னாரிவேர்
நெருஞ்சில்வேர்
சிறுகீரைவேர்
பெருஞ்சீரகம்
வில்வவேர்ப்பட்டை
கருஞ்சீரகம்
மேற்புரணி நீக்கிய சீந்தில் வேர்
உலர்த்தின ஆவாரம் பூ
ஆவாரம் விதை
ஆலம் விதை
தாளை விழுது
வல்லாரை வேர்

இவை வகைக்கு 5 பலம்.

சுத்த சலம் (தண்ணீர்) 8 படி

(b) மேல்தோல் சீவிய சுக்கு
மிளகு
அரிசி திப்பிலி
செண்பகப்பூ
மஞ்சள் கடுக்காய்த்தோல்
தான்றிக்காய்த்தோல்
நெல்லி முள்ளி
குங்குமப்பூ
அதிமதுரம்

கொத்தமல்லிவிதை
இலவங்கப்பட்டை
மாதுளைவிதை
ஆதண்டைவேர்ப்பட்டை
சிற்றாமணக்கு வேர்ப்பட்டை
தாமரைக்கிழங்கு
ஆம்பல்கிழங்கு
கொட்டிக்கிழங்கு
வெள்ளைச் சாரணைக்கிழங்கு

இவை வகைக்கு 5 பலம்.

சுத்த சலம் (தண்ணீர்) 8 படி

(c) பூமிசாரைக் கிழங்கு
நிலைப்பனைக் கிழங்கு
உலர்த்தின புனற்தண்டு கிழங்கு
பரங்கிச்சக்கை
கூகைநீர்
குருசாதிப்பூ
செவ்வியம்
வெட்டிவேர்
அரசம்வேர்ப்பட்டை
புரசம் வேர்ப்பட்டை
பூலாவேர்ப்பட்டை
ஏலரிசி
குருசாணி ஓமம்
மாம்பருப்பு
ஓமம்
சாதிக்காய்
பூனைக்காலி விதை
பேரரத்தை சித்ரமூல வேர்ப்பட்டை
பருத்தி விதைப் பருப்பு
துத்திவிதை
சிற்றரத்தை

வெண்சந்தனம்
தாளிசப்பத்திரி
வெந்தயம் (இதனை சற்று வறுத்துக்கொள்ள
வேண்டும்)
சீமை அமுக்கிராக்கிழங்கு
ரோசாப்பூ
வால் உளுவை அரிசி
வால் மிளகு
அக்கிரகாரம்
நத்தச்சூரி விதை
பன்னீர் மரப்பூ
கோஸ்டமறாமிச்சம்வேர்
லவங்கம்
நாட்டு அமுக்கிராக்கிழங்கு
இவை வகைக்கு 1 பலம்

(d) பூனீர்
கல்நார்
சிலாசத்து
இவை வகைக்கு 1 பலம்

(e) திராட்சைப்பழம்
கருவேலம்பிசின்
இலவம்பிசின்
இவை வகைக்கு 1 பலம்

(f) குங்குமப்பூ 1 பலம்
பொன் அம்பர் தங்கரேக்கு
இவை அவரவர் சக்திக்குத் தகுந்தபடி

(g) கலியாணப்பூசனிக்காய்ச் சாறு 8 படி
கரும்புச்சாறு
வாழைக்கிழங்குச்சாறு

தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு
சோற்றுக் கற்றாழைச்சாறு
தென்னம்பாளைச்சாறு
வல்லாரைச்சாறு
இவை வகைக்கு 2 படி

| | | |
|---|---|---|
| (h) | சீனிச்சக்கரை | 80 பலம் |
| | தேன் | 2 வீசை |
| | பசுவின் நெய் | 4 வீசை |
| | பன்னீர் | செல்லத்தக்க அளவு |

(i) சிங்கி பற்பம்
வங்க பற்பம்
காந்த பற்பம்
பவள பற்பம்
அயசெந்தூரம்
இறைச் செந்தூரம்
இவை வகைக்கு 1 பலம்

***செய்முறை:*** (a) இதிலுள்ள வேர் வகைகளைச் சன்னமாகத் துண்டித்துக் கொள்ள வேண்டும். மற்ற இலை வகைகளையும், விதை வகைகளையும், மேற்கண்ட வேர் வகைகளுடன் சேர்த்து உரலில் சற்று சிதைத்து மண் பாண்டத்தில் போட்டு 8 படி சலம் வார்த்து 24மணி நேரம் ஊறவைத்து பிறகு அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து ஒருபடியாக சுண்டவைத்து கீழிறக்கி இளஞ்சூடாக இருக்கும்போது நன்றாய் பிசைந்து இறுத்து வடிகட்டி திப்பி நீக்கின கஷாயத்தை தனியே வைத்துக்கொள்ளவும. இதற்கு - (A) -குறிப்பு கசாயம் எனச் சொல்லுவோம்.

(b) இதிலுள்ள வேர் வகைகளை சன்னமாகத் துண்டித்துக் கொள்ள வேண்டும். மற்ற சரக்குகளை கல்லுரலில் போட்டு சிதைத்துக்கொள்ள வேண்டும்.

கிழங்கு வகைகளையும் அவ்விதமே செய்து கொள்ள வேண்டும். பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து ஒரு மண்பாண்டத்தில் போட்டு அதில் 8 படி சலத்தை(நீர்) விட்டு 24 மணி நேரம் ஊறவைத்து பிறகு அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து ஒருபடியாகச் சுண்ட வைத்து இறக்கி இளஞ்சூடாக இருக்கும்போது நன்றாக பிசைந்து இறுத்தி வடிகட்டி, திப்பி நீக்கின கசாயத்தை வைத்துக்கொள்ள வேண்டும். இதற்கு (b) குறிப்பு கசாயம் எனச் சொல்லுவோம். (c) இதில் உள்ள பூமி சர்க்கரைக் கிழங்கு முதல் அதனுடன் சேர்ந்த பட்டை தினுசு வகைகளை எல்லாம் வெயிலில் உலர்த்தி, கல் உரலில் இடித்து, வஸ்திரகாயம் செய்து சூரணத்தைத் தனியே வைத்துக்கொள்ள வேண்டும். இதிலுள்ளவைகளைத் தனியே வைத்துக்கொள்ள வேண்டும். (d) இதிலுள்ளவை களைத் தனியே பொடித்து வஸ்திரகாயம் செய்து மேற்படி சூரணத்துடன் கலந்து கொள்ளவும். திராட்சைப் பழத்தைச் சேர்ந்தவைகளான சரக்குகளைக் குச்சி, காம்பு முதலியவைகளை நீக்கி, சுத்தி செய்து, அம்மியில் வைத்து அரைத்தும், இரண்டுவகை பிசின்களையும் நெய்யில் பொறித்தும், தூள் செய்து மேல் கண்ட சூரணத்துடன் கலந்து கொள்ளவும்.

(F) இதிலுள்ள குங்குமப்பூவை கொஞ்சம் பன்னீர் விட்டு அரைத்து தனியே அரைத்துக்கொள்ளவும். அம்பர்-அதில் கொஞ்சம் பன்னீர்விட்டு அரைத்து தனியே வைத்துக்கொள்ளவும். (G)இதிலுள்ள சாறு வகை களையும்,

(a) குறிப்பு கஷாயத்தையும் (b) குறிப்பு கஷாயத் தையும் ஒன்றாய் கலந்து அதில் சர்க்கரையைக் கரைத்து அடுப்பேற்றி சிறுதீயாய் எரித்து, பாகுபதத்தில் முன்

சுத்தப்படுத்தி வைத்திருக்கிற சூரணத்தை கொஞ்சம் கொஞ்சமாக தூவி மரமத்தால் கடைந்து, நன்றாக மிஸ்ரமித்து, (b)மேற்கண்ட தேனையும், நெய்யையும் விட்டு நன்றாய் மறுபடியும் கடைந்து மிஸ்ரமித்து,

(F) இதிலுள்ள குங்குமப்பூவையும், அம்பரையும் சேர்த்துக் கிளறி, கிளறி கொஞ்சம் சூடு ஆறினவுடன் பன்னீரைத் தெளித்து செம்மையாகக் கிளறி, ஆறினபின் (I) இதிலுள்ள செந்தூர பற்பங்களையும் தூவி, மறுபடியும் கிளறி, ஆறினபின் பிறகு (F)இதிலுள்ள தங்க ரேக்கை ஒவ்வொன்றாய் பிச்சிப் போட்டு மிஸ்ரமித்து, கீழ் மேலாகப் புரட்டி, தான் வழிபடும் கடவுளைத் தியானித்து, அவரவர்கள் சக்திக்கு இயன்ற தான தர்மங்கள் செய்து இந்த லேகியத்திலும் 8-ல் 1 பாகங்களை இதனை செய்துகொள்ள சக்தி இல்லாத ஏழை நோயாளி களுக்கு கொடுத்து, மிகுதியாய் இருப்பதை பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

**பிரமாணம் :** வராகன் எடை 2-5 இதன் பிரமாணத்தை இதில் சேர்க்கப்படும் அம்பர்-தங்கரேக்கு பஸ்பம், செந்தூரம் சேர்த்திருப்பதால் ஆகியவைகளுக்கு உகந்தபடி குறைந்த அளவாகவும் நிறைந்த அளவாகவும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

**உபயோகம் :** இதனை ஆரம்பமாக உபயோகப் படுத்தும்போது அவரவர்கள் மதாசாரப்படி, செப தபங்கள் செய்து, அன்னதானம் சொர்ணதானம் முதலியவைகளை அவரவர்கள் சக்திக்குத் தகுந்தபடி செய்து, மிட்டாய் தினுசுகள், பழ வர்க்கங்கள் ஆகியவைகளை வைத்து, கடவுளையும், பெரியோர் களையும் துதித்து வாழ்த்தி எல்லோருக்கும் பங்கிட்டு இதை ஆரம்பிக்கவேண்டும். மேக சம்மந்தமாய் பித்த

வெட்டை- அஸ்திச்சூடு அஸ்தி வெட்டை, அஸ்திசுரம், கிராணி, கால் ரோகம், வாந்தி ரோகம், சூலைரோகம், சயரோகம், காமாலை, அதிசாரம், நீர்மேகம், தொடை வாளை, ஈளை, கபாலச்சூடு, குடல்வாதம், குலையெரிவு, எட்டுவகை குன்மரோகம், தலைவலி, எலிக்கடி, முயல்வலி, நீரிழிவு, நீர் எரிச்சல், நீர்பாளை, நீர்க்கடுப்பு, மதுமேகம், குஷ்டரோகம், குரைநோய், உச்சிப்பிளவை ஆகியவைகள் தீரும். கர்ப்ப சிதைவு ரோகம், கர்ப்பம் நிலைத்து நின்று பூரணமாக குழந்தை பிறக்கும். தாது விருத்தி, ஆயுள் விருத்தி முதலிய பல விருத்திகளுண்டாகும். இது ஒரு சஞ்சீவி கற்பத்திற்கு ஒப்பான அமிழ்தம்.

***பத்தியம் :*** கொம்பு பாவற்காய், மிதி பாவற்காய், பரங்கிக்காய், பயிற்றங்காய், முற்றின கத்திரிக்காய், அகத்திக்கீரை, பெரும்பயிறு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு கருணைக்கிழங்கு, புளி, தினை, பனங்கிழங்கு, தென்னங்கள்ளு, சாராயம், காடி, எள்ளு, பன்றி, கோழி, கருவாடு, மீன் ஆகியவைகளும் இவை போன்றவைகளும் ஆகாது. சிறுகீரை, சிறுபயறு, பிஞ்சு முளைக்கீரை, அரைக்கீரை, அவரைப்பிஞ்சு, அத்திக்காய், முருங்கைப் பிஞ்சு, வாழைப்பழம், தாராயினங்களும் இவை போன்றவைகளும் ஆகும். ஸ்திரீ சங்கமம் அறவே ஆகாது.

# 31. மன்மத சிந்தாமணி

| | | |
|---|---|---|
| (a) | மேல் தோல் சீவின சுக்கு | ½ பலம் |
| | மிளகு | ,, |
| | அரிசிதிப்பிலி | ,, |
| | தான்றிக்காய்த்தோல் | ,, |
| | நெல்லிமுள்ளி | ,, |
| | சாதிக்காய் | ,, |
| | சாதிப்பத்திரி | ,, |
| | இலவங்கம் | ,, |
| | பேரீச்சங்காய் | ,, |
| | ஷலாமிசிரி | ,, |
| | பிசின்பட்டை | ,, |
| | இஸ்பகோல் விதை | ,, |
| | நறுவிலி விதை | ,, |
| | அத்தி விதை | ,, |
| | சிறுநாகப்பூ | ,, |
| | நற்சீரகம் | ,, |
| | பூனைக்காலி விதை | ,, |
| | மஞ்சள் கடுக்காய்த்தோல் | ,, |
| | பரங்கி சக்கை | ,, |
| | கொத்தமல்லி விதை | ,, |
| | ஏலரிசி | ,, |
| | கோஷ்டம் | ,, |
| | அதிமதுரம் | ,, |
| | கொடிவேலி வேர்ப்பட்டை | ,, |
| | ஆவாரைவிதை | ,, |
| | சிற்றரத்தை | ,, |
| | கண்டதிப்பிலி | ,, |
| | கற்கடகசிங்கி | ,, |
| | சன்ன இலவங்கப்பட்டை | ,, |

| | |
|---|---|
| தாளிச பத்திரி | ½ பலம் |
| வாலுளுவை அரிசி | ,, |
| குருசானி ஓமம் | ,, |
| சிறுதேக்கு | ,, |
| கூநீரு | ,, |
| காட்டு லவங்கம் | ,, |
| நெரிஞ்சிமுள்ளு | ,, |
| நீர்முள்ளி விதை | ,, |
| நத்தைசூரி விதை | ,, |
| நாயுருவி விதை | ,, |
| உலர்த்தின கருவேலம்பிஞ்சு | ,, |
| ஆலம்விதை | ,, |
| துத்திவிதை | ,, |
| மாம்பருப்பு | ,, |
| காட்டு வாகைப்பட்டை | ,, |
| உலர்த்தின சிவகரந்தைப் பூ (அ) கொட்டைக்கரந்தைப்பூ | ,, |
| கையான்தகரை விதை | ,, |
| கண்டங்கத்திரி விதை | ,, |
| துளசி விதை | ,, |
| பெருநாகப்பூ அல்லது நாகவிதை | ,, |
| கொண்டை சின்னிக் கிழங்கு | ,, |
| நிலப்பனங்கிழங்கு | ,, |
| அமுக்கிராக்கிழங்கு | ,, |
| உலர்த்தின செங்கழுநீர்க்கிழங்கு | ,, |
| உலர்த்தின செவ்வள்ளிக்கிழங்கு | ,, |
| உலர்த்தின கொட்டிக்கிழங்கு | ,, |
| தூதுவளை விதை | ,, |
| முருங்கைவிதை | ,, |
| வறுத்த வெந்தயம் | ,, |

| | |
|---|---|
| பேரரத்தை | ½ பலம் |
| உலர்த்தின முருங்கை பிஞ்சு | ,, |
| பேய்ப்பீர்க்கு விதை | ,, |
| ஊமத்தன் விதை | ,, |
| கஸ்தூரி மஞ்சள் விதை | ,, |
| கச்சோளம் அல்லது | |
| ஏலக்காய்ப்பட்டை | ,, |
| உலர்த்தின பொடுதலைக்காய் | ,, |
| நாய்வேளை விதை | ,, |
| பூலாவிதை | ,, |
| சண்பகம் விதை | ,, |
| ஆடாதொடைவிதை | ,, |
| சமுத்திரசோகி விதை | ,, |
| வெட்டிவேர் | ,, |
| கஞ்சாவிதை | ,, |
| கோரைக்கிழங்கு | ,, |
| பொன்முசுட்டை விதை | ,, |
| பச்சை கடலைமாவு | ,, |
| உளுந்து மாவு | ,, |
| தேற்றான் விதை | ,, |

(இதனை சிறு துண்டுகளாக சீவி தண்ணீரில் ஊறவைத்து வெண்ணெய்போல் அரைத்துக்கொள்ளவும்.)

| | | |
|---|---|---|
| (b) | இலவம்பிசின் | ½பலம் |
| | எட்டி மரப்பிசின் | ,, |
| | கருவேலம்பிசின் | ,, |
| | ரூமஸ்திகி | ,, |
| | குங்குமப்பூ | ,, |
| | கோரோசனை | ,, |
| | சிலாசத்து | ,, |
| | வாதுமை பருப்பு | 5 பலம் |

| | | |
|---|---|---|
| | கசகசா | 5 பலம் |
| | திராட்சைப்பழம் | 5 பலம் |
| | சாரப்பருப்பு | 2½ பலம் |
| | முருங்கைப்பூ | 5 பலம் |
| | அல்லது | |
| | உலராத பச்சை பூவாய் இருந்தால் | 20 பலம் |
| | தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | ½ படி |
| (c) | சுத்தி செய்த ரசம் | ½ பலம் |
| | சுத்தி செய்த கந்தகம் | ,, |
| | சுத்தி செய்த சாதிலிங்கம் | ,, |
| (d) | மதுர காமேஸ்வரப்பூ | 3 பலம் |
| | மிசிரி | ,, |
| | அபின் | ,, |
| | சுத்தி செய்த கஞ்சா | ,, |
| (e) | வெள்ளை குங்கிலியம் | 4 பலம் |
| | சீந்திற் சர்க்கரை | ,, |
| | ஆலம்பால் | ,, |
| | இச்சிப்பால் | ,, |
| | ஓதியம்பட்டைச்சாறு | ,, |
| | அத்திப்பால் | ,, |
| | பருத்திபிஞ்சு சாறு | ,, |
| | ஆவாரம்பூச்சாறு | ,, |
| | பசுவின் நெய் | 16 பலம் |
| | தேன் | 8 பலம் |

**செய்முறை:** (a) இதிலுள்ள சரக்குகளையெல்லாம் இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ள வேண்டும். (b)இதிலுள்ள பிசின் வகைகளை நெய்யில் வறுத்து பொடித்து அரைத்து முன் சூரணத்தில் கலந்து

கொள்ளவும். ரூமஸ்தகியைப் பொடித்து வஸ்திரகாயம் செய்து முன் சூரணத்துடன் சேர்க்காமல் தனியே வைத்துக்கொள்ள வேண்டும். இதை சேர்த்து காய்ச்சினால் எல்லாம் ஏகமாய் கசந்து போகும். ஆகையால் லேகியம் செய்து ஒருநாள் ஆறினபின் மறுநாள் சேர்க்க வேண்டியது. குங்குமப்பூவில் கொஞ்சம் பசுவின்பாலை விட்டு மைபோல் அரைத்து தனியே வைத்துக் கொள்ள வேண்டும். கோரோசனை, சலாசத்து ஆகிய இரண்டையும் தனித்தனியே பொடித்து முன் சூரணத்துடன் கலந்து கொள்ளவும். வாதுமை பருப்பை கொதி வெந்நீரில் போட்டு பத்து நிமிட நேரம் மூடிவைத்து மேல்தோலை நீக்கி கசப்புள்ள வாதுமைகளை நீக்கிவிட்டு மற்றவைகளை அம்மியில் வைத்து மைபோல் அரைத்து முன் சூரணத்துடன் கலந்து கொள்ள வேண்டும். சாரப் பருப்பைக் கொதி வெந்நீரில் போட்டு 5 நிமிட நேரம் மூடிவைத்து நன்றாக அலசி இறுத்துவிட்டு ஈரம் உலர்ந்தபின் கொஞ்சம் நெய்யில் வறுத்து அம்மியில் வைத்து மைபோல் அரைத்து முன் சூரணத்துடன் கலந்து கொள்ள வேண்டும். இந்த சாரப் பருப்பானது காரல் இல்லாமல் இருக்க வேண்டும். காரல் உள்ளதை சேர்த்தால் லேகியம் கெட்டுப்போகும். காரல் இல்லாதது அகப்படாவிட்டால் அதற்கு பதிலாக வாதுமை பருப்பை சேர்த்துக் கொள்ளவும். கசகசாவிலுள்ள கல், மணல் முதலியவைகளை புடைத்து நீக்கி, அம்மியில் வைத்து மைபோல் அரைத்து அரைப்படி ஜலத்தில் கரைத்து வடிகட்டி, திப்பியை நீக்கிவிட்டு, பாலை மாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும். திராட்சை பழத்திலுள்ள குச்சி, காம்பு முதலியவைகளை நீக்கிவிட்டு அம்மியில் வைத்து வெண்ணெய் போல் அரைத்து முன் சூரணத்தில் கலந்து கொள்ள வேண்டும். முருங்கைப்பூ உலர்ந்ததனால் இடித்து வஸ்திரகாயம் செய்து முன் சூரணத்துடன்

கலந்து கொள்ள வேண்டும். பச்சையாயிருந்தால் ஒருபடி பசுவின் பாலில் போட்டு காய்ச்சி பூவெல்லாம் வெந்து குழைந்த பதத்தில் வடிகட்டி பிழிந்து திப்பி நீக்கிவிட்டு பாலை மாத்திரம் தனியே வைத்துக்கொள்ள வேண்டும். (c)இதிலுள்ளவைகளின் இரசத்தையும், கந்தகத்தையும் சேர்த்து அரைத்து பூரணமாக கருத்த பின்பு லிங்கத்தையும் இரண்டு மணி நேரம் அரைத்து மைபோலான பின் தனியே எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். (d)இதிலுள்ளவைகளில் மதன காமேஸ்வரப்பூவை ஓட்டில் வறுத்து வஸ்திரகாயம் செய்த சூரணத்தை முன் சூரணத்தில் கலந்து கொள்ள வேண்டும். கஞ்சாவை சுத்தி செய்து உலர்த்தி ஓட்டில் பாகமாக வறுத்து இடித்துத் தூள் செய்து வஸ்திரகாயம் செய்து முன் சூரணத்திற் கலந்து கொள்ளவும். அபினில் கொஞ்சம் ஜலம் விட்டு கரைத்து வடிகட்டி திப்பி நீக்கி இதை தனியே வைத்துக்கொள்ள வேண்டும். (e) இதிலுள்ள வெள்ளை குங்கிலியத்தை கல்வத்திலிட்டு பொடித்து வஸ்திரகாயம் செய்த தூளையும் சீந்தில் சர்க்கரையை வஸ்திரகாயம் செய்த தூளையும் ஒன்றாகக் கலந்து முன் சூரணத்தில் கலந்துவிட வேண்டும். ஆலம்பால், அத்திப்பால், இச்சிப்பால் இம்மூன்றையும் ஏகமாக கலந்து இதில் நாலுபலம் நெய்யை கலந்து சேர்த்து அடுப்பேற்றி சிறுதீயாய் எரித்து நீர் சுண்டினபின் எடுத்தால் கையில் ஒட்டாமல் பதமாயிருக்கும். இதனை கல்வத்தில் போட்டு முன் சுத்தப்படுத்தியிருக்கிற சூரணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு அரைத்து வந்தால் எல்லா மிஸ்ரமாகியே கருப்பாகிவிடும். மற்ற சாறு வகைகளை ஒன்றாய் சேர்த்து தனியே வைத்துக்கொள்ள வேண்டும். (f) இதிலுள்ள சர்க்கரையில் அரைப்படி சலத்தை விட்டு அடுப்பில் இட்டு சிறுதீயாக எரித்து இரண்டு மூன்று கொதி வந்தபின் மெல்லிய வஸ்திரத்தால் வடிகட்டி

அதிலுள்ள திப்பி முதலியவைகளை நீக்கிவிட்டு மறு பாத்திரத்தில் வார்த்து அடுப்பேற்றி (a)இதிலுள்ள சாறுகளையும், (b) இதிலுள்ள முருங்கைப்பூ பால், கசகசா பால் தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு ஆகியவை களையும் அதில் சேர்த்து பாகுபதமாய் காய்ச்சி அந்த பாகுபதத்தில் முன் சுத்தப்படுத்தி வைத்திருக்கிற சூரண கலவையை சிறுக சிறுகப் போட்டு மர மத்தால் நன்றாக கடைந்து மிஸ்ரமான பின்பு (b) இதிலுள்ள குங்குமப்பூவை சேர்த்து கடைந்து பிறகு இரசம், கந்தகம் ஆகியவைகளின் கலவையைத் தூவி கலந்த பிறகு (d) இதிலுள்ள அபின் கரைத்த சலத்தை விட்டு செம்மையாக மிஸ்ரமித்து தேன், நெய் ஆகியவைகளையும் இட்டு, மேல், கீழாக கிளறி அப்படியே ஆறவிட்டுவிட வேண்டும். குளிர ஆறினபின் அல்லது மறுநாள் (b) இதிலுள்ள ரூமஸ்திகி சூரணத்தை தூவி கீழ்மேலாகக் கிளறி பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

***பிரமாணம் :*** *விராகனிடை 1-1¼*

***உபயோகம் :*** எண்பத்து நான்கு வகை வாத ரோகங்கள் நாற்பது வகை, பித்த ரோகங்கள் இருபது வகை, கபரோகங்கள், வாதபித்த ரோகம், பித்த சிலேத்தும ரோகம், கபவாதரோகம், பித்தமேகம், மஞ்சள் வர்ண மேகம், வெள்ளை வர்ண மேகம், சூளமேகம், மயில் கழுத்து வர்ணமேகம், ரத்த மேகம், எலும்புருக்கி மேகம், இரஞ்சிதமேகம், தந்திமேகம், மதுமேகம், சீழ்ப்பிரமியம், மூத்திரக்கிரிச்சரம், சன்னி ரோகம், சூலைகிராணி, யோனி, இரணம் முதலிய மகா ரோகங்கள் எல்லாம் தீரும். இந்திரிய விருத்தி, தாது விருத்தி, போக சக்தி விருத்தி, தம்பன சக்தி விருத்தி முதலியவைகள் உண்டாகி, தேகபலம், தேகதிடம், தேக கட்டழகு, தேகவசீகரம்,

முகவசீகரம் முதலியவைகள் உண்டாகும். இதனை தொடர்ந்து தேற்றியாய் உபயோகித்து வந்தால் தேகத்தில் எந்த வியாதியும் அணுக ஒட்டாமல் தேக சுகத்தை காப்பாற்றி தேகத்திற்கு கபாடம் போன்று அதை நிலைநிறுத்தி ஆயுள் விருத்தி, சந்தான விருத்தி முதலியவைகளை உண்டாக்கும். இது சஞ்சீவி கற்பங்களில் ஒன்று.

***குறிப்பு:*** லாகிரிப் பழக்கமுள்ளவர்கள், மேற்படி லேகியத்தில் இஷ்டமான அளவு எடுத்து அதற்கு சம அளவு சுத்தி செய்த கஞ்சாவை ஓட்டில் வறுத்துப் பொடித்து வஸ்திரகாயம் செய்த சூரணத்தைச் சேர்த்து உபயோகித்துக் கொள்ளலாம். இந்த கஞ்சாயிடை சர்க்கரையும் அதிகப்படுத்திக் கொள்ளவும்.

## 32. மனமோகன சிந்தாமணி

இலவங்கம்
சதகுப்பை
மஞ்சள் கடுக்காய்த்தோல்
கடுக்காய்ப்பிஞ்சு
நற்சீரகம்
கஸ்தூரி மஞ்சள்
பெருஞ்சீரகம்
நிலப்பனைக்கிழங்கு
முள்ளங்கிவிதை
துத்திவிதை
நெல்லிமுள்ளி
வெங்காய விதை
நெல்லி விதைப் பருப்பு
சாதிக்காய்
வெள்நொச்சி விதை
அரிசி திப்பிலி
மிளகு
மேல்தோல் சீவின சுக்கு
சீமை சாமந்திப்பூ
ஆவாரை விதை
பூனைக்காலி விதை
தான்றிக்காய் தோல்
ஏலரிசி
கையாந்தகரை விதை
ஆனை நெறிஞ்சி முள்ளு
கொண்டை சீனி கிழங்கு
அதிமதுரம்
கொத்தமல்லி விதை
பளிங்கு சாம்பிராணி

போஸ்து காய்
குருசாணி ஓமம்
விலாமிச்சம்வேர்
லவங்கப்பட்டை
சாதிப்பத்திரி

இவை வகைக்கு விராகன் எடை 3

| | | |
|---|---|---|
| (b) | சாரப்பருப்பு | 1¼ பலம் |
| | கசகசா | 1¼ பலம் |
| | அபின் | 3 விராகன் எடை |
| | தண்ணீர்விட்டான்கிழங்கு சாறு | ¼ படி |
| | கோரக்கர் நெய் | 5 பலம் |
| | பசுவின்பால் | ½ படி |
| | கற்கண்டு | 5 பலம் |
| | சீனி சர்க்கரை | 20 பலம் |
| | தேன் | 10 பலம் |
| | பசுவின் நெய் | 10 பலம் |

***செய்முறை:*** சாரப்பருப்பை தனியாக வறுத்து அம்மியில் வைத்து வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ள வேண்டும். அபினியை சலம் விட்டு கரைத்து தனியே எடுத்துக்கொள்ள வேண்டும். கசகசாவை சலம் விட்டு அரைத்து ஒரு ஆழாக்கு சலத்தில் கரைத்து வடிகட்டி பாலை எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு இந்த கசகசா பால், தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு, பசுவின்பால், சீனி சர்க்கரை, தேன், கற்கண்டு ஆகியவைகளை எல்லாம் ஒன்றாக கலந்து அடுப்பேற்றி சிறுதீயாய் எரித்து பாகுபதத்தில் (a)இதிலுள்ள சரக்குகளை எல்லாம் ஓட்டில் வறுத்து இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணத்துடன் முன் அரைத்து வைத்திருக்கிற சாரப்பருப்பையும் கலந்து, மேற்படி பாலில் சிறுகச் சிறுகத் தூவி நன்றாக கிண்டி கிளரி கோரக்கர் நெய், பசுவின் நெய் ஆகியவைகளை விட்டு கீழ் மேலாக புரட்டி குளிர ஆறின

பின்பு முன் சுத்தப்படுத்தி இருக்கிற அபின் சலத்தைச் சேர்த்து எல்லாம் மிஸ்ரமாகும்படி செய்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

***பிரமாணம் :*** விராகன் எடை ½- ¾

***உபயோகம் :*** பற்பல வகை பேதி, வயிற்றெரிச்சல், பலவகை வாய்வுகள், காமாலை, மெய்யோச்சல், தேக வூதல், சோகை, பாண்டு முதலியவைகள் தீர்ந்து இந்திரிய விளைவுண்டாகி, தாது புஷ்டி, தேகபுஷ்டி ஆகியவைகள் உண்டாகும். மேகவகைகள் நீரெரிச்சல் முதலிய நீர் சம்மந்த ரோகங்கள் தீரும். இன்னும் தேகத்திலுள்ள அநேக ரோகங்களுக்கு உபயோகமாகும்.

***பத்தியம்:*** தாதுவிருத்திக்கானால் பால் இறைச்சி முதலிய சத்துள்ள பதார்த்தங்கள், சத்துள்ள ஆகாரங்கள், மிட்டாய் அல்வா முதலிய இனிப்பு வஸ்த்துக்கள் ஆகியவைகளை அதிகமாக உபயோகித்து வர வேண்டும். மற்ற வியாதிகளுக்கானால் அந்தந்த வியாதிகளுக்கு தகுந்த பத்தியம் ஏற்படுத்த வேண்டியது வைத்தியர்களின் கடமையாம்.

***கோரக்கர் நெய் செய்யும் முறை :*** சுத்தி செய்த கஞ்சா 5 பலம் , இதனை ஒருபடி சலத்திற்குள் போட்டு நாலில் ஒரு பாகமாகக் காய்ச்சி சுண்ட வைத்து இளஞ்சூட்டில் நன்றாக பிசைந்து வடிகட்டின கசாயத்துடன் 5 பலம் பசுவின் நெய்யையும் அரைப்படி பசுவின் பாலையும் சேர்த்துக் காய்ச்சி நீர் சுண்டி நெய்யானவுடன் கம்பளியில் வைத்துப் பிழிந்து வடிகட்டித் திப்பி நீக்கி நெய்யை எடுத்துக்கொள்ள வேண்டும். இதுவே கோரக்கர் நெய்யாம். இந்த நெய்யில் மேற்கண்ட முறைக்கு மேற்கண்ட அளவு எடுத்துக் கொள்ளவேண்டும்.

# 33. அகஸ்தியர் கூழ் பாண்டக் கிருதம்

| | | |
|---|---|---|
| (a) | மேல்தோல் சீவின சுக்கு | ¼ பலம் |
| | மிளகு | ,, |
| | அரிசி திப்பிலி | ,, |
| | யானை திப்பிலி | ,, |
| | நற்சீரகம் | ,, |
| | பெருஞ்சீரகம் | ,, |
| | கண்டந்திப்பிலி | ,, |
| | கொத்துமல்லி விதை | ,, |
| | வாய் விளங்கம் | ,, |
| | அதிவிடையம் | ,, |
| | அதிமதுரம் | ,, |
| | பேரீச்சம்பழம் | ,, |
| | தேற்றான் விதை | ,, |
| | பேரீச்சங்காய் | ,, |
| | வாதுமைப் பருப்பு | ,, |
| | குருசாணி ஓமம் | ,, |
| | ஏலரிசி | ,, |
| | சிறுநாகப்பூ | ,, |
| | மாசிக்காய்த்தோல் | ,, |
| | கசகசா | ,, |
| | கோஸ்டம் | ,, |
| | அக்கிரகாரம் | ,, |
| | சன்னலவங்கப்பட்டை | ,, |
| | பெருலவங்கப்பட்டை | ,, |
| | இஸ்பகோல்விதை | ,, |
| | லவங்கப்பூ | ,, |
| | சிறுதேக்கு | ,, |
| | சந்தனம் | ,, |
| | மஞ்சிட்டி | ,, |

| | | |
|---|---|---|
| | நீர்முள்ளிவிதை | ,, |
| | தாளிசபத்திரி | ,, |
| | நன்னாரிவேர் | ¼ பலம் |
| | சாதிக்காய் | ,, |
| | சாதிப்பத்திரி | ,, |
| | வால்மிளகு | ,, |
| | கோரோசனை | ½ - ¾ வராகனெடை |
| | குங்குமப்பூ | வராகனெடை காலே வீசம் |
| | பச்சைக் கற்பூரம் | வராகனெடை காலே வீசம் |
| (b) | கொத்தமல்லி விதை | 2 பலம் |
| | சங்கம் வேர்ப்பட்டை | ,, |
| | வெட்டிவேர் | ,, |
| | விலாமிச்சம்வேர் | ,, |
| | மரமஞ்சள் | ,, |
| | நன்னாரிவேர் | ,, |
| | வெண்சந்தனம் | ,, |
| (c) | கல்யாண பூசணிக்காய்ச்சாறு | 1 படி |
| | வல்லாரை சாறு | ¾ படி |
| | கையான்தகரைச்சாறு | ¼ படி |
| | பொன்னாங்கண்ணிச்சாறு | ,, |
| | பசுவின்பால் | 1½ படி |
| | செவ்விளநீர் | ,, |
| | கருப்பஞ்சாறு | ¾ படி |
| | கற்கண்டு | 2 பலம் |
| | சீனி சர்க்கரை | 24 பலம் |

***செய்முறை :*** (a) இதிலுள்ள சரக்குகளை இடித்து சூரணித்து வஸ்திரகாயம் செய்து கொள்ள வேண்டும். கோரோசனை முதலிய மூன்றையும் தனித்தனியாக அரைத்து பொடித்து முன் சூரணத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும். (b) இதிலுள்ளவைகளை நன்றாகச் சிதைத்து

எட்டுப்படி சலத்தில் போட்டு ஒரு படியாகச் சுண்ட வைத்து இறக்கி இளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டி திப்பி நீக்கின கஷாயத்துடன் (c) இதிலுள்ளவைகளை எல்லாம் ஏகமாகச் சேர்த்து அடுப்பேற்றி காய்ச்சிப் பாகுபதத்தில் மேற்கண்ட சூரணத்தை தூவி மரமத்தால் கடைந்து, ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

***பிரமாணம் :*** $2\frac{1}{2}$ - $\frac{1}{2}$, விராகன் எடை

***உபயோகம் :*** இதனை நாற்பதுநாள் உபயோகித்தால் க்ஷய ரோகங்கள், உஷ்ணரோகங்கள் தொண்டை கரகரப்பு, தொண்டை வியாதிகள், பித்த ரோகங்கள், நீரடைப்பு ஆகியவை தீரும். இரத்த விருத்தி, தேக விருத்தி, முக வசீகரம், தேக கட்டழகு, தாதுவிருத்தி, தேக காந்தி முதலியவைகளுண்டாகும். அஸ்திசூடு, அஸ்தி வெட்டை, எலும்புருக்கி, உஷ்ணமேகம் முதலியவைகள் தீர்ந்து, ஆயுள் விருத்தி உண்டாகும். இது ஆண், பெண் என்னும் இரு பாகத்தாருக்கும் ஏற்றதாகும். இதனை தொடர்ந்தேற்றியாய் உபயோகித்து வந்தால் எல்லா சுகங்களும் உண்டாகும்.

## 34. க்ஷய பாண்டு இங்கிதக் கிருதம்

| | | |
|---|---|---|
| (a) | ஆவாரம்பட்டை | ½ பலம் |
| | மேல்தோல் போக்கின ஆவாரம்விதை | ½ பலம் |
| | தூதுவளை வேர் | ½ பலம் |
| | கண்டங்கத்திரி சமூலம் | ,, |
| | கரிமுள்ளிவேர் | ,, |
| | இம்பூரால் சமூலம் | ,, |
| | சிறுகீரை சமூலம் | ,, |
| | பொன்னாங்கன்னி சமூலம் | ,, |
| | முசுமுசுக்கை இலை | ,, |
| | கல்யாணமுருங்கை இலை | ,, |
| | சங்கு இலை | ,, |
| (b) | தூதுவளையின் பழச்சாறு | ½ படி |
| | வெங்காயச்சாறு | ,, |
| | பசுவின்நெய் | 1 படி |
| (c) | இலவங்கம் | 1 விராகன் எடை |
| | மேல்தோல் சீவின சுக்கு | ,, |
| | மிளகு | ,, |
| | அரிசி திப்பிலி | ,, |
| | நற்சீரகம் | ,, |
| | குருசாணி ஓமம் | ,, |
| | ஏலரிசி | ,, |
| | சாதிக்காய் | ,, |
| | சாதிப்பத்திரி | ,, |
| | இலவங்கப்பத்திரி | ,, |
| | சிற்றரத்தை | ,, |
| | அதிமதுரம் | ,, |

| | | |
|---|---|---|
| | கோஷ்டம் | 1 விராகன் எடை |
| | விளாம்பிசின் | ,, |
| | வெள்ளை குங்கிலியம் | 1 விராகன் எடை |
| | அக்கிரகாரம் | ,, |
| | வால்மிளகு | ,, |
| (d) | கல்யாணப்பூசணிக்காய்ச்சாறு | ½ படி |
| | கரும்புச்சாறு | ,, |
| | வெள்ளரிக்காய்ச்சாறு | ,, |
| | மாதுளம்பழச்சாறு | ,, |
| | சர்க்கரை | 2 பலம் |
| (e) | திராட்சைப்பழம் | 1 பலம் |
| | பேரீச்சம்பழம் | 1 பலம் |

இவற்றை தனித்தனியாக அம்மியில் வைத்து மைபோல் அரைத்துக்கொள்ளவும்.

***செய்முறை:*** (a) இதிலுள்ளவைகளை தனித்தனியாக மைபோல் அரைத்து எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்து அதனுடன் இதிலுள்ளவைகளையும், (c)இதிலுள்ளவை (d) இதிலுள்ள சரக்குகளை இடித்து வஸ்திரகாயம் செய்து ஒன்றாக கலந்து அடுப்பேற்றி எரித்து கொஞ்சம் சூடுகாட்டி மறுநாள் எரித்து மெழுகு பதத்தில் இறக்கி ஆறவைத்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

***பிரமாணம் :*** 2½-3½, விராகன் எடை

**உபயோகம் :** ஈளை, அரோசகம், இளைப்பு, மேகவாய்வு, மேகச்சூடு, மேககாந்தல், பித்த காந்தல், க்ஷயரோகம், கபரோகம், இரைப்பு, எலும்புருக்கி ரோகம், நீரிழிவு, அஸ்திசுரம், இரணங்கள், உள்ளுருக்கி,

மேலுருக்கி, சுக்கில வாய்வு, சுரோணித வாய்வு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீர்க்கடுப்பு முதலிய மேக ரோகங்கள் தீரும். காயசித்தி, சந்தான விருத்தி முதலியவைகள் உண்டாகும்.

***பத்தியம்:*** புளி, புகை, வாயுப் பதார்த்தங்கள் ஆகியவைகளை நீக்க வேண்டும். கத்திரிபிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, பசுவின் மோர், நெய், வெள்ளாட்டு இறைச்சி, உடும்பு இறைச்சி முதலியவை ஆகும். இதன் மூலத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி சாப நிவர்த்தியும் செய்து கொள்ள வேண்டும்.

## 35. சூட்சுமக் கூழ் பாண்டுக் கிருதம்

| | | |
|---|---|---|
| (a) | கல்யாணப் பூசணிக்காய்ச்சாறு | 2 படி |
| | நீர்வள்ளிக் கிழங்குச்சாறு | ,, |
| | கரும்புச்சாறு | 1 படி |
| | பசுவின்பால் | ,, |
| | பசுவின் நெய் | ,, |
| (b) | ஏலரிசி | விராகன் எடை 6¼ பங்கு |
| | லவங்கப்பத்திரி | ,, |
| | விழாவரிசி | ,, |
| | நற்சீரகம் | ,, |
| | பெருஞ்சீரகம் | ,, |
| | ஓமம் | ,, |
| | இந்துப்பு | ,, |
| | சாதிக்காய் | ,, |
| | சதகுப்பை | ,, |
| | கூகை நீரு | ,, |
| | கோஷ்டம் | ,, |
| | அதிமதுரம் | ,, |
| | திராட்சைப்பழம் | 6¼ பங்கு |

***செய்முறை:*** (b) இதிலுள்ளவைகளை இடிக்க வேண்டிய சரக்குகளை எடுத்து தூள்செய்து மற்றவை களையும் சேர்த்து அம்மியில் வைத்து பசும்பாலை வார்த்து மைபோல் அரைத்து, (a) இதிலுள்ளவைகளை எல்லாம் ஒன்றாய் கலந்து அடுப்பேற்றி, சிறுதீயாக எரித்து கடுகு திரள் பதத்தில் இறக்கி வடிகட்டி அதில் தேவையான இரஸ்தாளி வாழைப்பழத்தை சிறு துண்டுகளாக

துண்டித்து அதில் போட்டு பிசைந்து தேவையான வரையில் சீனி சர்க்கரையும் சேர்த்து குழம்பு பதமாகப் பிசைந்து கொள்ள வேண்டும்.

***பிரமாணம் :*** 2½-4 விராகன் எடை

***உபயோகம் :*** தேக வெக்கை, ஈளை, இருமல், தேக இளைப்பு, மூத்திரக்கிரிச்சரம், நெஞ்சுவலி, அந்தரத் தாகம், மூத்திரப்பாளை, இரத்தப்பித்தம் முதலிய ரோகங்கள் தீர்ந்து தேகசுகம் உண்டாகும்.

***பத்தியம் :*** இச்சா பத்தியம்.



## 36. தாதுவிருத்தி மாக்கூழ் சூரணம்

| | |
|---|---|
| மேல்தோல் சீவின சுக்கு | 2 விராகன் எடை |
| அரிசி திப்பிலி | ,, |
| ரூமஸ்தகி | ½ விராகன் எடை |

இதனைப் பொடித்து தனியே வைத்திருந்து லேகியம் செய்து குளிர ஆறினபின் அதில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

சிற்றரத்தை
தாளிசப்பத்திரி
நெரிஞ்சு முள்ளு
சாலாமிசிரி
அமுக்கிராக்கிழங்கு
கோரைக்கிழங்கு
நிலப்பனங்கிழங்கு
சோம்பு
ஏலரிசி
பொஸ்தகாய்
நன்னாரிவேர்ப்பட்டை
துத்திவிதை
நீர்முள்ளிவிதை
லவங்கம்
பூனைக்காலி விதை
நத்தைச் சூரிவிதை
சாதிக்காய்
வெள்ளரிவிதைப் பருப்பு
பரங்கிவிதைப் பருப்பு

இவை வகைக்கு 1 விராகனெடை.

அதிமதுரம்
குருசாணி ஓமம்
சாதிப்பத்திரி
அக்கிரகாரம்
கோஷ்டம்

இவை வகைக்கு ½ விராகன் எடை

சிறுலவங்கப்பட்டை
வால்மிளகு

இவை வகைக்கு 2 விராகன் எடை

ரோசாப்பூ
விளாம்பிசின்
கருவேலம்பிசின்
பரங்கிப்பட்டை
கண்டந்திப்பிலி
பேரீச்சங்காய்

இவை வகைக்கு 2½ விராகன் எடை

| | |
|---|---|
| திராட்சைப்பழம் | ½ பலம் |
| வாதுமைப் பருப்பு | 3 பலம் |
| கசகசா | 2 பலம் |
| பசுவின் நெய் | 2 பலம் |
| சீனி சர்க்கரை | 12 பலம் |
| சுத்தி செய்த கஞ்சா | 1¼ பலம் |

இதனை மணம் வரும்படி வறுத்துக் கொள்ளவும்.

***செய்முறை :*** மேல் கண்டவைகளில் சூரணஞ்செய்ய வேண்டியவைகளை சூரணித்தும் அரைக்க வேண்டியவை களை அரைத்தும் ஒன்றாகக் கலந்து பாலில் சர்க்கரையைச் சேர்த்து காய்ச்சிப் பாகுபதத்தில் மேற்படி சூரணம் முதலியவைகளைக் கலந்து சந்தனக் கட்டையால்

கடைந்து நெய்விட்டுக் கிண்டி கிளறி தான் வழிபடும் கடவுளை தியானித்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்த வேண்டும்.

**பிரமாணம் :** ½ - ¾ விராகன் எடை

**உபயோகம் :** தேகத்திலுள்ள அநேக வியாதிகள் தீர்ந்து சீரண சக்தி அதிகப்படும். இரத்த சுத்தி, இரத்த விருத்தி, தேகதிடம் ஆகியவைகளுண்டாகும். துரித ரோகம், இந்திரிய சிராவகம், சொப்பன ஸ்கலிதம் ஆகியவைகள் தீர்ந்து, தாதுவிருத்தி உண்டாகும். இன்னும் இதனால் அநேக சுக குணங்கள் உண்டாகும்.

## 37. சிவனார் வேம்புத் தைலம்

(a) சிவன் வேம்பு
அழிஞ்சில்வேர்
மாவிலங்கப்பட்டை
பெருமருந்துப்பட்டை
பிறாயம்பட்டை
புரசம்பட்டை
கொடிவேலி வேர்ப்பட்டை
கொளிஞ்சிவேர்ப்பட்டை
செருப்படிவேர்ப்பட்டை
அவுரிவேர்
நிலவாகை வேர்
வட்டதிருப்பி வேர்
குன்றிமணி வேர்
நாகமல்லி வேர்
கொட்டைக்கரந்தை வேர்
குடசப்பாலை வேர்
வெள்ளறுகு வேர்
பேராமுட்டி வேர்
முக்காரவேளைவேர்
வெள்ளைச்சாரணைவேர்
அத்திவேர்
மாவேர்
எருக்குவேர்
சிறியாநங்கை
பிரண்டைவேர்
சீந்தில்வேர்
சவுரிவேர்
நீர்மேல் நெரிப்பு
நிலப்பனைவேர்
தகரைவேர்

மாதாளை வேர்
காட்டாமணக்குவேர்
ஆலம்வேர்
வெண்நொச்சிவேர்
இவை 1-க்கு 25 பலம்

| | | |
|---|---|---|
| (b) | சேராங்கொட்டை | 5 பலம் |
| | தான்றிக்காய் | ,, |
| | அழிஞ்சிவிதை | ,, |
| | எட்டிவிதை | ,, |
| | நீரடிமுத்து | ,, |
| | மகிழம்விதை | ,, |
| | புங்கம்விதை | ,, |
| | குன்றிமணி விதை | ,, |
| | இலுப்பை விதை | ,, |
| | தகரை விதை | ,, |
| | பேய்ப்பீர்க்கன்விதை | ,, |
| | பேய்ச்சுரை விதை | ,, |
| | பேய் கும்மட்டிவிதை | ,, |
| | குரட்டைபள விதை | ,, |
| | நாய்ப்பாகல் விதை | ,, |
| | காட்டுச் சீரகம் | ,, |
| | நேர்வாளம் | ,, |
| (c) | ஓமம் | 2 பலம் |
| | மஞ்சள் | 3 பலம் |
| | சதகுப்பை | 2 பலம் |
| | கார்போக அரிசி | 4 பலம் |
| | கருஞ்சீரகம் | 4 பலம் |
| | அரிசி திப்பிலி | 3 பலம் |
| | மிளகு | 2 பலம் |
| | வால்மிளகு | 1 பலம் |
| | வேப்பெண்ணெய் | செல்லத்தக்க அளவு |

(d) கெந்தகம் 2 பலம்

***செய்முறை :*** (a) இதிலுள்ள வேர் வகைகளையும், (b) இதிலுள்ள விதை வகைகளையும், (c) இதிலுள்ள சரக்கு வகைகளையும் தனித்தனியாக வேப்பெண்ணை தெளித்து செம்மையாக எண்ணெய்ப் பசையுண்டாக்கிப் பிறகு பாகப்படி குளித்தைலம் இறக்கி அதில் (d)யிலுள்ள கெந்தகத்தை பொடித்து தூவி பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

***பிரமாணம் :*** 1-1¼ விராகன் எடை

***அனுபானம் :*** பொரி அரிசி மாவு முதலியவை.

***தீர்க்கும் நோய்கள் :*** செய்யான், பூரான், செவ்வண்டு, நீர்வண்டு, கருவண்டு, சிறாவட்டை, செவ்வட்டை, நீரட்டை, பெருவட்டை, மண்ணுளிப்பாம்பு, மகா விரியன், செவ்விரியன், கொள்ளிவாய் விரியன், நாய் விரியன், கட்டுவிரியன், சுருட்டை, நாலுவகைப் பாம்பு, தேள், சிறுபூச்சி முதலிய விஷங்கள் எல்லா வகையும் தீரும். செங்குஷ்டம், வெண்குஷ்டம், கருங்குஷ்டம், அங்குஷ்டம், குரைநோய் கடிவிஷங்கள் ஆகியவை தீரும்.

***பத்தியம் :*** பால், நெய், உப்பு, வழுதுளங்காய், மிளகு, மஞ்சள், துவரை, ஆமணக்கெண்ணெய், வெந்நீர் முதலியவைகளால் மற்றொன்றுமாகாது.

**சுபம்.**

**சிவானந்த மூர்த்தி அனுக்கிரகமே நம**

**வைத்திய தனிப்பாடல் முற்றிற்று**

**இதை எழுதியது ஏழாயிரம் பண்ணை குப்பச்சியம்மாள் வகையறா**

**ச. சு. முத்தையா ஆசாரி கருப்பண்ண ஆசாரியார் மகன்**

**1917ஆம் ஆண்டு தை மாதம் 10ஆம் தேதி**

## தமிழ் மருத்துவ முறைகள் (வைத்திய திருப்புகழ்) அரும்பத அகராதி

1. அகறா-அக்கறா-அக்கிறாகரம்
2. அக்காரம்-அக்கிறாகாரம்
3. அசுவகெந்தி-அமுக்கிறா கிழங்கு
4. அசுவம்-அமுக்கிறா கிழங்கு-குதிரை
5. அடுக்குவேம்பு-நிலவேம்பு-சிவனார்வேம்பு
6. அதிமது-அதிமதுரம்
7. அபசிமை-சேறாங்கொட்டை
8. அப்பை-அப்பைக்கோவை-மெருகன்கிழங்கு
9. அமணம்-ஆமணம்,ஆமணக்கு, சிற்றாமணக்கு,
10. பேராமணக்கு
11. அமுராகு-அமுக்கிரா கிழங்கு
12. அரசவிதை-அரசமரவிதை
13. அரசு-அரசமரம்-மிளகு
14.அரத்தை-சிற்றரத்தை-சன்னராஸ்டம்-பேரரத்தை
15. தும்பராஸ்டம்
16. அவரை-கறிஅவரை,கோழிஅவரை,ஆவரை
17. நிலாவரை
18. அவரிலை-அவரியிலை
19. அழகு-அழக்கு-ஆழாக்கு
20. அருகு-வெள்ளருகு
21. அனல்-சித்திரமூலம்-சிறுகாஞ்சொரிவேர்
22. ஆதண்டை-ஆடுதண்டை
23. ஆத்தி-ஆற்றி-ஊனவாத்தி
24. ஆல்-ஆலமரம்
25. ஆவாரே, ஆவாரை, நிலாவரை
26. இடை-கய்யான்தகரை, கரிசலாங்கண்ணி
27. இத்து-சிவனார் வேம்பு
28. இந்து-இந்துப்பு-சந்திரன்
29. இரதசிவப்பு, இரசசெந்தூரம்

30. இரதம்-இரசம்-சாறு
31.இருவாத்தி-காட்டாத்தி,நாட்டாத்தி,இருவாக்ஷி
32. இலவம்-லவங்கம், லவங்கப்பட்டை
33. இலவமரம்-முள்ளிலவம்
34. இலவு-இலவம் என்பதைப் பார்க்க
35. இலவுபிசின்-கணங்கள், முள்ளிலவம் பிசின்
36. முருங்கைப்பிசின்-கருவேலம்பிசின்
37. ஆவாரம்பிசின்
38. இலைகளி-இலைக்கள்ளி
39. உக்காசுரை-பேய்ச்சுரை
40. உலவன்-கடுகு
41. உழகு-உழக்கு
42. உளுவரிசி-வாலுளுவையரிசி
43. உளநீர்-உள்ளிநீர், வெங்காயச்சாறு
44. எடிவிதை-எட்டிவிதை
45. எருகிலை-எருக்கிலை
46. எலியதளமணம்-எலியாமணக்கு
47. எறு-ஏறு-சங்கு-சங்குகுப்பி
48. கசா-கசகசா
49. கஞ்ச-கஞ்சா
50. கஞ்சம்-தாமரை-ஓரிதழ் தாமரை
51. கஞ்சம்-கஞ்சா
52. கடற்சாதி-கடல்நுரை
53. கடு-கடுக்காய்-கடுகு-விஷம்-நாபி
54. கடுகுரணம்-கடுகுரோகணி
55. கடுகுறோகா-கடுகு ரோகணி
56. கண-கணம்-அரிசித்திப்பிலி
57.கணங்கள்-அரிசிதிப்பிலி-யானைதிப்பிலி
58. கணசக்கை-கண்டதிப்பிலி
59. கணம்-அரிசி திப்பிலி
60. கணி-காணி, பொன்னாங்கன்னி

61. கண்டகம்-நீர்முள்ளி
62. கண்டங்கார்-கண்டங்கத்திரி
63. கண்டம்-கண்டங்கத்திரி, கற்கண்டு-சர்க்கரை
64. கண்டு-கண்டுபரங்கி-சிறுதேக்கு-கற்கண்டு
65. கண்டு-கணம்-சிறுதேக்கு
66. கந்தம்-கிழங்கு-சந்தனம்-அகருகட்டை
67. கரணை-காட்டுக்கரணை-கரிக்கரணை
68. கரிசலை-கரிசாலை-கையாந்தகரை
69. கரிசாலி-கையான்தகரை
70. கரிய போகி-கார்போகி
71. கரியர்-கருஞ்சீரகம்
72. கரியின் மிளகு-கரி மிளகு-யானைத் திப்பிலி
73. கருசிரங்கம்-கருஞ்சீரகம்
74.கருப்பட்டை-கவாப்பட்டை-லவங்கப்பட்டை
75. கலினார்-வால்மிளகு
76. கழுதிலை-கழுதைத் தும்பையிலை
77. கழசிலை-கழற்சியிலை
78. களிநீர்-கள்ளிச்சாறு
79. கரி-மிளகு
80. கரிச்சத்தி-மிளகரணை
81. கருவிலை-கருவேலமிலை-கறிவேப்பிலை
82. கற்றளை-சோற்றுக் கற்றாழை
83. கனினாரி-தேன்
84. காயப்பொடி சாதி-இஞ்சி
85. காயப்பொடி சாதித்து-இஞ்சி
86. காயம்-பெருங்காயம்-வெங்காயம்-பூண்டு
87. காரஞ்சிரம்-கருஞ்சீரகம்
88. காரடி கொம்பந்தம்-கண்டந்திப்பிலி
89. காரி-கண்டங்கத்திரி-கருஞ்சீரகம்
90. காலி-பூனைக்காலி
91. காலி சமபாலி-காலிசம்பாலை-கருநொச்சி

92. கிரம்பு-கிராம்பு-லவங்கம்
93. குகைநீர்-கூகை நீறு
94. குங்கும்-குங்குமப் பூ
95. குஞ்சரகணம்-யானைத் திப்பிலி
96. குமரிச்சாறு-சோற்றுக் கத்தாழைச்சாறு
97. குருக்கு-குறுக்கத்தி
98. குறணி-அதிமதுரம்
99. குறுவேர்-வெட்டிவேர்
100. குராசானி-குருசானி ஓமம்
101. கெந்தி-அசுவகெந்தி,அமுக்கிராக்கிழங்கு
102. கெந்தி-கெந்தகம்
103. கொண்டம்-அரிசி திப்பிலி
104. கொடி-கொடிவேலி-சித்திரமூலம்
105. கொடிக்கள்ளி-கொடிக்கள்ளி
106. கொடிக்கனி-கொடிமுந்திரி-திராட்சைப்பழம்
107. கொடிச்சித்திரம்-கொடிவேலி, சித்திரமூலம்
108. கொடிவளாதலை-கொடி வளுதுணம்
109. கொடு-கொடிவேலி
110. கொடுப்பை-பொன்னாங்காணி
111. கொம்பு-வேர்கொம்பு-சுக்கு
112. கோரக்கர் இலை-கஞ்சா
113. கொவை-கோவை
114. கோலம்-தக்கோலம்-கடுக்காய்
115. கோஸ்டா-கோஸ்டம்
116. சக்கை-பரங்கிச்சக்கை-பரங்கிப்பட்டை
117. சடைமுலி-கஞ்சா
118. சதகை-தண்ணீர் முட்டான்
119. சதம்-சதக் குப்பை
120. சதி-சத்தி-கெந்தகம்
121. சதிக்க-சாதிக்காய்

122. சந்து-சந்தனம்
123. சம்பரம்-தண்ணீர் விட்டான்
124. சம்பு-எலுமிச்சம்பழம் இரசம்
125. சயம்-சர்க்கரை
126. சவுரி-முதியாள் கூந்தல்

127. சாதி-சீந்தில்-ஆடாதொடை-சிறுசண்பகம்
128. சாதிவிந்து-சாதிக்காய், தேக்கு, பிரம்பு
129. சாளி-குருசாணி ஓமம்

130. சிக்ககம்-சீரகம்
131. சிக்கம்-சீரகம்
132. சிதை-சீதை-பொன்னாங்காணி-சிவதை
133. சித்தத்தி-காட்டாத்தி
134. சித்தில்-சீந்தில்-சிந்தில்
135. சிரியர்-சீரியர்-இரசம்
136. சிவசொக்காவனத்தவன்-சிவனார் வேம்பு
137. சிவதையுறுமடி-சிவத்தையுறுமடி-சிவனார் வேம்பு
138. சிவம்-சிவனார் வேம்பு-இரசம்
139. சிறுகிள-சிறுகிளா
140. சிறுத்தவரத்தை-சிற்றரத்தை-சண்ராஷ்டம்
141. சிறுநக-சிறுநாகப்பூ
142. சிறுநாகம் அம்பு-சிறுநாகப்பூ
143. சிறிய முத்தார் நகைப்பெண்-சிறியாநங்கை
144. சிறுநாகம்-சிறுநாகப்பூ
145. சிறுவிலை-சிறு சின்னியிலை
146. சிற்றாதனத்த நங்கை-குன்றிமணி-சிறியாநங்கை.

•••••••••

# மூலிகை விளக்கம்

## 1. அக்கரகாரம்

**தாவரவியல் பெயர் : Anacyclus Pyrethrum, Compusitae**

*மலைப்பாங்கான இடங்களில் தரையில் படர்ந்து வளரும் சிறு செடியினம். இதன் வேர் மருத்துவப் பயனுடையது. தொண்டையில் நோய்த்தொற்று, மூச்சுக் குழல் தொடர்பான நோய்கள் அகற்றும் மருந்து. ஒரு துண்டு வேரை மெதுவாக நீண்ட நேரம் மென்று விழுங்க பல்வலி, தொண்டைக்கம்மல், நீர்வேட்கை போன்றவை தீரும்.*

## 2. அதிமதுரம்

**தாவரவியல் பெயர் : Glycyrrhiza Glabra L.: Papilionoideae)**

*மாற்றடுக்கில் அமைந்த இலைகளையும், நீல நிறப் பூக்களையும் உடைய சிறு செடியினம். மருத்துவப் பயன் உடையதாகும். தண்டு உலர்ந்த நிலையில் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். சளி, இருமல் போன்றவற்றிற்குச் சிறந்த மருந்து. புண்களை ஆற்றும். சளி, எரிச்சல், குருதிப் போக்கு போன்றவற்றிற்கு சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது.*

## 3. அமுக்கிரா கிழங்கு

**தாவரவியல் பெயர் : Withania Somnifera (L.)Dun. Solanaceae**

*மாற்றடுக்கில் அமைந்த இலைகளையும், சிறு கிளை களையும் உடைய ஐந்து அடிவரை வளரக் கூடிய குறுஞ்செடி வகை இது. கிழங்கு மருத்துவப் பயனுடையது. இலையை மென்மையாய் அரைத்துப் பற்றுப்போட, அரசபிளவை, எரிகரப்பான், பாலியல் நோய்ப்புண் போன்றவை குணமாகும். 2 கிராம் உலர்ந்த கிழங்குப்*

பொடி தேனில் குழைத்து காலை, மாலை சாப்பிட்டு வர உடல் பலவீனம், காசம், பசியின்மை, மூட்டு அழற்சி, முதுமைத்தளர்ச்சி போன்றவை நீங்கும். காயை அரைத்துப் படர் தாமரையில் தடவி வர குணமாகும்.

## 4. அரசு

**தாவரவியல் பெயர் : Ficus Religiosa L.; Moraceae**

கூரிய இலைகளையுடைய பெருமரம் இது. நீர் நிலைகளுக்கருகில் வளர்க்கப்படுகிறது. இதன் கொழுந்து, பட்டை, வேர், விதை ஆகியவை மருத்துவப் பயனுடையவை. இதன் கொழுந்து வெப்பம் தணிக்கப் பயன்படுகிறது. விதை காமம் பெருக்கியாகச் செயல்படுகிறது. இதன் துளிர் இலையை அரைத்துப் பற்றுப் போட்டால் புண்கள் ஆறும். இதன் பட்டைத் தூளை நீரில் ஊற வைத்து வடிகட்டிக் கொடுக்க விக்கல், தொண்டைக்கட்டு, குரல்வளை நோய் ஆகியன தீரும். இதன் விதைத்தூள் ஆண் மலட்டை நீக்கும்.

## 5. அவரை

**தாவரவியல் பெயர் : Lablab Purpurus L.; Papilionoideae**

உணவுக்காக இது பயிரிடப்படுகிறது. கொடி வகையைச் சார்ந்தது. இதன் இலை, பிஞ்சு ஆகியவை மருத்துவப் பயனுடையவை.இதன் பிஞ்சு தாதுவெப்பு அகற்றும். அவரை இலைச் சாற்றை தயிருடன் கலந்து காலையில் உண்டு வந்தால் மூலக்கடுப்பு, எரிச்சல் ஆகியவை தீரும். இலைச்சாற்றுடன் மஞ்சள்பொடி கலந்து புண்களில் பூசிவர விரைவில் ஆறும். இலைச் சாற்றை நெற்றியில் பற்றுப்போட்டால் தலைவலி தீரும். அவரைப் பிஞ்சை உணவில் அடிக்கடி சேர்த்து வந்தால் கண் நோய்கள் தீரும்.

## 6. ஆடாதொடை (ஆடுதொடா)

**தாவரவியல் பெயர் : Adhatoda Vasica Nees**

மார்புச் சளியைப் போக்குவதில் மிகவும் பயனுள்ள மருந்தாகும். பூச்சிகளை அகற்றும், நுண்கிருமிகளை அகற்றும், வலி அகற்றும், கபம் வெளியேற்றும், மயக்க மருந்தாக பயன்படும். பொடி, சாறு, உயிர்ச்சாறு, கஷாயம் ஆல்கஹாலில் தீராத மார்புச்சளி, மூச்சுத்திணறல், இருமல், ஜலதோஷம், கக்குவான் இருமல் ஆகியவற்றிற்கு நல்ல மருந்து. கண் சிகிச்சை, இரத்த ஓட்டத்தை சீர்செய்தல் ஆகியவற்றில் பயனுள்ளது.

காய்ந்த இலைகளை சுருட்டி புகைப்பது மார்புச் சளியைப் போக்கும். வீக்கம், நரம்புவலி, கட்டிகள் மற்றும் காயங்களுக்கு இலைகளின் பொடி பற்றாகப் பயன்படுகிறது. அடர்ந்த கஷாயம் சிரங்குகளுக்கு தடவும் மருந்தாகப் பயன்படும், இலைகளின் சாறு வயிற்றுப் போக்கு, சீதபேதி, சுரப்பிக்கட்டி, மாதவிடாய் ஊக்குவியாக பயன்படுகிறது. வேர், கர்ப்பப்பைக்கு நல்ல மருந்தாகவும், கஷாயம் மூச்சுத் திணறல் நோய்க்கு மருந்தாகவும் பயன்படும். தீராத மார்பு சளி, இருமல், காசநோய் போகும்.

## 7. ஆத்தி

| | | |
|---|---|---|
| **தாவரவியல் பெயர்** | : | **Bauhonia Racemosa** |
| **குடும்பம்** | : | **Caesalpiniaceoe** |

இதன் பட்டை, இலை, பிசின் ஆகிய அனைத்தும் மருத்துவ குணமுடையவையாகும். இது தலைவலி, முறைச்சுரம், கழிச்சல் தீரும். இலை குடிநீர் மலேரியா நிவாரணியாகும்.

### 8. ஆதொண்டை

**தாவரவியல் பெயர் : Capparis; Zeylanica L.; Capparaceae**

தனியிலைகளைக் கொண்ட முட்கள் உள்ள கொடி. சிவந்த நிறப் பூக்களையும், சதைக் கனியினையும் கொண்டது. இதன் காய்களை சமைத்து உண்ணலாம். இதன் இலை, காய், வேர் ஆகியவை மருத்துவப் பயனுடையவை. நோய் நீக்கி உடல் தேறவும், பசி மிகுக்கவும், நாடி நடையை மிகுத்து உடல் வெப்பம் தரவும் மருந்தாகப் பயன்படுகிறது. இதன் இலையை நெய்யில் வதக்கித் துவையலாக்கி உணவுடன் உட்கொண்டால் சுவையின்மை, பசியின்மை நீங்கி பசியுண்டாகும்.

### 9. ஆமணக்கு

**தாவரவியல் பெயர் : Recinus Communis L.; Euphorbiaceae**

கைவடிவ மடல்களை மாற்றடுக்கில் கொண்ட வெண் பூச்சுடைய செடி. வெடிக்கக் கூடிய காய்களை உடையது. இலை, எண்ணெய் ஆகியவை மருத்துவப் பயன்பாடுடையவை. இலைகள் வீக்கம், கட்டி ஆகிய வற்றைக் கரைக்கப் பயன்படுகிறது. ஆமணக்கு நெய் மலமிளக்கும். தாது வெப்பு அகற்றும். இலையை நெய் தடவி, நெருப்பில் வாட்டி மார்பில் வைத்துக் கட்டிவர பால் சுரப்பு மிகும். கண் வலியின் போதும், கண்ணில் மண், தூசி விழுந்த போதும் ஓரிரு துளி விளக்கெண் ணெயுடன் விட வலி தீரும். வேரை அரைத்துப் பற்றுப் போட்டால் பல்வலி குணமாகும்.

### 10. ஆவாரை

**தாவரவியல் பெயர் : Cassia Auriculata L.; Caesalpinioideae**

மஞ்சள் வண்ணப் பூக்களை உடைய சிறு செடி. மெல்லிய தட்டையான காய்களை உடையது. எல்லா

இடங்களிலும் காணப்படும். இதன் பட்டை தோல் பதனிடப் பயன்படுகிறது. இதன் அனைத்துப் பகுதிகளும் மிகுந்த பயனுடையவை. சதை, நரம்பு ஆகியவற்றைச் சுருக்கும் தன்மையுடையது. விதை, காமம் பெருக்கியாகச் செயல்படும். இதன் பூவைக் குடிநீராக்கிப் பாலில் கலந்து பயன்படுத்தினால் மேகவெட்டை, தேக உட்சூடு, உடல் நாற்றம், வறட்சி, ஆயாசம் நீங்கும். உடலுக்குப் பலத்தைத் தரும். தேகம் பொன்னிறமாகும். ஆவாரம்பட்டை, கஸ்தூரி மஞ்சள், ஒரு மிளகாய், சிறிது சாம்பிராணி, நல்லெண்ணெய் காய்ச்சி தலை முழுகிவர மதுமேகம் உடையவருக்குக் காணும் தோல் வெடிப்பு, வறட்சி, எரிச்சல் குணமாகும்.

## 11. இஞ்சி

**தாவரவியல் பெயர் : Zingiber officinale Rose.; Zingiberaceae**

இது மணமுள்ள கிழங்குகளை உடைய சிறுசெடி. எல்லா இடங்களிலும் பரவலாக கிடைக்கும். இதை உலர்த்தினால் "சுக்கு" கிடைக்கும். பசித் தூண்டுதலுக்குப் பயன்படும். வயிற்றில் வெப்பத்தை மிகுவித்து வாயுவை அகற்றும். இஞ்சியை சிறு துண்டுகளாக்கி தேனில் போட்டு ஊற வைத்து நான்கு நாட்கள் கழித்து, தினமும் ஓரிரு துண்டுகள் சாப்பிட்டு வந்தால் பித்தம் தணிந்து வாழ்நாள் கூடும். முகம் பொலிவு பெறும். இஞ்சி முரப்பா சாப்பிட்டால் மந்தம், புளி ஏப்பம், மார்புச்சளி ஆகியன நீங்கும். சளி சரியாகும்.

## 12. இலவங்கப்பட்டை

**தாவரவியல் பெயர் : Cinnamomum Vera**

இதன் பட்டை மற்றும் இலைகள் நறுமணப் பொருளாகவும் மருந்தாகவும் பயன்படுகின்றன. இத்

தாவரத்திலுள்ள எளிதில் ஆவியாகும் எண்ணெய் உடலுக்கு வெப்ப உணர்வை தரும், ஜீரணத்தினை ஊக்குவிக்கும்; வலி குறைக்கும், வைரசுகளுக்கு எதிராகச் செயல்படும், மற்றும் நோய் விளைவிக்கும் கிருமிகளுக்கு எதிரானது.

### 13. இலவு

**தாவரவியல் பெயர் : Ceiba Pentandra (L.) Gaertner.; Brombacaceae**

உயர்ந்து வளரும் தன்மையுள்ள மென்மையான இலையுதிர் மரம். தொங்கும் காய்களையும், உருண்டையான விதைகளையும் உடையது. முதிர்ந்த காய்களிலிருந்து பஞ்சு கிடைக்கும். இலை, பூ, விதை, பஞ்சு, பிசின், வேர் ஆகியவை மருத்துவப் பயனுடையவை. இதன் இலைகள் குளுமை ஊட்டக் கூடியவை. பூக்கள் மலமிளக்கும் தன்மை உடையவை. இதன் விதைகள் காமம் பெருக்கும் தன்மை உடையவை. வேர் உடலை உரமாக்கும். இதன் இலையை அரைத்து நீரில் கலந்து காலையில் மட்டும் பருகிவர வெள்ளை தீரும். இலவம் பிசினைப் புண்ணில் வைத்துக் கட்டிவந்தால் அவை விரைவில் ஆறும்.

### 14. எட்டி

**தாவரவியல் பெயர் : Srychnos nux-Vomica**

வாதநோய்கள், நரம்பியல் நோய்கள் தீரும். இதன் இலைகள் நாட்பட்ட உரியும் காயங்கள் மற்றும் புண்களுக்கு பற்று போடப் பயன்படுகின்றன. இதன் வேர், பட்டை எலுமிச்சை சாறுடன் அரைக்கப்பட்டு மாத்திரைகள் தயாரிக்கப்படுகிறது. இவை காலரா நோயினைக் குணப்படுத்தும், வேரின் கசாயம் அல்லது சாறு வலுவேற்றும் மருந்தாகவும், காய்ச்சல் தீர்க்கவும்

பயன்படுகிறது. இதன் வேர் மிகவும் கசப்பானது. விட்டு விட்டு வரும் காய்ச்சல் மற்றும் விஷமுள்ள ஊர்வன வற்றின் கடிக்கு மருந்தாகும்.

விதை மருந்து நக்சுவாமிகா எனப்படுகிறது. இது பலவிதமான நோய்களை குணப்படுத்த உதவுகிறது. வயிற்றுப்போக்கு, சீதபேதி, வலிப்புநோய், காய்ச்சல், நீரிழிவு, காலரா, கால், கை வலிப்பு, மூட்டுவலி, நரம்பு மண்டல நோய்கள், நாய்க்கடி, தூக்கமின்மை, முடக்கு வாதம், ஆண்மலடு, வாந்தி ஆகியவற்றிற்கு மருந்தாய் பயன்படுகிறது.

## 15. எருக்கு

தாவரவியல் பெயர் : Calotropis Gigantea (L.) R. Br.; Asclepiadaceae

அகன்று எதிரடுக்கில் அமைந்த இலைகளையுடைய பாலுள்ள குறுஞ்செடி, செடி முழுவதும் மென்மையான வெள்ளைக் கம்பளிபோல் மூடப்பட்டிருக்கும். இலை, பட்டை, வேர், பூ, பால் ஆகியவை மருத்துவப் பயனுடையவை. இதன் இலை நஞ்சை நீக்கப் பயன் படுகிறது. இதன் இலையை அரைத்து சிறிதளவு பாம்பு போன்ற விஷக்கடிகளுக்கு உடனே கொடுக்கலாம். இதன் பால் புண் உண்டாக்கும். தேள் கடிக்கும் இது மருந்தாகப் பயன்டுகிறது. இது வயதில் சிறியவர்களுக்கு மருந்தாகக் கொடுக்கப்படுவதில்லை.

## 16. எலுமிச்சை

தாவரவியல் பெயர் : Citrus Medica L.; (Var.Limonum) Rutaceae

முள் உள்ள மரமான இது எல்லோருடைய வீடுகளிலும் வளர்க்கப்படக் கூடியது. இதன் இலை, பழம் ஆகியன மருத்துவப் பயன் உடையவை. உடல் சூடு தணிக்கவும், பசியினைத் தூண்டுவதற்கும் இது பயன்

படுகிறது. எலுமிச்சை ஊறுகாய் அனைவரும் விரும்பும் ஒன்று. இதன் இலையை மோரில் ஊறவைத்து பயன் படுத்தினால் வெட்டைச்சூடு தணியும். நகச்சுற்றுக்கு இதன் பழத்தை விரலில் செருகி வைத்துவரப் பழுத்து உடையும். பழச்சாற்றில் சீரகத்தை ஊறவைத்து பின் காய வைத்து தேவையான போது சுவைத்து வர பித்த மயக்கம், பித்த வாந்தி, நாவில் சுவையின்றி இருப்பது ஆகியவை தீரும்.

## 17. ஓரிதழ் தாமரை

தாவரவியல் பெயர் :Hybanthus Enneaspermus L.; Violaceae

மாற்றடுக்கில் அமைந்த இலைகளையும், சிவப்பு நிறமுள்ள ஒரே இதழுடைய பூக்களையும் உடைய குறுஞ்செடி. எல்லா இடங்களிலும் தானே வளரும் தன்மை உடையது. இதன் எல்லாப் பாகங்களும் மருத்துவப் பயன் உடையவை. இது தாது வெப்பு அகற்றியாகவும், சிறுநீர்ப் பெருக்கியாகவும், காமம் பெருக்கியாகவும் செயல்படும். விடிவதற்குமுன் இதன் இலையை நாள்தோறும் சிறிதளவு மென்று தின்று பின்பு பால் அருந்திவர ஒரு மண்டலத்தில் தாது இழப்பு, வெட்டைச்சூடு, நீர் எரிச்சல், சிற்றின்ப பலவீனம் ஆகியவை தீரும்.

ஓரிதழ் தாமரை இலை, கீழாநெல்லி இலை, யானை நெருஞ்சில் இலை மூன்றையும் ஒருபிடி அளவு அரைத்து 200மி.லி. எருமைத் தயிரில் 10 நாட்கள் சாப்பிட நீர்த்தாரை ரணம், வெள்ளை ஒழுக்கு ஆகியவை தீரும். (மருந்து செரித்தப்பின் காரமும், சூடும் இல்லாத உணவு சாப்பிட வேண்டும்.

## 18. கசகசா

தாவரவியல் பெயர் : Papaver Somniferum L.; Papaveraceae

சிறு செடி இனமான இது விதைக்காகவும், பாலுக்காகவும் பயிரிடப்பெறுகிறது. இதன் காயிலிருந்து வடியும் பாலே அபின் எனப்படும். இரத்தப் போக்கைக் கட்டுப்படுத்துதல், உடலுக்கு உரமூட்டுதல், திசுக்களை இறுகச் செய்தல் போன்ற மருத்துவ குணங்களை உடையது. தேங்காய்த்துவையலில் கசகசாவை சேர்த் தரைத்து உணவுடன் நெய் சேர்த்து உண்டு வந்தால் மலம் கட்டுப்படும். தாது பலம் மிகும்.

## 19. கடுக்காய்

தாவரவியல் பெயர் : Terminalia Chebula Retz,; Combretaceae

கரும்பச்சையான நீள்வட்ட இலைகளை மாற்ற டுக்கில் கொண்ட ஓர் மரம். இதன் காய்கள் பளபளப்பாக உருளை வடிவில் இருக்கும். மலைப்பகுதிகளில் வளரும். இது பித்தம் தணியச் செய்யும். மலத்தை இளக்கும். உடலுக்கு உரமாகவும் பயன்படும். வாயு, மூலம், பவுத்திரம், வீக்கம் தலைவலி ஆகியவற்றை கடுக்காய்ப் பொடியுடன் கிராம்புப் பொடி, நெய் ஆகியவற்றின் கலவை நீக்கும். இதன் பொடியைப் பற்பொடியுடன் கலந்து பல் தேய்த்து வந்தால் ஈறுகளில் காணப்படும் வலி, ஈறுகளில் இரத்தம் கசிதல் ஆகியன நீங்கும்.

## 20. கடுகு

தாவரவியல் பெயர் : Brassica Juncea (L.) Cosson.; Brassicasceae

சமையலில் தாளிப்பதற்குப் பயன்படுகிறது. வட இந்தியாவில் இது மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. சற்று

காரம் அதிகமாக உள்ளது வெண்கடுகு. இதன் விதை மருத்துவப் பயனுடையது. செரிமான வேகத்தை இது மிகுவிக்கச் செய்யும். கடுகுடன் முருங்கைப் பட்டை சேர்த்து அரைத்து பற்றுப்போட கை கால் குடைச்சல், மூட்டுவலி ஆகியன தீரும். கடுகு எண்ணெயோடு விளக்கெண்ணெய் கலந்து கற்பூரம் சேர்த்துத் தடவி வர மூட்டுவலி, மார்பு வலி தீரும்.

## 21. கடுகுரோகணி

**தாவரவியல் பெயர் : Picrorhiza Kurroa Roybex Benth**

இதன் உலர்ந்த வேர்முண்டுகளிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இது கசப்பான சத்து மருந்தாதலால் இது முறை நோய்த் தடுப்பு மருந்தாகவும் பித்த நீரை அதிகம் சுரக்க வைக்கவும் பயன்படுகிறது. இது ஜென்ஷியன் (Gentiaha Luteal) போன்று அதே குணங்களையும் கொண்டது. பசியை அதிகரித்து வயிற்றுச் சுரப்பிகளை அதிகம் சுரக்க வைக்கிறது. மகோதரத்தைக் குணப்படுத்தும் மருந்தாகவும் பயன்படுகிறது. இதன் நோய் எதிர்ப்புச் சக்தி பரிசோதனை மூலம் நிரூபிக்கப் பட்டுள்ளது.

## 22. கண்டங்கத்திரி

**தாவரவியல் பெயர் : Solanum melogena L. Var. insanum L.; Solanaceae**

முள் உடைய செடி. மாற்றடுக்கில் அமைந்த இலைகளை உடையது. நீலநிற மலர்களைக் கொண்டது. சிறுசெடியான இது தரிசு நிலங்களில் காணப்படும். இலை, பூ, காய், பழம், விதை ஆகிய அனைத்தும் மருத்துவப் பயனுடையவை. இதன் பழத்தை உலர்த்தி நெருப்பி லிட்டு வாயில் புகை பிடித்தால் பல்வலி தீரும். இது கோழை அகற்றியாகவும், சிறுநீர்ப் பெருக்கியாகவும் செயல்படும்.

## 23. கரிசலாங்கண்ணி

**தாவரவியல் பெயர் : Eclipta Prostrata (L.) L.Mant.; Asteraceae**

எதிரடுக்கில் அமைந்த வெள்ளை நிற மலர்கள் உடைய மிகக் குறுஞ்செடியினம். தரையோடு படர்ந்தும் வளர்வதுண்டு. கரிசாலை, கரிப்பான், கையான், கையாந்தகரை ஆகிய பெயர்களாலும் இது அழைக்கப் படுகிறது. ஈரமான நிலத்தில் இது வளரும். இதில் மஞ்சள் நிற மலர்களை உடைய ஓர் வகையும் உண்டு.

இது மஞ்சள் கரிசலாங்கண்ணி, பொற்றலை, பொற்றலைக் கரிப்பான், பொற்கொடி போன்ற பெயர்களாலும் வழங்கப்பெறும். இதை வீடுகளிலும் வளர்க்கின்றனர். எல்லாப் பிணிகளையும் நீக்கவல்ல மருந்து இது. பித்த நீர்ப் பெருக்கியாகவும், மலமகற்றி யாகவும் செயல்படும். கரிசாலை இலை, தும்பை இலை, கீழாநெல்லி இலை சம அளவு அரைத்துக் கொட்டைப் பாக்களவு மோரில் காலை, மாலை கொடுத்து வர மஞ்சள் காமாலை நோய் குணமாகும். வெள்ளைப்பூ கரிசலாங் கண்ணி இலையை அரைத்து அடை தட்டிக் காய வைத்து தேங்காய் எண்ணெயில் ஊற வைத்துத் தேய்த்தால் முடி கருப்பாகவும், செழித்தும் வளரும்.

## 24. கருஞ்சீரகம்

**தாவரவியல் பெயர் :Nigella Sativa**

இதன் விதைகள் மருத்துவப் பயன் கொண்டவை. கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த டயாஸ்கோரிடஸ் எனும் கிரேக்க மருத்துவ அறிஞர் இத்தாவரத்தினைப் பற்றி குறித்துள்ளார்.

தலைவலி, மூக்கு ஒழுகல், பல்வலி, குடல் பூச்சிகள் ஆகியவற்றிற்கு மருந்தாகிறது. சிறுநீர்ப் போக்கினை தூண்டவும், மாதவிடாயினை ஊக்குவிக்கவும், தாய்ப் பால் அதிகரிக்கவும் உதவுகிறது. எகிப்திய கல்லறைகளில் கருஞ்சீரகம் வைக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. மற்ற சமையல் தாவரங்கள் போன்று கருஞ்சீரகமும் ஜீரண கோளாறுகளைப் போக்கும்.

கருஞ்சீரக விதைகள் சிறுநீர்ப் போக்கு தூண்டுவி, பால் சுரப்பி ஊக்குவி, கருப்பை சுருங்குதலைத் தூண்டும், மாதவிடாய் நோய்கள் மற்றும் பிள்ளை பேற்றிற்கு பிறகு தோன்றும் காய்ச்சல் போக்கும், பொடி செய்த விதைகள் நல்லெண்ணெயில் கலந்து கட்டிகள் மீதும், தேள் கொட்டிய இடங்களில் மேல் பூச்சாகவும் பயன்படுகிறது. எளிதில் ஆவியாகும் எண்ணெய் விதையிலிருந்து கிடைக்கிறது. இது இருமல், சளி போக்க பயன்படும். குழந்தைகள் வயிற்றில் தோன்றும் பூச்சிகளை போக்கும், வயிற்றுவலி, உப்புசம், வாயு ஆகியவற்றை நீக்கும். அதிக அளவில் உட்கொண்டால் கருச்சிதைவு ஏற்படும். மாதவிடாய் போக்கினை ஊக்குவிக்கவும் குறைந்த அளவில் உட்கொள்ளப்படுகிறது.

விதைகளுக்கு பித்தத்திற்கு எதிராக செயல்படும் தன்மை உள்ளதால் வாந்தியினைத் தடுக்க பயன்படுகிறது. வறுத்த விதைகளை மஸ்லின் துணியில் கட்டி முகர்ந்தால் மூக்கு ஒழுகல் மற்றும் சளி போக்கும், விட்டுவிட்டு வரும் காய்ச்சலுக்கு வறுத்த விதைகளுடன் சம அளவு வெல்லப் பாகு கலந்து மருந்தாகிறது.

## 25. கருநொச்சி

**தாவரவியல் பெயர் : Andrographis Pahnniculata**

இதன் முழுத்தாவரமும் நோயாற்றும், சுரம் தடுக்கும், பூச்சிகளை அகற்றும், வாய் குழறுதலைத்

தடுக்கும், சீதபேதியை தடுக்கும், மார்புச்சளிக்கு பயன் படும், நீரிழிவு நோய், அஜீரணம், மேகவெட்டை நோய், ஜலதோஷம், விட்டு விட்டு ஏற்படும் சுரம், சொறி, மஞ்சள் காமாலை, ஈரல் கோளாறுகள், மூலம், வீக்கம் போன்ற நோய்களுக்கு மருந்தாகும். ஸ்வித்ராதி லேபா என்னும் ஆயுர்வேத மருந்தின் முக்கிய கூறாக உள்ளது. இலைகளும், வேரும் சரி செய்யும் திறன் உடையவை. வயிற்றுப் பூச்சிகளை அகற்றும், வேரின் அடர்ந்த கஷாயம் குடல் இளக்கி உணர்ச்சியூட்டும், உடல் அசதியைப் போக்கும்.

## 26. கருவேல்

**தாவரவியல் பெயர் : Acacia Nilotica L.; Mimosoideae**

வெண்மையான முள் உள்ள உறுதியான மரங்கள் இவை. இதன் மலர்கள் மஞ்சள் வண்ணமாக இருக்கும். காய்கள் வெண்ணிறமான பட்டை வடிவமானவை. விதைகள் வட்ட வடிவமானவை. இதன் கொழுந்து, இலை, வேர்ப்பட்டை, பிசின் ஆகியவை மருத்துவப் பயன்பாடுகள் நிறைந்தவை. இதன் பிசின் சளியை அகற்றும். காமம் பெருக்கும். பட்டை சதை நரம்புகளைச் சுருங்கச் செய்யும். இதன் இலையை அரைத்துப் புண்கள் மீது வைத்துக் கட்ட புண்கள் விரைந்து ஆறும். இதன் இலையை அரைத்து இரவு தோறும் ஆசனவாயில் வைத்துக்கட்டி வந்தால் மூலம் குணமாகும். கருவேலம் பிசினை நெய்யில் வறுத்துப் பொடித்துத் தினமும் சாப்பிட்டுவர தாது பலப்படும்.

## 27. கற்றாழை, சோற்றுக்கற்றாழை

**தாவரவியல் பெயர் : Aloe Vera**

இதன் இலைகள் மருத்துவப் பயன் கொண்டவை. இதன் இலைகளில் காணப்படும் ஜெல் (Gel) காயங்

களைக் குணப்படுத்தும்; பித்தளைநீர் சுரப்பினை ஊக்குவிக்கும், மலமிளக்கி, வீக்கங்களையுப் போக்கும் தன்மை கொண்டது.

தோலினைப் பாதுகாத்துக் குறிப்பாக முகத்தினை அழகுபடுத்தும். பழங்காலந்தொட்டே அழகு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எகிப்திய அழகி கிளியோபாட்ரா தனது கவர்ச்சிக்கு கற்றாழையே காரணம் என்று குறிப்பிட்டதாக தெரிகிறது. மேலை நாடுகளில் 1950க்கு பிறகு அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பாதிப்பு உண்டு பண்ணும் கதிர்வீச்சுப் புண்களை ஆற்றும் சக்தி கண்டறியப்பட்டுள்ளது.

தீப்புண், சிராய்ப்புப் புண்கள், சூரிய ஒளியின் தாக்கம் ஆகியவற்றிற்கு முதலுதவியாக பயன்படுகிறது. தோல் இறுக்கம், உள்ளுக்கு சாப்பிடும் பொழுது வயிற்றுப் புண் (Peptic Ulser) மற்றும் எரிச்சல் தரும் வயிற்று வலியினை குணப்படுத்தும். இது இந்திய மருத்துவத்தில் பேதி மருந்தாகவும், மாதவிடாய் திருத்தும் மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது. இலையின் சோறு தலை முடிக்கு கருப்பிடவும் (dye) வளர்ச்சியினைத் தூண்டவும் பயன்படுகிறது. இலையின் சோற்றுடன் வெல்லபாகு கலந்தால் மூலநோய்க்கு மருந்தாகிறது. நீரில் கழுவிய சோறு சிறிது சுடப்பட்ட படிகாரத்துடன் சேர்த்து வலிப்பு நோயாளிக்கு மருந்தாகிறது. ரோசா வடிசாறுடன் கலந்து கண் நோய்களுக்கு பயன்பட்டு வருகிறது. தலையில் ஏற்படும் பொடுகு நீக்கவும் பயன்படுகிறது.

## 28. காட்டாத்தி

**தாவரவியல் பெயர்** : Woodfordia Fruticasa

**பயன்படும் உறுப்புகள்** : பூக்கள்

நாவறட்சி, பித்தம், இரத்த தோஷம், விஷக்கிருமி நோய்கள், அக்கி நீங்கும்.

## 29. குங்குமப்பூ

தாவரவியல் பெயர் : Crocus Safivus

தலை நோய்கள், விரணம், கிருமிநோய், வாந்தி, சின்னம்மை போன்றவை நீங்கும்.

## 30. குருக்கத்தி, மாதவி

தாவரவியல் பெயர் : Hiptage Banghalensis

**செய்கைகள்** : குளிர்ச்சியுண்டாக்கி

**பயன்கள்** : தோல் நோய்கள், ஆஸ்துமா, அழல்,வாத நோய்கள் தீரும்.

## 31. குருசாணி / ஓமம்

தாவரவியல் பெயர் : Hyoscyamus niger

இதன் இலைகள் மற்றும் விதைகள் மருத்துவப் பயன் கொண்டவை. இலைகள் உப்புசம் நீக்கும். திசுவலிக்கு எதிரானது, நோய் கிருமிகளுக்கு எதிரானது. மலமிளக்கி, போதை தருவது, துயில் தூண்டுவி, மற்றும் கிளர்ச்சி தருவது. ஆஸ்துமா, நரம்பு நோய்கள், கக்குவான் இருமல் ஆகியவற்றைக் குணப்படுத்துகிறது.

இலைகளின் வடிசாறு வலிப்பு, ஞாபகமறதியுடன் தூக்கமின்மை, விக்கல், அடிவயிறு கோளாறுகள், நுரையீரல் நோய்கள், பால் உறுப்பு மற்றும் சிறுநீர் உறுப்பு கோளாறுகள், மன அதிர்ச்சி, நரம்பு வலி, இதயத்துடிப்பு, வலியுடன் கூடிய இருமல் ஆகியவற்றைக் குணப்படுத்தும் தன்மை கொண்டவை.

## 32. கொடிவேலி

தாவரவியல் பெயர் : Plumbago Zeylanica

வியர்வை பெருக்குதல், முறைநோய் தீர்த்தல், நாடி நடையை மிகுத்து உடல் வெப்பந்தருதல், மாதவிலக்கைத் தூண்டுதல், உடலில் பட்ட இடத்தைக் கொப்பளிக்கச் செய்தல், உமிழ்நீர் சுரப்பித்தல், தாது அழுகலைக் கட்டுப்படுத்துதல் ஆகியவையாகும்.

## 33. கோஷ்டம்

தாவரவியல் பெயர் : Saussurea lappa

இதன் உலர்ந்த வேர்கள் மருத்துவப் பண்பு கொண்டுள்ளன. இம்மருந்து சீழெதிரியாகவும், நச்சு நீக்கியாகவும் பயன்படுகிறது. இது மூச்சுக்குழல் அழற்சி, காசநோய், வயிற்று உப்புசம் மற்றும் சில இதய நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகின்றது. சிறுநீர்ப் போக்கிற்கு உதவுகிறது. தானாக இயங்கும் தசைகளைத் தளர்த்துவதன் மூலம் சளி மற்றும் மூச்சுக்குழல் அழற்சி நோய்களுக்கு இது பயன்படுத்தப்படுகிறது. ஆனாலும் இது தற்காலிக மானதே. இம்மருந்து தோல் வியாதிகளுக்கும், வாதத்திற்கும் பயனுள்ளது எனக் குறிப்பிடப்படுகிறது.

## 34. சதக்குப்பை

தாவரவியல் பெயர்: Peucdanum Grande Clarke

இதன் இலை சோகிக்கீரை என்ற பெயரில் கீரைக் கடைகளில் கிடைக்கும். இலைகள் இசிவகற்றும். இலை விதை ஆகியவை மாதவிலக்குத் தூண்டுதல், சிறுநீர்ப் பெருக்கல், வீக்கம் கரைத்தல், வயிற்று வாய்வு அகற்றுதல்,

செரிமானம் மிகுத்தல், உடல் சூடு மிகுத்தல் ஆகிய மருத்துவப் பண்புகளையுடையவை.

2 கிராம் சோகிக்கீரைப் பொடியைச் சிறிது சர்க்கரை சேர்த்து நாள்தோறும் இருவேளை சாப்பிட்டுவர, சளி, தலைவலி, காதுவலி, பசியின்மை, பீனிசம், மூலம் ஆகியவை தீரும்.

இலையை விளக்கெண்ணெயில் வதக்கிக் கட்ட கட்டிகள் பழுத்து உடைந்து விடும்.

ஒருகிராம் சதகுப்பைச் சூரணம் சர்க்கரை கலந்து சாப்பிட்டு வர பசியின்மைப் போக்கும், வாத நோயைக் கட்டுப்படுத்தும், இரைப்பை, நுரையீரல் ஆகியவற்றில் உள்ள மாசுகளை அகற்றும்.

சதகுப்பை, கருஞ்சீரகம், மரமஞ்சள் இவற்றைச் சமனெடையாகப் பொடித்துச் சமன் அளவு பனை வெல்லம் சேர்த்தரைத்து 5 கிராம் காலை, மாலை சாப்பிட்டுச் சற்று நேரத்தில் சோம்புக் குடிநீர் கொடுத்து வர உதிரச்சிக்கல் நீங்கிக் கருப்பை பலப்படும்.

## 35. சந்தனம்

**தாவரவியல் பெயர் : Santalum album L.;Santalaceae**

மாற்றடுக்கில் அமைந்த இலைகளை உடையது இம்மரம். இதன் கட்டை நறுமணம் உடையது. இதில் 3வகைகள் உள்ளன. அவை வெள்ளை, மஞ்சள், சிவப்பு, இவற்றுள் சிவப்பு நிறச் சந்தனமே சிறப்பானது. மலைப் பகுதிகளில் தானே வளரும் தன்மை உடையது. இதை சிறு துண்டுகளாக நீரில் ஊற வைத்து மையாய் அரைத்து பாலில் சிறிது உட்கொண்டு வந்தால் பிரமேகம் தீரும்.

சந்தன விழுதைச் சிறிதளவு குடித்து வந்தால் மதுமேகம் தீரும். இதன் கட்டையை எலுமிச்சைச் சாற்றோடு அரைத்து அதைத் தடவினால் முகப்பரு, சொறி, படர்தாமரை தீரும்.

### 36. சாதிக்காய்

தாவரவியல் பெயர் : Myristica Fragrans, Myristicaceae

மலைப்பகுதிகளில் விளையும் ஒரு மணப்பொருள். காமம் மிகுவிக்கச் செய்யும் இயல்புடையது. மயக்கம் தருவது. உடலை உரமாக்கும் பண்பை உடையது. சிறிய அளவில் உண்டுவந்தால் சீரண சக்தி மிகுந்து உடல் சுறு சுறுப்படையும். அதிக அளவில் உண்டால் மயக்கம் ஏற்படும். சாதிக்காயைப் பொடி செய்து அளவாகப் பாலில் கலந்து தினமும் சாப்பிட்டுவர வயிற்றுப்போக்கு தீரும். விந்து இறுகும்.

### 37. சிவனார் வேம்பு

தாவரவியல் பெயர் : Indigofera aspalathoides Vahl.; Papilionoideae

மிகவும் சிறிய முட்டை வடிவ இலைகளையும், சிவப்பு நிறப்பூக்களையும், கொத்தான காய்களையும் சிவப்பு நிறத் தண்டினையும் உடைய சிறிய செடி, செம்மண் நிலத்தில் இது வளரும். "அன்றெரித்தான் பூண்டு" எனவும் இதை அழைப்பர். இது முழுவதும் மருத்துவப்பயன் உடையது. தாது எரிச்சல் தணித்தல், வீக்கம், கட்டிகளைக் கரைத்தல், நஞ்சு முறித்தல் போன்ற பண்புகளை உடையது. இதன் இலையைப் பறித்து அரைத்து கட்டிகள் மீது பற்றுப் போட்டால் கட்டி உடைந்துவிடும்.

## 38. சிற்றரத்தை

தாவரவியல் பெயர் : Alpinia Calcarata; Zingiberaceae

இஞ்சி இனத்தைச் சேர்ந்த கிழங்கை உடைய சிறு செடியினம். கிழங்குக்காக இது பயிரிடப்படுகிறது. பெருங்கிழங்கை உடைய பேரரத்தை என்ற வகையும் உண்டு. மிகுந்த மருத்துவப் பயன்பாடு உடையது. கோழை அகற்றவும், பசியினைத் தூண்டவும் மருந்தாகப் பயன்படுகிறது. இதனைப் பொடியாக்கி சிறிது சர்க்கரையுடன் காலை, மாலை சாப்பிட்டுவர சுரம், சளி, ஈளை, இருமல், தொண்டைப்புண், நீர்க்கோவை ஆகியன தீரும்.

## 39. சீந்தில்

தாவரவியல் பெயர் : Tinospora Cordifolia Miers.;Menis Permaceae

இதய வடிவ இலைகளையும், தக்கையான சாறுள்ள தண்டுகளையும் உடைய கொடி வகையைச் சார்ந்தது. காடுகளில் பரவி வளரும் தன்மை உடையது. இதன் வேறு பெயர்கள் அமிர்தவல்லி, சோமவல்லி, சாகாமூலி, சஞ்சீவி, ஆகாசவல்லி ஆகியன. இக்கொடியை நறுக்கி நன்கு இடித்து நல்ல நீரில் கரைத்து வடிகட்டி சில மணி நேரம் வைத்திருந்து நீரை வடிக்க வேண்டும். சிறிது நேரம் கழித்துப் பார்த்தால் அடியில் வெண்ணிறமான மாவு இருக்கும். இதுவே சீந்தில் சர்க்கரை எனப்படும். இந்த சீந்தில் சர்க்கரையானது நீரிழிவு, காமாலை, வீக்கம், கபம், சளி, வாந்தி போன்றவற்றிற்கு மருந்தாகப் பயன்படுகிறது. முதிர்ந்த கொடிகளை உலர்த்திப் பொடித்துப் பாலுடன் சாப்பிட்டுவர கை, கால் அசதி, மிகுந்த தாகம் ஆகியன தீரும்.

## 40. சீரகம்

தாவரவியல் பெயர் : Cuminum Cyminum L; Umbelliferae

சீரகம் வயிற்று வாயு அகற்றல், செரிமானம் மிகுத்தல், உடல் சூடு மிகுத்தல், சிறுநீர்ப்பெருக்கல், திசுக்களை இறுகச்செய்தல், மாதவிடாய்த் தூண்டுதல் ஆகிய மருத்துவப் பண்புகளை உடையது.

சீரகத்தை உலர்த்திப்பொடித்து, 1 கிராம் அளவாகத் தேன் அல்லது பாலில் காலை, மாலை சாப்பிட்டுவரப் பித்தம், வாயு, உதிரச்சிக்கல், சீதக்கழிச்சல், செரியாக் கழிச்சல் ஆகியவை தீரும்.

தேவையான அளவு தூய்மைப்படுத்தப்பட்ட சீரகத்தை எலுமிச்சைச்சாறு, இஞ்சிச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு ஆகியவை ஒவ்வொன்றிலும் மும்மூன்று தடவை ஊறவைத்து உலர்த்திப்பொடித்து அரை தேக்கரண்டி காலை, மாலை சாப்பிட்டுவர செரியாமை, சுவை யின்மை, பித்த மயக்கம், கண்ணெரிச்சல், வயிற்றுவலி, மூலக்கொதிப்பு, சீதக்கழிச்சல், உடல் வெப்பம் ஆகியவை தீரும்.

சீரகத்தை அரைத்துப் பற்றுப்போட மார்பக வீக்கம் விரைவீக்கம் ஆகியவை குறையும். எரிச்சல் வலியுள்ள இடங்களில் தடவ அவை தீரும்.

## 41. தண்ணீர்விட்டான் கிழங்கு, சதாவேரி, நீலிசெடி, அம்மைக்கொடி

தாவரவியல் பெயர்: Asparagus Racemosus wild.

எகிப்திய கல்லறைச் சித்திரங்களின் அடிப்படையில் இத்தாவரம் கி. மு. 4000லிருந்து பயிரிடப்பட்டு வருகிறது

என்பது தெரியவந்துள்ளது. கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க மருத்துவர் டயாஸ்கொரிடஸ் இதன் கசாயத்தின் மருத்துவப்பயன் பற்றி குறிப்பிட்டுள்ளார். சிறுநீர்ப் போக்கினைச் சீர்படுத்தவும், சிறுநீரக கோளாறுகள், மஞ்சள் காமாலை மற்றும் தொடை நரம்பு வலி போக்கவும் உதவுகிறது.

இத்தாவரம் சிறந்த சிறுநீர்ப்போக்கு தூண்டுவி, பலவிதமான சிறுநீர்க்கோளாறுகள் மற்றும் சிறுநீர்ப்பை குறைபாடுகளை குணப்படுத்த உதவுகிறது. மூட்டுகளில் சேரும் கழிவுப்பொருள்களைச் சிறுநீர் மூலம் வெளியேற்றி கீல் வாதத்தினைத் தீர்க்கும். குடல்வலி, வயிற்றுப் போக்கு மற்றும் பசியின்மை போன்றவற்றை போக்கவும் பயன்டுகிறது.

இதன் முக்கிய பயன்பாடு தைலங்கள் தயாரித்தலில் உள்ளதாகத் தெரிகிறது. இவை மூட்டுவலி, கழுத்துச் சுளுக்கு, நரம்பு மண்டல நோய்கள் தீர்க்கப் பயன்படுத்தப் படுகின்றன.

## 42. தாமரை

**தாவரவியல் பெயர் : Nelumbo Nucifera Syn. N.Speciosum**

தாமரையின் கிழங்கு, தண்டு, மலர் ஆகியவை "பத்மினி" எனப்படும் தாமரையின் சூலகம் "கர்ணீகரம்" எனப்படும். தாமரை மிகுந்துள்ள தடாகம் "புஷ்பகரம்" எனப்படும். தாமரையில் பத்மினியும், கர்ணீகரமும் மருந்து, புஷ்கரநீர் மரங்களுக்குரிய ஊட்ட நீராக சுரபாலரின் விருட்சாயுர்வேதம் கூறுகிறது. பூந்தோட்டம், கனித்தோட்டம் அமைப்பவர்கள் குளம் வெட்டி அதில் தாமரைகளை வளர்க்க வேண்டும் என்றும் விருட்சாயுர் வேதம் கூறுகிறது.

தாமரை விதைகளுக்கு வெளிநாடுகளில் தேவை உள்ளது. இது பற்றிய மருத்துவக் குறிப்பு சிந்திக்க வைக்கிறது. தாமரை விதை மனிதனுடைய உடல் இச்சையைக் கட்டுப்படுத்தும் உணவு என்று ரிஷிகள் போற்றி வளர்த்தனராம். தாமரை விதைகள் இச்சையைத் தவிர்த்து விந்துவை குண்டலினி சக்தியாக மாற்றுகிறது.

தாமரையின் சூலக பாகங்களை (Pisbils) அரைத்துச் சற்று மிளகும் சேர்த்து துவையல் செய்து பயன்படுத்த நல்ல பாம்பு, தேள்கடி விஷத்தை இறக்கும் என்பது ஒரு நம்பிக்கை. தாமரையின் சூலகத்தை விழுதாக அரைத்துக் கூடவே தேன், வெண்ணெய், சர்க்கரை கலந்து கொடுத்தால் ஏத்த மூலம் நிற்கும்.

தாமரை மலரில் உள்ள மது கண் நோய்க்கு மருந்து என்பதாலேயே தாமரைக்கு "அரவிந்தம்" என்றும் பெயர் உள்ளது. தாமரைக் கிழங்கின் சாரத்துடன் நல்லெண் ணெய் விட்டுக் காய்ச்சிய தாமரைத் தைலம் தலைவலிக்கு மருந்து, கண்பார்வை துல்லியமாகும். சுர வேகத்தைத் தணிக்க நோயாளியை தாமரை இலைகளைப் பரப்பி அதில் சயனிக்கச் சொல்லுவது பழங்குடி மரபு, தாமரை இலையைச் சந்தனத்துடன் கலந்து துவையலாக்கித் தலையில் பற்றுப் போட்டாலும் சுரம் குறையும்.

## 43. நிலவேம்பு

**தாவரவியல் பெயர் : Andrographis Paniculata Nees: Acanthaceae**

மிகவும் கசப்புச் சுவையுடைய நீண்ட இலை களையும், நாற்கோண வடிவில் அமைந்த தண்டுகளையும் உடைய சிறு செடி. இது முழுவதும் மருத்துவப் பயனுடையது. காய்ச்சல் அகற்றுதல், பசியுண்டாக்குதல், தாது பலப்படுத்துதல் போன்ற பண்புகளை உடையது.

நிலவேம்பு, கண்டங்கத்திரி வேர் வகைக்குக் கைப் பிடியளவு, சுக்கு 10 கிராம் சேர்த்து அரை லிட்டர் நீரில் போட்டு 200 மில்லியாகக் காய்ச்சி நாளைக்கு 3 முறை குடிக்க மலேரியா குணமாகும்.

## 44. நிலாவரை

**தாவரவியல் பெயர் : Cassia Obtusa W & A.; Caesalpinioideae**

ஆவாரை போன்ற வெளிறிய இலைகளையும், வெளிறிய மஞ்சள் நிறப் பூக்களையும் உடைய தரையோடு படர்ந்து வளரும் சிறு செடியினம். இதன் இலை மருத்துவப் பயனுடையது. பித்த நீர், வியர்வை ஆகிய வற்றை மிகுக்கவும், மலமிளக்கியாகவும் பயன்படும். இதன் இலையுடன் மருதோன்றி இலை கூட்டி அரைத்துத் தடவ செம்பட்டை முடி கறுக்கும். இதன் இலையைத் துவையலாக அரைத்து உண்டுவர மலச்சிக்கல் தீரும்.

## 45. நீர்முள்ளி

**தாவரவியல் பெயர் : Hygrophila auriculata (Schum) Heine.; Acanthaceae**

குறுகலான ஈட்டி வடிவ இலைகளை உடைய சிறு செடி இது. இதன் மலர்கள் கருஞ்சிவப்பு நிறமுடையவை. நீர்வளம் நிறைந்த இடங்களில் தானே வளரும். முழுவதும் மருத்துவப் பயன்பாடுகள் நிறைந்தது. இதன் விதை காமம் பெருக்கியாகச் செயல்படுகிறது. இதன் வேரை கொதிநீரில் போட்டு 24 மணி நேரம் ஊறவைத்து 2 மணிக்கு ஒருமுறை கொடுத்து வந்தால் நீர்க்கோவை, மகோதரம் போன்ற நோய்கள் தீரும். விதையைப் பொடித்து பாலில் கலந்து சாப்பிட்டுவர மேகம், வயிற்றுப்போக்கு, நீர்க்கோவை ஆகியன தீரும். இரத்தம் சுத்தியடையும்.

## 46. நொச்சி

**தாவரவியல் பெயர் : Vitex Negundo L.; Verbenaceae**

மூன்று அல்லது ஐந்து கூட்டிலைகளை எதிரடுக்கில் பெற்ற சிறுமரம் இது. எல்லா இடங்களிலும் இம்மரம் வளரும். இலைகள், பட்டை ஆகியவை கறுப்பு நிறமாய் அமைந்தது கருநொச்சியாகும். எங்கும் இயல்பாய் கிடைக்கக்கூடியது வெண்ணொச்சியாகும். இதன் இலை வேதனை தணித்தல், சிறுநீர் பெருக்குதல், மாதவிலக்குத் தூண்டுதல், நுண்புழு கொல்லுதல் போன்ற மருத்துவ குணங்களை உடையது.

## 26.பெருங்காயம்

**தாவரவியல் பெயர் : Ferula asafoetida L.; Umbelliferae**

மலைப்பாங்கான இடங்களில் இச்செடி உயர்ந்து வளரும் தன்மை உடையது. அதன் அடியிலிருந்து எடுக்கப்படும் பிசின் பெருங்காயம் எனப்படும். அன்றாடம் சமையலுக்குப் பயன்படுகிறது. இது வயிற்று வாய்வை அகற்றும். செரிமானத்தைத் தூண்டும். சிறுநீரைப் பெருக்கும். மாதவிலக்குத் தூண்டும். பெருங்காயத்தை நல்லெண்ணெயில் காய்ச்சி வடித்து ஓரிரு துளிகள் காதில் விட்டுவரக் காதுவலி தீரும்.

## 48. பேரரத்தை

**தாவரவியல் பெயர் : Alpinia Galanga (L) willd**

இச்செடியின் உலர்ந்த வேர் முண்டுகள் கீழ் வாதத்திற்கும், சிறப்பாக, குழந்தைகளுக்கு ஏற்படும் சுவாசக் கோளாறுகளுக்கும், மூக்கடைப்பை நீக்கவும் பயன்படுகின்றன. இம்மருந்து வயிற்றுக் கோளாறு

களுக்குப் பயன்படுவதுடன், சத்து மருந்தாகவும் துர் நாற்றம் நீக்கியாகவும் தொற்று நோய்த்தடுப்பு மருந்தாகவும் பயன்படுகிறது. இது இஞ்சியைப் போன்று கிளர்ச்சியூட்டும் நறுமணப் பொருளாகும்.

### 49. பொன்னாங்கண்ணி

தாவரவியல் பெயர் : Alternanthera Sessilis (L.), R. Br. ex Dc.; Amaranthaceae

நீண்ட சிறு இலைகளைக் கொண்டு தரையோடு படர்ந்து வளரும் சிறு செடியாகும் இது. வெந்நிறப் பூக்களை உடையது. ஈரமான இடங்களில் தானே வளரும். முழுமையாக மருத்துவப் பயன்பாடுடையது. இது பசியைத் தூண்டப் பயன்படுகிறது. மலமிளக்கியாகவும் பயன்படுகிறது. இதன் இலையை அதிகாலையில் மென்று தின்றால் உடல் குளிர்ச்சியுறும். கண் சம்பந்தமான நோய்கள் தீரும். பார்வை தெளிவாகும். இலைகளைக் கீரையாகப் பயன்படுத்தி சமைத்து உண்டுவந்தால் உடல் அழகு பெறும்.

### 50. மிளகரணை

தாவரவியல் பெயர் : Toddalia asiatica (L.) Lamk.; Rutaceae

சிறிய காம்பற்ற, வளைந்த முட்களை உடைய செடி. இதன் இலைகள் கசப்புச் சுவையுள்ளவை. சிறு காடுகளில் வளரும். இதன் இலை, காய், வேர்ப்பட்டை ஆகியவை மருத்துவப் பயனுடையவை. இது பசியை மிகுவிக்கச் செய்யும். நோயை நீக்கும். இதன் காயையும், வேர்ப் பட்டையையும் இடித்து நல்லெண்ணெயில் காய்ச்சி வடித்துத் தேய்த்து வந்தால் பிடிப்பு, வீக்கம், வலி ஆகியவை குணமாகும்.

## 51. மிளகு

**தாவரவியல் பெயர் : Pipernigrum L.; Piperaceae**

கூர்மையான முனைகளை உடைய அழுத்தமான இலையினையும், உருண்டை வடிவப் பழக் கொத்தினையும் உடைய ஏறு கொடி. இதன் பழம், கொடி ஆகியவை மருத்துவப் பயனுடையவை. இது வயிற்று வாயுவை அகற்றும். செரிமானத்தை மிகுவிக்கச் செய்யும். மிளகைப் புளித்த மோரில் ஊறவைத்து உலர்த்தி வறுத்துப் பொடி செய்து தேனில் குழைத்து தினமும் உண்டுவர இருமல், செரியாமை, மிகு ஏப்பம் ஆகியவை நீங்கிப் பசி மிகும். மிளகைப் பொடித்து அதனுடன் வெல்லம் கலந்து தினமும் உண்டுவர தலைப்பாரம், தலைவலி தீரும்.

## 52. முதியார் கூந்தல்

**தாவரவியல் பெயர் : Merremia tridentata (L) Hallier; Convolvulaceae**

தமிழகமெங்கும் தரிசுகளில் தானே வளரும் முதியார் கூந்தல் சவுரிக்கொடி, குதிரை வாலி, அம்மையார் கூந்தல் ஆகிய பெயர்களாலும் குறிப்பிடப்பெறுகிறது. கொடி முழுமையும் மருத்துவப் பயனுடையது.

முதியார் கூந்தல், மாம்பட்டை, அதிவிடையம், சுக்கு, கோரைக்கிழங்கு வகைக்கு 10 கிராம் சேர்த்து இடித்து 1 லிட்டர் நீரில் 125 மி.லி. ஆகக் காய்ச்சி வடிகட்டி 3 பங்காக்கி 5 கிராம் இலவம்பிசின் சூரணத்துடன் தினம் 3 வேளை கொடுத்து வர வயிற்றுப் போக்குடன் கூடிய காய்ச்சல் தீரும்.

2 கிலோ சவுரிக் கொடியை இடித்து 4 லிட்டர் நீரில் இட்டு அரை லிட்டராக வற்றக் காய்ச்சி வடிகட்டி நல்லெண்ணெய் 1 லிட்டரில் கலந்து மர மஞ்சள்,

கருஞ்சீரகம், அதிவிடயம் வகைக்கு 10 கிராம் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி (சவுரித்தைலம்) வடித்து உடல் முழுதும் தடவிக் குளித்துவரத் தொழுநோய், வாதக்கரப்பான், கழலை, கண்ட வீக்கம் ஆகியவை தீரும்.

## 53. முருங்கை

**தாவரவியல் பெயர் : Moringa Oleifera Lam.. Moringaceae**

மென்மையான இலைகளையும், வெண்ணிற மலர் களையும், நீண்ட காய்களையும், மென்மையான கட்டையையும் கொண்ட மரம். இலை, பூ. காய் ஆகியவை சமையலுக்குப் பயன்படுகிறது. வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்படுகிறது. இலை, ஈர்க்கு, பூ, பிசின், பட்டை ஆகிய அனைத்தும் மருத்துவப் பயன் பாடுடையவை. இதன் பூ காமம் பெருக்கும். பிஞ்சு தாது எரிச்சலைப்போக்கும். காய் காமம் மிகுவிக்கும். இலைச்சாறு மலமிளக்கும். இதன் கீரையை உணவாகக் கொள்ளக் கபம், பித்த மயக்கம், கண் நோய் ஆகியன தீரும். இலையைப் பொரியலாகச் சாப்பிட்டு வந்தால் வீரியம் உண்டாகும். காயை அளவுடன் சாப்பிட்டால் மார்புச் சளி தீரும்.

## 54. வெங்காயம்

**தாவரவியல் பெயர் : Allium Cepa L,; Amaryllidaceae**

குமிழ் போன்ற கிழங்கினை உடைய செடி. வெங்காயம் சமையலுக்கு அதிகமாகப் பயன்படுகிறது. சிறு வெங்காயம், பெருவெங்காயம் என்ற இரு வகைகள் உள்ளன. அரிதாகக் கிடைக்கும் வெள்ளை வெங்காயம் மருத்துவப் பயன் மிக்கது. இது குளிர்ச்சியை உண்டாக்கும். சிறுநீரைப் பெருக்கும். பச்சையாய் மென்று தின்றால் நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல் தீரும். இதை வதக்கிக் கட்டினால் வெளி மூலம் தீரும்.

## 55. வெட்டிவேர் / குருவேர்

தாவரவியல் பெயர் : Vetiveria Zizanoidas Nash Poaceae

வேரின் பொடி குளிர்ச்சி தருவது, சிறுநீர்ப் போக்கு தூண்டுவது, செயல் தூண்டுவது, செயல் தூண்டுவி, வலுவேற்றி, காய்ச்சல், வயிற்று எரிச்சல் ஆகியவற்றில் சுகமளிக்கும் பானம். வெப்பம் தணிக்க பசையாக மேலே பூசப்படுகிறது. காலராவில் வாந்தி நிறுத்த உதவுகிறது.

## 56. வெள்ளருகு

தாவரவியல் பெயர் : Enicostema Axillare (Lam.) A. Raynal.;Gentianaceae)

வெளிறிய இலைகளை மாற்றடுக்கில் கொண்ட வெண்மையான பூக்களைக் கொண்ட சிறு செடி. இது கசப்புச் சுவையுடையது. கரிசல் நிலத்தில் வளரும் இயல்புடையது. இது முழுவதும் மருத்துவப் பயனுடையது. நோய்கள் நீங்கி உடல் தேறவும், பசி மிகுக்கவும், தாது பலம் பெறவும் இது பயன்படுகிறது. மாதவிடாய்க் கோளாறுகளை நீக்கவும் பயன்படுகிறது.


0 5 8 3